417

*Approved by the Director of Public Instruction, Madras.*

# A NEW TAMIL READER

*For Upper Forms in Secondary Schools.*

**T. S. L. C Public Examination, 1922.**


BY

N. R. SUBRAMANIA SARMAN

*Head Tamil Pandit,*

American Mission High School, Pasumalai.


REGISTRAR OF BOOKS 25 JAN 1921

THIRD EDITION.


E. M. GOPALAKRISHNA KONE,

BOOK-SELLER, MADURA.

1920. Price Annas 10


TB
O31,1 N20
170050.

# புதியவாசகபுஸ்தகம்.

உயர்தர கலாசாலை வகுப்புகட்குரியது.

மதுரை - பசுமலை
அமெரிக்கன் மிஷன் உயர்தர கலாசாலைத்
தலைமைத் தமிழ்ப் பண்டிதர்
தெ. ரா. சுப்பிரமணிய சர்மா
எழுதியது.

---

[துரைத்தனத்தார் அங்கீகரித்தது.]

---

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,
புக்ஷாப், புதுமண்டபம், மதுரை.

---

[காப்பிரைட் ரிஸர்வ்ட்.] 1920. [விலை அணா 10.

PAGES 1-48 PRINTED IN THE
MANONMANI VILAS PRESS AND THE REMAINING BOOK
IN THE EXCELSIOR PRESS, MADURA.

# பொருள் அடக்கம்—Contents.

[*] இவ் அடையாளம் இடப் பெற்றவை. T. S. L. C. 1922-வது ஷுத்த எலிமெண்டரி பரீக்ஷைக்குப் பாடங்களாகக் குறிக்கப் பெற்றன.

## செய்யுட் பாகம்—Poetry.


| பாடம் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| * I. | நளவெண்பா - சுயம்வர காண்டம் - Nalavenba Svayamvara kandam ... ... | 1. |
| * II. | ஆசாரக்கோவை - Achara Kovai ... | 8. |
| III. | மானிடரின் ஏழு பருவம்-The seven ages of man | 9. |
| IV. | தனிப்பாடல்கள் - Occasional verses: ... | |
| | காளமேகப்புலவர் ... ... ... | 11. |
| | திருவள்ளுவர் ... ... ... | 12. |
| | கம்பர் ... ... ... | 13. |
| | இராமச்சந்திரக் கவிராயர் ... ... | ,, |
| * V. | குமரேச சதகம் - Kumaresa Sathakam | 14. |
| VI. | அல்லின் பிரபுவின் மகள்-Lord Ullin's daughter | 16. |
| VII. | சிலப்பதிகாரம் அறவுரை - Silappadikaram Advice ... ... ... | 18. |
| *VIII. | திருக்குறள் - Thirukural ... ... | 19. |
| IX. | திருவள்ளுவமாலை - Thiruvalluvamalai | 20. |
| X. | நீதிநெறிவிளக்கம் - Nithinerivilakkam | 21. |
| * XI. | அறநெறிச்சாரம் - Aranericharam ... | 23. |
| *XII. | அரிச்சந்திர புராணம் - Harichandrapuranam | 24. |
| *XIII. | பெருமாள் திருமொழி-வித்துவக்கோட்டம்மான் விஷயம் - Perumal Thirumoli ... | 31. |
| * XIV. | மகாபாரதம் - கன்ன பருவம் - ஒரு பகுதி Maha-Bharatam Karnaparvam - A portion | 33. |
| * XV. | நன்னூல் பொதுப்பாயிரம்-Nannul Pothupairam | 36. |


## வசன பாகம்—Prose.


| | | |
|---|---|---|
| * I. | குமணன் - Kumanan ... ... (நெ. ரா. சுப்பிரமணிய சர்மா) | 37. |

* II. அரசன் செய்ந்நன்றி - The duty of and towards the king ... ... ... 56.
(அஷ்டாவதானம் வீராசாமி செட்டியார்)

*III. ஆத்திசூடி நீதிக்கதைகள் - ஒரு பகுதி - Authichoodi Moral Stories—A portion 58.
(அம்பா சமுத்திரம் R. ஹரிஹர ஐயர்.)

* VII. பெண் கல்வி - Female Education ... 65.
(நெ. ரா. சுப்பிரமணிய சர்மா)

*VIII. பஞ்சதந்திரக் கதைகள் - Stories from Panchathanthiram:

1. மோசத்தால் வரும் நாசம் ... 68
2. 'வழக்கமில்லாதவனை நம்பலாகாது' ... 71
3. 'பெரியாரைத் துணைக்கொள்' ... 73
4. ஒரு நரியின் தந்திரம் ... ... 76
5. பஞ்சத்திற் கிருந்துபிழை ... ... 77
6. நண்ணிய கருமம் எண்ணித் துணி ... 78
7. 'தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை' ... 79

(வித்துவான் தாண்டவராய முதலியார்)

* IX குறுமுனிவரின் பெருமுனிவு - The violent rage of Agastiya ... ... ... 80
(நச்சினார்க்கினியர்)

* XI. வேனிஸ் வர்த்தகன் -The Merchant of Venice 81
(நெ. ரா. சுப்பிரமணிய சர்மா)

# புதிய வாசகபுஸ்தகம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
25 JAN 1921
MADRAS.

## செய்யுட் பாகம்.

புகழேந்திப் புலவர் இயற்றிய

## 1. நள வெண்பா.

### திருமால் துதி.

ஆதித் தனிக்கோலம் ஆனான், அடியவற்காச்
சோதித் திருத்தூணிற் றோன்றினான்,—வேதத்தின்
முன்னின்றான், வேழம் 'முதலே!' என அழைப்ப,
என்னென்றான்' எங்கட் கிறை. 1

### சிவபிரான் துதி.

கலாப மயிலிருந்த பாகத்தார், கங்கை
உலாவு சடைமேல் உறையும்—நிலாவை
வழியவார்த் தாலன்ன மாநீற்றார், நாகம்
கழியஆர்த் தார்,நமக்கோர் காப்பு. 2

### சுயம்வர காண்டம்.

காமர் கயல்புரளக், காவி முகைநெகிழத்,
தாமரையின் செந்தேன் தளைஅவிழப்,—பூமடந்தை
தன்னாட்டம் போலும் தகைமைத்தே சாகரஞ்சூழ்
நன்னாட்டின் முன்னாட்டு நாடு. 3

நின்றுபுயல் வானம் பொழிந்த நெடுந்தாரை
என்றும் அகில்கமழும் என்பரால்—தென்றல்
அலர்த்தும் கொடிமாடத் தாயிழையார் ஐம்பால்
புலர்த்தும் புகைவான் புகுந்து. 4

*

வெஞ்சிலையே கோடுவன, மென்குழலே சோருவன,
அஞ்சிலம்பே வாய்விட் டரற்றுவன.—கஞ்சம்
கலங்குவன மாளிகைமேற் காரிகையார் கண்ணே
விலங்குவன மெய்ந்நெறியை விட்டு. 5

தெரிவன நூல் என்றும், தெரியா தனவும்
வரிவளையார் தங்கண் மருங்கே.—ஒருபொழுதும்
இல்லா தனவும் இரவே. இகழ்ந்தெவரும்
கல்லா தனவும் கரவு. 6

சீத மதிக்குடைக்கீழ்ச் செம்மை யறங்கிடப்பத்
தாதவிழ்பூந் தாரான் தனிக்காத்தான்—மாதர்
அருகூட்டும் பைங்கிளியும் ஆடற் பருந்தும்
ஒருகூட்டில் வாழ வுலகு. 7

தேரிற் றுகளைத் திருந்திழையார் பூங்குழலின்
வேரிப் புனலணைப்ப வேயடைந்தான்—கார்வண்டு
தொக்கிருந்தா லித்துழலும் தூக்கிருள்வெய் யோற்கொதுங்கிப்
புக்கிருந்தால் அன்ன பொழில். 8

நீணிறத்தாற் சோலை நிறம்பெயர, நீடியதன்
தாணிறத்தாற் பொய்கைத் தலஞ்சிவப்ப,—மாணிறத்தான்
முன்னப்புட் டோன்று முளரித் தலைவைகும்
அன்னபுட் டோன்றிற்றே ஆங்கு. 9

அன்னந் தனைப்பிடித்தங் காயிழையார் கொண்டுபோய்
மன்னன் திருமுன்னர் வைத்தலுமே—அன்னம்
மலங்கிற்றே தன்னுடைய வான்கிளையைத் தேடிக்
கலங்கிற்றே மன்னவனைக் கண்டு. 10

'அஞ்சல் மடஅனமே! உன்றன் அணிநடையும்
வஞ்சி அனையார் மணிநடையும்—விஞ்சியது
காணப் பிடித்ததுகாண்' என்றான்: களிவண்டு
மாணப் பிடித்ததார் மன். 11

செய்ய கமலத் திருவை நிகரான
தையல் பிடித்த தனியன்னம்—வெய்ய
அடுமாற்றம் இல்லா அரசன்சொற் கேட்டுத்
தடுமாற்றம் தீர்ந்ததே தான். 12

திசைமுகந்த வெண்கவிகைத் தேர்வேந்தே! உன்றன்
இசைமுகந்த தோளுக் கிசைவாள்—வசையில்
தமயந்தி என்றோதும் தையலாள் மென்றோள்
அமையந்தி என்றோர் அணங்கு. 13

நாற்குணமு நாற்படையா ஐம்புலனு நல்லமைச்சா
ஆர்க்கும் சிலம்பே அணிமுரசா—வேற்படையும்
வாளுமே கண்ணா வதன மதிக்குடைக்கீழ்
ஆளுமே பெண்மை அரசு. 14

'வீமன் திருமடந்தை மென்மாலை உன்னுடைய
வாம நெடும்புயத்தே வைகுவிப்பேன்.—சேம
நெடுங்குடையாய்!' என்றுரைத்து நீங்கியதே அன்னம்
ஒடுங்கிடையாள் தன்பால் உயர்ந்து. 15

மன்னன் விடுத்த வடிவிற் றிகழ்கின்ற
அன்னம் போய்க் கன்னி அருகணைய,—நன்னுதலும்,
தன்னுடல் விட்டுத் தனியிடஞ்சேர்ந் தாங்கதனை
என்னுடல் சொல்லென்றாள் ஈங்கு. 16

செம்மனத்தான்; தண்ணளியான்; செங்கோலான்; மங்கையர்கள்
தம்மனத்தை வாங்கும் தடந்தோளான்;—மெய்ம்மை
நளனென்பான்; மேனிலத்து நானிலத்து மிக்கான்;
உளன் என்பான்; வேந்தன் உனக்கு. 17

அறங்கிடந்த நெஞ்சும், அருளொழுகு கண்ணும்,
மறங்கிடந்த திண்டோள் வலியும்,—திறங்கிடந்த
செங்கண்மால் அல்லனேற் றேர்வேந்தர் ஒப்பரோ
அங்கண்மா ஞாலத் தவற்கு? 18

வாவி உறையு மடவனமே! என்னுடைய
ஆவி உவந்தளித்தாய் ஆதியால்—காவினிடைத்
தேர்வேந்தற் கென்னிலைமை சென்றுரைத்தி' என்றுரைத்தாள்
பார்வேந்தன் பாவை பதைத்து. 19

பேரழகு சோர்கின்ற தென்னப் பிறைநுதன்மேல்
நீரரும்பத் தன்பேதை நின்றாளைப்—பாராக்
குலவேந்தன் சிந்தித்தான் கோவேந்தர் தம்மை
மலர்வேய்ந்து கொள்ளு மணம். 20

'மங்கை சுயம்வரநாள் ஏழென்று வார்முரசம்
எங்கும் அறை'கென் றியம்பினான்—பைங்கமுகின்
கூந்தன்மேற் கங்கைக் கொழுந்தோடு நண்ணுடன்
வேந்தர்மேற் றூதோட விட்டு. 21

புள்ளுறையும் சோலைகளும் பூங்கமல வாவிகளும்
உள்ளும்புறமும் இனிதுறைந்தார்—தெள்ளரிக்கட்
பூமகளைப் பொன்னைப் பொருவேல் விதர்ப்பன்தன்
கோமகளைத் தம்மனத்தே கொண்டு. 22

கோதை சுயம்வரநாள் கொற்றவனுக் குற்றுரைப்ப,
ஏதமிலாக் காட்சியர்வந் தெய்தினார்—போதிற்
பெடையோடு வண்டுறங்கும் பேரொலிநீர் நாடன்
அடையாத வாயில் அகம். 23

சடைச்செந்நெல் பொன்விளைக்கும் தன்னாடு பின்னாக்
கடற்றானை முன்னாகக் கண்டான்—அடற்கமைந்த
வில்லியரும் பொற்றாம வீமன் திருமகளாம்
நல்லுயிரும் வாழும் நகர். 24

காவற் குடைவேந்தைக் கண்ணுற்று, விண்ணவர்கோன்,
'ஏவற் றொழிலுக் கிசை' என்றான்—ஏவற்கு
மன்னவனு நேர்ந்தான்; மனத்தினான் மற்றதனை
இன்னதென ஓரா திசைந்து. 25

வார்வெஞ் சிலையொழிய வச்சிரத்தான் மால்வரையைப்
போர்வெஞ் சிறகறுத்த பொற்றோளான்—'யாருமுனைக்
காணார்போய் மற்றவளைக் காண்'என்றான் கார்வண்டின்
பாணாறும் தாரானைப் பார்த்து. 26

தேங்குவளை தன்னிலே செந்தாமரைமலரப்,
பூங்குவளை தாமரைக்கே பூத்ததே—ஆங்கு
மதுநோக்கும் தாரானும் வாணுதலும் தம்மிற்
பொதுநோக் கெதிர்நோக்கும் போது. 27

'இயமரநின் றார்ப்ப, இனவளைநின் றேங்க:
வயமருதோள் மன்னா! வகுத்த—சுயம்வரந்தான்
நின்பொருட்டால் என்று நினை'கென்றான்: நீள்குடையான்
தன் பொருட்டால் நைவாள் தளர்ந்து. 28

நளன் அங்குநின்று திரும்பிவந்து நடந்த வரலாற்றைத் தேவர்களிடம் சொன்னான்.

'அங்கி அமுதநீர் அமபூ அணியாடை
எங்குநீ வேண்டினைமற் றவ்விடத்தே—சங்கையறப்
பெற்றாய்' எனவருணன் ஆகண் டலன் தருமன்
மற்றேனு மீந்தார் வரம். 29

அங்கவர்கள் வேண்டும் வரங்கொடுக்கப் பெற்றவர்கள்
தங்களொடும் தார்வேந்தன் சார்ந்தனன்மேல்—மங்கை
வயமருவு கின்ற மனக்காவ லர்க்குச்
சயம்வரந்தான் கண்டதோர் சார்பு. 30

மாயிரு ஞாலத் துயிர்காண, வான் அரங்கில்
பாயிருள் என்னும் படாம்வாங்கி,—சேயின்
றறைந்தா ரணம்பாட, ஆடிப்போய் வெய்யோன்
மறைந்தான் குடபால் வரை. 31

பூசுரர்தம் கைம்மலரும் பூங்குமுத மும்முகிழ்ப்பக்,
காசினியும் தாமரையும் கண்விழிப்ப,—வாசம்
அலர்ந்ததேதேங் கோதையாள் ஆழ்துயரத் தோடும்
புலர்ந்ததே அற்றைப் பொழுது. 32

மன்னர் விழித்தா மரைபூத்த மண்டபத்தே
பொன்னின் மடப்பாவை போய்ப்புக்காள் -மின்னிறத்துச்
செய்யதாள் வெள்ளைச் சிறை அன்னம் செங்கமலப்
பொய்கைவாய்ப் போவதே போன்று. 33

மன்னர்குலமும் பெயரும் வளநாடும்
இன்ன பரிசென் றியலணங்கு—முன்னின்று
தார்வேந்தன் பெற்ற தனிக்கொடிக்குக் காட்டினாள்
தேர்வேந்தர் தம்மைத் தெரிந்து 34

தெரியில் இவன்கண்டாய் செங்கழுநீர்மொட்டை
அரவின் பசுந்தலையென் றஞ்சி—இரவெல்லாம்
பிள்ளைக் குருகிரங்கப் பேதைப்புள் தாலாட்டும்
வள்ளைக் குருநாடர் மன். 35

அன்னம் துயிலெழுப்ப, அந்தா மரைவயலில்
செந்நெல் அரிவார், சினையாமை—வன்முதுகில்
கூன்இருப்பு தீட்டும் குலக்கோசலநாடன்
தேன்இருந்த சொல்லாய்! இச் சேய். 36

புண்டரிகம் தீயெரிவ போல்விரியப், பூம்புகைபோல்
வண்டிரியும் தெண்ணீர் மகதயர்கோன்—எண்டிசையில்
போர்வேந்தர் கண்டறியாப் பொன்னுவம் பின்னுடைய
தேர்வேந்தன் கண்டாய் இச் சேய். 37

மாநீர் நெடுங்கயத்து வள்ளைக் கொடிமீது
தானேறும் அன்னம் தனிக்கயிற்றில்—போநீள்
கழைக்கோ தையர்ஏய்க்கும் காந்தார நாடன்
மழைக்கோதை மானே!இம் மன். 38

காவலரைத் தன்சேடி காட்டக்கண் டீர்இருவர்
தேவர் நளன்உருவாய்ச் சென்றிருந்தார்.—பூவரைந்த
மாசிலாப் பூங்குழலாள் மற்றவரைக் காணுநின்
றாசலா டுற்றாள் உளம். 39

'மின்னுந்தார் வீமன்றன் மெய்ம்மரபிற் செம்மைசேர்
கன்னியாள் ஆகிற் கடிமாலை — அன்னந்தான்
சொன்னவனைச் சூட்ட அருள்' என்றாள் சூழ்விதியின்
மன்னவனைத் தன்மனத்தே வைத்து. 40

கண்ணிமைத்த லால்அடிகள் காசினியிற் றோய்தலால்
வண்ண மலர்மாலை வாடுதலால் — எண்ணி
நறுந்தா மரைவிரும்பும் நன்னுதலே அன்னாள்
அறிந்தாள் நளன்றன்னை ஆங்கு. 41

விண்ணரசர் எல்லாரும் வெள்கி மனஞ்சுளிக்கக்,
கண்ணகல் ஞாலம் களிகூர, — மண்ணரசர்
வன்மாலை தம்மனத்தே சூட வயவேந்தைப்
பொன்மாலை சூட்டினாள் பொன். 42

திண்டோள் வயவேந்தர் செந்தா மரைமுகம்போய்
வெண்டா மரையாய் வெளுத்தவே — ஒண்டாரைக்
கோமாலை வேலான் குலமாலை வேற்கண்ணாள்
பூமாலை பெற்றிருந்த போது. 43

வெங்கதிரோன் றானும் வீமன் திருமடந்தை
மங்கலநாட் காண வருவான்போல் — செங்குமுகம்
வாயடங்க மன்னற்கும் வஞ்சிக்கும் நன்னெஞ்சில்
தீயடங்க ஏறினான் தேர். 44

இன்னுயிர்க்கு நேரே யிளமுறுவல் என்கின்ற
பொன்னழகைத் தாமே புகைப்பார்போல் -- மென்மலரும்
சூட்டினார், சூட்டித் துடிசேர் இடையாளைப்
பூட்டினார் மின்னிமைக்கும் பூண் 45

கணிமொழிந்த நாளிற் கடிமணமும் செய்தார்
அணிமொழிக்கும் அண்ணல் அவற்கும்.- பணிமொழியார்
குற்றேவல் செய்யக் கொழும்பொன் அறைபுக்கார்
மற்றேவர் ஒவ்வார் மகிழ்ந்து. 46

பெருவாயில் முள்ளியார் அருளிய

# II. ஆசாரக்கோவை.

நன்றி யறிதல், பொறையுடைமை, இன்சொல்லோ,
டின்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை, கல்வியோ,
டொப்புர வாற்ற வறிதல் அறிவுடைமை
நல்லினத் தாரோடு நட்டலிவை எட்டும்
சொல்லிய ஆசார வித்து. 1

வைகறை யாமந் துயிலெழுந்து தான் செய்யு
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து வாய்வதிற்
றந்தையும் தாயும் தொழுதெழுக என்பதே
முந்தையோர் கண்ட முறை. 2

நீருள் நிழற்புரிந்து நோக்கார். நிலமிராக்
கீறார், இராமரமும் சேரார். இடர்எனினும்
நீர்தொடா தெண்ணெய் உரையார் உரைத்தபின்
நீர்தொடார் நோக்கார் புலை. 3

நீராடும் போழ்தின் நெறிப்பட்டார், எஞ்ஞான்றும்,
நீந்தார்: உமியார்: திளையார்: விளையாடார்:
காய்ந்த தெனினும் தலையொழிந் தாடாரே:
ஆய்ந்த அறிவின் அவர். 4

அரசன் உவாத்தியான் தாய்தந்தை தம்முன்
நிகரில் குரவர் இவரிவரைத்
தேவரைப் போலத் தொழுதெழுக என்பதே
யாவரும் கண்ட நெறி. 5

இடக்குங்காற் கைகூப்பித் தெய்வம் தொழுது
வடக்கொடு கோணம் தலைசெய்யார். மீக்கோள்
உடற்கொடுத்துச் சேர்தல் வழி. 6

அளையுறை பாம்பும் அரசும் நெருப்பும்
உளையுறை சீயமும் என்றிவை நான்கும்
இளைய எளிய பயின்றன என்றெண்ணி
இகழின் இழுக்கம் தரும். 7

நந்தெறும்பு தூக்கணம் புட்காக்கை என்றிவைபோல்
தங்கரும நல்ல கடைப்பிடித்துத் தங்கருமம்
எப்பெற்றி யாக முயல்பவர்க் காசாரம்
எப்பெற்றி யானும் படும். 8

ஷேக்ஸ்பியர் எழுதியதின் மொழிபெயர்ப்பாக
மதுரைக் காலேஜ் தமிழ்ப்பண்டிதர்
ஸ்ரீ. ம. கோபாலகிருஷ்ணையர் அவர்கள் எழுதியது

## III. மானிரிடன் ஏழு பருவம்.

நானிலம் யாவும் ஓர் நாடக சாலையே.
ஆண்பெண் அனைவரும் அதில்நடிப் பவர்தாம்.
மறைவும் தோற்றமும் மற்றவர்க் கிங்குள
ஆயுள் நாளில் ஏயபல் வேடம்
எடுத்தவர் புவியில் நடிப்பவர் ஆவர்.
ஒவ்வொரு வருக்கும் ஒரேழு பருவம்ஆம்.
கக்கிக் கதறக் கைப்புறத் தேந்திச்
செவிலித் தாய்வளர் சவலைப் பருவமே
பருவங் களில் முதற் பருவ மதாகும்.
தூண்டா திப்ப, வேண்டா வெறுப்பொடு
புத்தகப் பையொடு நத்தைபோல் ஊர்ந்து
மினுங்கிய வதனம் சிணுங்கிச் சிணுங்கிக்
காலைப் பொழுதிற் கல்விக் கழகம்

மெள்ளச் செல்லும் பள்ளிப் பிள்ளை—பின்
காதலித் திருக்கும் காதலி தனது
புருவமாதிய புழுங்கிய மனத்துடன்,
தண்பா மாலை சாற்றித் துதித்து
மட்டிலா உலைபோல் நெட்டுயிர்ப் பெய்தும்
காதல னாகும் காளை—அதன்பின்,
அதிசயச் சபதமும் அடர்புலித் தாடியும்
பேரழி யாவகைப் பேணும்நல் ஊக்கமும்
எதற்கும் சண்டைக்கு இழுக்கும் படியாச்
சடுதியிற் கோபம் சனிப்பதுடன் கொண்டு
நீர்மேற் குமிழிபோல் நிலையிலாப் புகழ்பெறப்
பீரங்கி வாயில் சீர் அங்கம் போக்கவும்
சித்தமா இருக்கும் யுத்தவீரன்—பின்
செழிப்புறு சேவற் கொழுப்பினால் ஆகிய
பேரெழில் வாய்ந்த பேழைபோல் வயிறும்
கிர்த்தாட்சண்ய நேத்திரம் இரண்டும்
வழங்கும் காலத் தொழுங்கின் படியே
நறுக்கிய தாடியும் முறுக்கிய மீசையும்
நல்உப தேசமும் நாடறி வழக்கும்
இன்ன யாவும் இனிதுறக் கொண்ட
பண்பார் நீதி பதி.—அதன் பின்னர்
கச்சல் தேகமும் கால்களிற் சோடும்
மூக்கிற் றரித்து நோக்குகண் ணாடியும்
இருகவுள் தோலாம் இரும்பை வீழ்ச்சியுந்
பாலியத் தினது பத்திரப் படுத்திய
மேற்சோ டிரண்டும் மிகப் பெரிதாம்படி
ஒடுங்கிச் சுருங்கிய ஓரிரு பாதமும்

ஆணவப் பெருங்குரல் அனைத்தையும் இழந்து
குழவியின் குறுகிய குரலினைப் போன்று
கீச்சென ஒலிக்கும் பேச்சையும் கொண்டு
தேசெலாம் குன்றிய மாசுலாம் குருபியே
ஆறும் பருவம் ஆம். அதன் பின்னர்
பல்லும் பார்வையும் சொல்லும் சுவையும்
யாவையும் இழந்து யாவையும் மறந்து
மறுவலும் செய்என மதித்தளர்வு எய்துவோன்
அடிக்கடி மாறும்இவ் அற்புத சரிதை
முடியும்இக் காட்சி யொடுமுடிந் திடுமே.

---

# IV. தனிப் பாடல்கள்.

## காளமேகப்புலவர்.

### எள்ளுக்கும் பாம்புக்கும் சிலேடை.

ஆடிக் குடத்தடையும்; ஆடும்போ தேயிரையும்;
மூடித் திறக்கின் முகங்காட்டும்;—ஓடிமண்டை
பற்றிற் பரபரெனும்; பாரிற்பிண் ணாக்குமுண்டாம்;
உற்றிடுபாம் பெள்ளெனவே ஓது. 1

### பாம்புக்கும் எலுமிச்சம்பழத்துக்கும் சிலேடை.

பெரியவிட மேசேரும். பித்தர்முடி யேறும்.
அரியுண்ணும். உப்புமே லாடும்.—எரிகுணமாம்.
தேம்பொழியும் சோலைத் திருமலைரா யன்வரையில்
பாம்புமெலு மிச்சம் பழம். 2

### சீட்டுக் கவி.

தூதைந்து நாழிகையில் ஆறுநா ழிகைதனிற்
சொற்சந்த மாலை சொல்லத்
துகளிலா அந்தாதி ஏழுநா ழிகைதனில்
தொகைபட விரித்துரைக்கப்
பாதஞ்செய் மடல்கோவை பத்துநா ழிகைதனிற்
பரணியொரு நாள்முழுதுமே
பாரகா வியமெலாம் ஒரிரு தினத்திலே
பகரக்கொடிக் கட்டினேன்:
சீதஞ்செ யுந்திங்கள் மரபினான் நீடுபுகழ்
செய்யதிரு மலைராயன்முன்
சீருமா றாக்கவே தாறுமா றுகள்சொல்
திருட்டுக் கவிப்புலவரைக்
காதங் கறுத்துச் சவுக்கிட்டடித்துக்
கதுப்பிற் புடைத்துவெற்றிக்
கல்லணைபி னேடுகொடிய கடிவாள மிட்டேறு
கவிகாள மேகநானே.

---

## திருவள்ளுவர்

வாசுகியாகிய அவரதுமனைவி இறந்தபோதுமனமுருகிப் பாடினது.

அடிசிற் கினியாளே அன்புடையாளேப்
படிசொற் பழிநாணு வாளே—அடிவருடிப்
பின்றூங்கி முன்னுணரும் பேதையை யான்பிரிந்தால்
என்றூங்கு மென்கண் எனக்கு.

## கம்பர்.

கம்பர் சயனித்திருந்த அறையின் கதவு, காற்றால் மோதப் பட்டது. கதவை யாரோ தட்டினரென அதைத்திறந்துபார்க்க, எவரும் அக்காலத் தங்கில்லாததால், காற்றே இவ்வாறு செய்த தென அதனை முன்னிலைப் படுத்திப் பாடியது.

கொற்கையுறை மாறன் குலசே கரப்பெருமான்
பொற்கையா னணைகதை போதாதா?—நற்கமல
மன்றலே வாரி மணிவா சலையசைக்குந்
தென்றலே என்வந்தாய் செப்பு. 1

தன் நாட்டைவிட்டுப்போமாறு சோழன் சொல்லியபோது பாடியன.

மன்னவனு நீயோ? வளநாடும் உன்னதோ?
உன்னையறிந் தோதமிழை ஓதினேன்?—என்னை
விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ?உண்டோ
குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு? 2

காதம் இருபத்து நான்கொழியக் காசினியை
ஓதக் கடல்கொண் டொளித்ததோ—மேதினியில்
கொல்லிமலை தேன்சொரியும் கொற்றவா! நீமுனிந்தால்
இல்லையோ எங்கட் கிடம். 3

## இராமசந்திரக்கவிராயர்.

முறைமாறாகத் தோன்றுமாறு பாடியது.

வீமனுக்கு மைந்தனார் வேதனாகும்;
வேதனுக்கு மைந்தனார் ஈசனாகும்;
காமனுக்கு மைந்தனார் வீமன் தம்பி;
கந்தனுக்கு மாமனார் காமன்றானே;
மாமனுக்கு முன்றமையன் தந்தைகாலன்,
வையகத்தில் இம்முறைமை வழங்கலாலே,
ராமனுக்குச் சீதைதங்கை யாகவேண்டும்.
ராவணனுக் குத்தகப்பன் ராமன்றானே.

குருபாத தாசர் அருளிய திருப்புல் வயல்,

# V. குமரேச சதகம்.

காப்பு.

பூமேவு புல்லைப் பொருந்துகும ரேசர்தம்மேல்
தேமே வியசதகம் செப்பவே,—கோமேவிக்
காக்கும் சரவணத்தான் கம்பகும்பத் தைந்துகரக்
காக்குஞ் சரவணத்தான் காப்பு.

பகைக்கப்படாதார் இவரெனல்.

அரசர்பகை யுந்தவம் புரிதபோ தனர்பகையும்,
அரியசரு ணீகர்பகையும்,
அடுத்துக்கெடுப்போர் கொடும்பகையும், உட்பகையும்,
அருளிலாக் கொலைஞர்பகையும்,
விரகுமுகும் ஊரினுள் ளோருடன் பகையுமிகு
விகடப்ர சங்கிபகையும்,
வெகுசனப் பகையுமந் திரவாதியின் பகையும்,
விழைமருத் துவர்கள்பகையும்,
உரமருவு கவிவாணர் பகையுமா சான்பகையும்,
உறவின்முறை யார்கள்பகையும்,
உற்றதிர வியமுளார் பகையுமந் திரிபகையும்,
ஒருசிறிது மாகாதுகாண்:
வரநதியின் மதலையென இனியசர வணமிசையில்
வருதருண சிறுகுழவியே!
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே! 2

## பெரியோர் வாக்கிய பரிபாலனம் செய்தவர்.

தந்தைதாய் வாக்யபரி பாலனம் செய்தவன்
தசரத குமார ராமன்:
தமையன் அருள் வாக்யபரி பாலனம் செய்தோர்கள்
தருமனுக் கிளையநால்வர்:
சிந்தையில் உணர்ந்துகுரு வாக்யபரி பாலனம்
செய்தவன் அரிச்சந்திரன்:
தேகிஎன் றோர்க்கிலை எனுவாக்ய பாலனம்
செய்தவன் தானகன்னன்:
நிந்தைதவிர் வாக்யபரி பாலனம் செய்தவன்
நீள்பல மிகுத்தஅநுமான்:
நிறையுடன் பர்த்தாவின் வாக்கியபரி பாலனம்
நிலத்தினின ளாயினிசெய்தாள்:
மந்தைவழி கோயில்குள முங்குலவு தும்பிமுகன்
மகிழ்தர வுகந்ததுணைவா!
மயிலேறி விளையாடு குகனே!புல் வயனீடு
மலைமேவு குமரேசனே!

## நட்பு நிலைமை.

மாமதியின் முயலான ததுதோல் வுழித்தேய்ந்து
வளருமப் போதுவளரும்,
வாவிதனில் ஆம்பல்கொட் டிகளதனி னீர்வற்றின்
வற்றிடும், பெருகில் உயரும்,
பூமருவு புதல்பூடு கோடையிற் றீய்ந்திடும்,
பொங்குகா லந்தழைக்கும்,
புண்டரிகம் இரவிபோம் அளவிற் குவிந்திடும்,
போதுதய மாகின்மலரும்,

தேமுடல் இளைக்கினுயிர் கூடவும் இளைக்குமது
　　தேறில்உயி ருஞ்சிறக்கும்,
சேர்ந்தோர்கள் இடுக்கணது வந்தாலும் நல்லோர்
　　சிநேகமப் படியாகுமே.
வாமன சொரூபமத யானைமுகனுக்கிளைய
　　வாலகுரு பரவேலவா!
மயிலேறிவிளையாடு குகனே! புல் வயனீடு
　　மலைமேவு குமரேசனே!

---

தாமஸ் காமேல் எழுதியதன் தமிழ் மொழி பெயர்ப்பு.
மதுரைமாணவர் செந்தமிழ்ச் சங்கத்து அக்கிராசனாதிபதியாகிய
ஸ்ரீ-ம. கோபாலகிருஷ்ணையரவர்கள் இயற்றியது.

## VI. அல்லின் பிரபுவின் மகள்.

---

"எள்ளளவுந் தாமதியேல் ஏ! படகுக் கார!
　இப்புனலைக் கடத்திஎமை இட்டுச்செல்லு வாயேல்
வெள்ளியப வுன்தருவேன் வெகுமதியாய்" என்ன
　வேண்டி நின்றான் மலைநாடு மேவிடுமோர் தலைவன். 1

"நீயார்கொல் தளிப்பொடு கார் நிறமுமுடைத் தாய
　நீர்உள'லாக் கயில்' கடக்க நினைந்தவன்?" என்றோத,
"ஏ! யானா? அல்வா என் றிசைதீவின் தலைவன்,
　இவள் அல்லின் எனும்பிரபு வின்புதல்வி ஆவள். 2

"அதிவிரைவில் ஓடுகிறோம் அவளுடைய ஐயன்
　ஆட்களின்முன் யாம்ஒருங்கே நாட்களொரு மூன்று.
எதிரில்எமை இம்மலைதாக் கினில் அவன்காண் பானேல்,
　என் குருதி கறைப்படுத்தும் புன்புல்நிலம் கண்டாய். 3

"அவன்குதிரை வீரர்எலமை அணுகித்தொடர் கின்றார்;
அவர்கள்எம தடிச்சுவட்டை அறிந்துகொள்ளுவாரேல்,
எவர்எனது எழில்வதுவை இன்புறச்செய் வாரோ,
இவளுடைய காதலனை அவர்கள்கொல்லு வாரேல்?" 4

அன்னதுகேட்டாண்மைமிகும் அம்மாலைநாட்டான் "என்
அதிப! செல்வன் நான்; சித்தம் ஆகஇருக் கின்றேன்
இன்னதுநின் ஏந்தெழிலா ளின் பொருட்டே யன்றி,
ஈந்திடுநின் ஒள்ளியதாம் வெள்ளியினுக் கில்லை. 5

"சத்தியம் பூந் தத்தையிவள் தத்திணுக்குள் ளாகித்
தத்தளிக்கச் சற்றும்இனித் தாமதிக்கொ ணுதால்,
எத்துணை தான் இத்திரைநு ரைத்தெழுந்த போதும்
இத்துரைநின் றத்துறைசேர்ப் பிப்பென்உண்மை" என்றான் 6

இன்னதற்குள் விரைந்துபுயல் இரைந்தெழுந்த தோங்கி,
இசைத்ததுகீச் செனவேநீ ரினில்வாழும் பேயும்;
அன்னவர்சம் பாஷணைசெய் தாங்கிருக்கும் போதே
அகல்விசும்பு கறுத்ததும அவர்முகமும் கறுத்த. 7

இதுகிடக்க; முன்னையினும் இரைந்துபுயல் வீசி
எழுந்தடித்தும் பயங்கரமா இருள்கவிந்தும் கூட
குதிரை இவர்ந் தாயுதம் கைக்கொண்டோர்மலைத் தாக்குக்
குறுகினர் மாக் குளம்பொலியும் குறுகிமிகக் கேட்ட. 8

"விடுவிரைவில்! விடுவிரைவில்! வீசுபுயற் காற்று
மேவிநமைச் சூழினுமே விசும்புறுத்தும் பொல்லாக்
கடுமையும்யான் துணிந்தெதிர்ப்பேன் காண்; எனது தந்தை
கடுஞ்சினம்பொ றேன்" என அக்காரிகை கரைந்தாள் 9

புயல்அடிக்கும் கரையினின்றும் போந்துபட காங்கே
பொங்குதிரைக் கடல்கடக்கப் புறப்படவும் என்னே!
இயல்மனிதர் எதிர்க்கவொணு இகலுடனே சூறை
இப்படகைச் சுற்றிவளைந் திட்டதுவே அந்தோ! 10

சலியாதன் னவர்படகைத் தாக்கிஎதிர்த் தார்த்துத்
தள்ளும்அலை யையும்எதிர்த்துத் தண்டுவலிக் குங்கால்
அலின்பிரபு படுகரையை அடைந்தனன்; அப்போதே
அவன்கோபம் மாறியதே அழுகையதா அந்தோ!. 11

இருளிலும்காற் றிலும்வருந்தி இருந்துகலங்குந்தன்
எழில்மகளைக் கண்ணுற்றான் ஏங்கிமனம் புண்ணாய்:
ஒருஇனிய கரமதனை உதவிபெற நீட்டி
உயிர் அனைய காதலனை ஒருகரத்தால் அணைத்தாள். 12

விசனமொடு கதறினன்;"இவ் வீசுபுயல் மேவும்
விரிதிரையின் மீளுகநீ. மீளுக.நின் உள்ளம்
இசையுமலை நாட்டிறைவன் இயற்று பிழைபொறுத்தேன்:
என்மகளே! ஐயையோ! என்மகளே!" என்ன. 13

இலை இதனாற் பயன்; இவர்கள் வரவும் துணை பெறவும்
இயலாமற் றடுத்திரைநீர் எற்றியதாற் கரையை.
அலைஎழுந்து ஊர்க்கமுடன் அவன்மகளை விழுங்க
அழுதரற்றிச்சோகமுடன் அவன்இருந்தான் ஆங்கே.14,

---

## இளங்கோவடிகள் அருளிய

# VII. சிலப்பதிகாரம்.

### அறவுரை.

தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர்!
பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்.
தெய்வம் தெளிமின். தெளிந்தோர்ப் பேணுமின்
ஊனூண் துறமின். உயிர்க்கொலை நீங்குமின்.
தானம் செய்மின். தவம்பல தாங்குமின்.
செய்ந்நன்றி கொல்லன்மின். தீநட் பிகழ்மின்.
பொய்க்கரி போகன்மின். பொருண்மொழி நீங்கன்மின்.
பிறர்மனை அஞ்சுமின். பிழையுயிர் ஓம்புமின்.

அறமனை காமின். அல்லவை கடிமின்.
கள்ளும் களவும் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும். விரகினில் ஒழிமின்.
இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா.
உளநாள் வரையா தொல்லுவ தொழியாது.
செல்லும் தேஎத்துக் குறுதுணை தேடுமின்.
மல்லன்மா ஞாலத்து வாழ்வீர் ஈங்கென.

---

திருவள்ளுவர் அருளிச்செய்த

## VIII. திருக்குறள்.

அகர முதல எழுத்தெல்லாம்; ஆதி
பகவன் முதற்றே உலகு. 1

அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ். 2

தந்தை மகற்காற்று நன்றி, அவையத்து
முந்தி யிருப்பச் செயல். 3

மகன், தந்தைக் காற்றுமுதவி, இவன்றந்தை
என்னோற்றான் கொல்லெனும் சொல். 4

செய்யாமற் செய்த உதவிக்கு, வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது. 5

எந்நன்றிகொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. 6

யாகாவா ராயினு நாகாக்க; காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. 7

ஒறுத்தார்க் கொருநாளை இன்பம்; பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ். 8

சாதலின் இன்னாத தில்லை; இனிததூஉம்
ஈத லியையாக் கடை. 9

தன்னெஞ் சறிவது பொய்யற்க; பொய்த்தபின்,
தன்னெஞ்சே தன்னைச் சுடும். 12

தன்னைத்தான் காக்கின் சினம் காக்க; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம். 11

இன்னா செய்தாரை ஒறுத்தல், அவர்நாண
நன்னயம் செய்து விடல். 10

கற்க கசடறக் கற்பவை கற்றபின்,
நிற்க அதற்குத் தக. 13

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு. 14

திருக்குறளின் சிறப்புப்பாயிரமாகிய

## IX. திருவள்ளுவ மாலை.

மாலும் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியால்
ஞால முழுதும் நயந்தளந்தான்;—வாலறிவின்
வள்ளுவரும் தங்குறள்வெண் பாவடியால் வையகத்தார்
உள்ளுவஎல் லாம்அளந்தார் ஓர்ந்து.—பரணர். 1

மும்மலையும் முந்நாடும் முந்நதியும் முப்பதியும்
மும்முரசும் முத்தமிழும் முக்கொடியும்—மும்மாவும்
தாமுடைய மன்னர் தடமுடிமேல் தார்அன்றோ
பாமுறைதேர் வள்ளுவர்முப் பால்.—சீத்தலைச்சாத்தனார். 2

சீந்திநீர்க் கண்டம் தெறிசுக்குத் தேன் அளாய்
மோந்தபின் யார்க்கும் தலைக்குத்தில்.—காந்தி
மலைக்குத்து மால்யானை வள்ளுவர்முப் பாலால்
தலைக்குத்துத் தீர்வுசாத் தற்கு.—மருத்துவன் தாமோதரனார். 3

பூவிற்குத் தாமரையே; பொன்னுக்குச் சாம்புநதம்;
ஆவிற் கருமுனியா; யானைக் கமரரும்பல்;
தேவிற்றிருமால் எனச்சிறந்த தென்பவே,
பாவிற்கு வள்ளுவர் வெண் பா.—கவிசாகரப் பெருந்தேவனார். 4

ஆரியமும் செந்தமிழும் ஆராய்ந் திதனினிது
சீரியதென் றொன்றைச் செப்பரிதால்—ஆரியம்
வேதம் உடைத்துத் தமிழ்திரு வள்ளுவனார்
ஓது குறட்பா உடைத்து. வண்ணக்கஞ் சாத்தனார். 5

பொய்ப்பால பொய்யேயாய்ப் போயின:பொய் அல்லாத
மெய்ப்பால மெய்யாய் விளங்கினவே:—முப்பாலில்
தெய்வத் திருவள்ளுவர் செப்பிய குறளால்
வையத்து வாழ்வார் மனத்து.—தேனீக்குடிக்கீரனார். 6

---

குமரகுருபர சுவாமிகள் அருளிய

# X. நீதிநெறிவிளக்கம்.

அறம்பொருள் இன்பமும் வீடும் பயக்கும்.
புறங்கடை நல்லிசையு நாட்டும்.—உறுங்கவலொன்
றுற்றுழியும் கைகொடுக்கும். கல்வியின் ஊங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை. 1

கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்:—மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யும் உடம்பு. 2

தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென் றகமகிழ்க—தம்மினும்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றவெல்லாம்
எற்றே இவர்க்குநாம் என்று. 3

கல்வி உடைமை பொருளுடைமை என்றிரண்டு
செல்வமும் செல்வம் எனப்படும்:—இல்லார்
குறையிரந்து தம்முன்னர் நிற்பபோற் றாமும்
தலைவணங்கித் தாழப் பெறின். 4

தன்னை வியப்பிப்பான் தற்புகழ்தல், தீச்சுடர்
நன்னீர் சொரிந்து வளர்த்தற்றால் —தன்னை
வியவாமை அன்றே வியப்பாவ தின்ப
நயவாமை அன்றே நலம்?.

குலமகட்குத் தெய்வம் கொழுநனே. மன்ற
புதல்வர்க்குத் தந்தையும் தாயும். அறவோர்க்[கு]
அடிகளே தெய்வம். அனைவோர்க்கும் தெய்வம்
இலைமுகப் பைம்பூண் இறை. 6

கண்ணோக் கரும்பா, நகைமுகமே நாண்மலரா,
இன்மொழியின் வாய்மையே தீங்காயா,—வண்மை
பலமா நலம்கனிந்த பண்புடையார் அன்றோ
சலியாத கற்ப தரு? 7

உலையா முயற்சி களைகணா ஊழின்
வலிசிந்தும் வன்மையும் உண்டே—உலகறியப்
பான்முளை தின்று மறலி உயிர்குடித்த
கான்முளையே போலும் கரி. 8

மெய்வருத்தம் பாரார்: பசிநோக்கார்: கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்:—செவ்வி
அருமையும் பாரார்: அவமதிப்பும் கொள்ளார்:
கருமமே கண்ணாயி னார். 9

கற்புடைத் தன்பு முடித்து,நாண் மெய்ப்பூசி,
நற்குண நற்செய்கை பூண்டாட்கு—மக்கட்பே
றென்பதோர்செல்வமும் உண்டாயின் இல்லன்றே
கொண்டாற்குச் செய்தவம் வேறு. 10

திருமுனைப்பாடியார் இயற்றிய

# XI. அறநெறிச்சாரம்.

ஈட்டிய ஒண்பொருளும் இல்லொழியும் சுற்றத்தார்
காட்டுவாய் நேரா கலுழ்ந்தொழிவர்—மூட்டும்
எரிஉண் உடம்பொழியும்: ஈர்ங்குன்ற நாட!
தெரியின் அறமே துணை. 1

காலைச்செய் வோம்என் றறக்தைக் கடைப்பிடித்துச்
சாலச்செய் வாரே தலைப்படுவார்—காலை,
கிடந்தான் எழுதல் அரிதான்மற் றென்கொல்
அறம்காலை செய்யாத ஆறு? 2

மின்னும் இளமை உளதாம் எனமகிழ்ந்து
பின்னை யறிவென்றல் பேதைமை:—தன்னைத்
துணித்தானும் தூங்கா தறஞ்செய்க: கூற்றம்
அணித்தாய் வருதலும் உண்டு. 3

வைகலு நீருட் கிடப்பினும், கல்லிற்கு
மெல்லென்றல் சால அரிதாகும், அஃதேபோல்,
வைகலு நல்லறம் கேட்பினும் கீழ்கட்குக்
கல்லினும் வல்லென்னு நெஞ்சு. 4

காய்தல் உவத்தல் அகற்றி, ஒருபொருட்கண்
ஆய்தல் அறிவுடையார் கண்ணதே:—காய்வதன்கண்
உற்ற குணந்தோன்றா தாகும்; உவப்பதன்கண்
குற்றமும் தோன்றாக் கெடும். 5

பலகற்றோம் யாம்'என்று தற்புகழவேண்டா;
அலர்கதிர் ஞாயிற்றைக் கைக்குடையும் காக்கும்.
சிலகற்றார் கண்ணும் உளவாம் பலகற்றார்க்[கு]
அச்சாணி அன்னதோர்சொல்.

பிறர்க்கின்னா செய்தலிற் பேதைமை இல்லை,
பிறர்க்கின்னா தென்றுபேர் இட்டுத்,—தனக்கின்னா
வித்தி விளைத்து வினைவிளைப்பக் காண்டலில்
பித்தும் உளவோ பிற. 7

முன்னின் றொருவன் முகத்தினும் வாயினும்
கன்னின் றுருகக் கனிந்துரைத்துப்—பின்னின்[று]
இழித்துரைக்கும் சான்றோரை யஞ்சியே தேவர்
விழித்திமையா நின்ற நிலை.

ஓதலும் ஓதி உணர்தலும் சான்றோரால்
மேதை எனப்படும் மேன்மையும்—சூது
பொரும்என்னும் சொல்லினாற் புல்லப் படுமேல்,
இருளாம் ஒருங்கே இவை. 9

காலொடு கைய்முக்கிப் பிள்ளையை வாய்நெறித்துப்
பாலொடு நெய்பொய்யும் தாய்அனையர்:—சால
அடக்கத்தை வேண்டி அறன்வலிந்து நாளும்
கொடுத்துமேற் கொண்டொழுகு வார். 10

---

## நல்லூர் வீரன் ஆசு கவிராயர் இயற்றிய

# XII. அரிச்சந்திர புராணம்.

### மயான காண்டம்.

முறைமுறை பணிகள் எல்லாம் செய்துற முடித்துப் பின்னர்,
மறையவன் தன்னை எத்திவாய்புதைத் தழுது விம்மி,
"இறைவகே ளரவந்தீண்டி யென்மக னிறந்தான், யானச்
சிறையிலே சேறற் குன்றன் திருவுளம் அறியேன்" என்றாள். 1

சினக்கடுஞ் சொல்லாற் சீறித் திடுக்கிட வுரப்பி, "வீணில்
எனக்குறு குறையே யன்றி என்பொருட் கழிவுவந்தால்,
உனக்குறு குறைதானுண்டோ? உறுவிலைப் பட்ட பையல்
தனக்கொரு தாயும் உண்டோ? தவிர்கநீ போவ" தென்றான். 2

பாவியேன்மகனேயென்பாள்; பதைப்பள்;மென்முகத்தின்மோதித்
தாவியே விழுவ னின்று தயங்கியே மயங்கி வீழ்வள்;
காவியங் கண்ணீர் பாயக் கதறுவள்; பதறி யேங்கி
ஆவியைத் தேடித்தேடி அலமரும் உடலம் ஒத்தாள். 3

ஒடினாள்; உள்ள மெல்லாம் உருகினாள்; கருகி மேனி
வாடினாள்; விறகு வைத்த வடத்தினுக் கருகே வந்தாள்;
நாடினாள்; கழுதும் பேயும் நரிகளும் குறளும் துன்றிக்
கூடிய குழுவின் நாப்பண் குமரனைச் சென்று கண்டாள். 4

பனியால் நனைந்து வெயிலால் உலர்ந்து
பசியால் அலைந்தும் உலவா
அனியாய வெங்கண் அரவால் இறந்த
அதிபாவம் என்கொல் அறியேன்?
தனியே கிடந்து விடநோய் செறிந்து
தரைமீ துருண்ட மகனே!
இனியாரை நம்பி உயிர்வாழ்வம் என்றன்
இறையோனும் யானும் அவமே? 5

நீராள வாவி செறிநா டனைத்து
நிறைமா தவற்கு தவினும்,
பாராளு நேர்மை தொடர்பற்ற தன்று.
படியாளும் எந்தை முடியில்,
காராளர் ஏர்கள் கடவோசை ஓய்வில்
கன்னோசி நாட தனைமேல்
ஆராள வல்லர்? அவமே வனத்தில்
அரலால் இறந்த மகனே! 6

நல்லோர் வகுத்த முறையாம் அறங்கள்
நாலெட்டில் ஒன்று குறையேம்.
இல்லோரை யற்பம் இகழேம். இறுக்கும்
இறையின்றி யேற உகவேம்.

சொல்லோ மறுத்து முறையோம். உரைத்த
துறவோர்கள் புத்தி கடவோம்.
எல்லோர் தமக்கும் இனிதே விளைப்பம்.
ஏதாக வந்த திதுவே? 7

மறைநீதி யுற்ற புறநா டழித்து
வருசேனை ஆள்வ தறியேம்.
அறைநீதி முற்றும் உணரா அமைச்சை
அணிவாயில் வைத்து மறியோம்.
குறையே இளைத்து வினையே விளைத்த
குடிவைத் திருந்து மறியேம்.
இறையே! தவத்தின் விளைவே! எமக்கு
மிதுவோ விதித்த விதியே. 8

கனமும் தருக்கள் குலமும் தரித்த
கரமும் பெருத்த உரமும்
தினமும் சிறக்கும் முகமும் தரித்த
சிகையும் கிடக்கு முறைகண்
டினமும் தரித்த துயிரான பாவி
இறவாமல் என்றன் மகனே!
மனமும் தரிப்ப திலை,நொந்து பெற்ற
வயிறுந் தரிப்ப திலையே. 9

வடியேறு வெற்றி நெடுவேல் மலர்க்கை
மகனோ டிறந்து மடியாக்
கொடியேன் முகத்தில் விழியார் முனிக்கு
வளநா டளித்த கொடையார்.
இடியே றடர்த்த மரமாகி மண்ணின்
இடையே யுழத்தல் அழகோ?
அடியேனை யொக்க முடியா திருத்தல்
அநியாய மிக்க யமனே? 10

இவ்வாறு புலம்பி, இறந்த மகனைத் தோளின்மேல் எற்றிக் கொண்டு, சந்திரமதி மயானம் நோக்கிச் சென்றாள்.

கண்டனள் ஈமமெனக் கருத்தினுன்னிக்
கடவுளர்தம் காவலிற்றன் மகனைவைத்துப்
பண்டுவெந்து கரிந்தகுறைக் கட்டை யெல்லாம்
பலதிசையும் விரைந்தோடிப் பார்த்தெடுத்துக்
கொண்டுவந்து பிணங்கள் சுடும் சுடலை நண்ணிக்
கொள்ளியெடுத் தோடியனல் கூட்டி மூட்டி
மண்டுதழற் கட்டையின்மேன் மகனைவைத்தாள்.
வளர்ந்தெரியும் கனல்விளங்க மன்னன் கண்டான். 11

கண்டவன் காஷ்டத்தண்டைவந்து, தரத்தகும்பொருள்களைத் தாராது பிணம் சுடுதற்காகச் சந்திரமதியைக் கோபித்துப், பின், காலால் குழந்தையை எற்றிவிட்டான்.

எறிந்திடலும் உயிரேங்க ஏங்கி, வேனில்
இடிவிழுந்தாற் படிமிசையே அடிசாய்ந்தாடி
முறிந்துவிழு மரம்போற்சென் றடிமேல்வீழ்ந்து,
மொழிகுழறி விழியருவி சொரிய, வல்லி,
"அறிந்துமிலன் இவ்வூரில் வழங்குநீதி.
அருவினையேன் ஆருமிலி. அறவும்பாவி.
மறிந்தமகன் தனைச்சுடநான் வந்தேனையா!
வறியேற்குப் பொருளுளவோ வழங்க" என்றாள். 12

"துஞ்சியமைந் தனையெடுத்துச் சுமந்து போந்து,
சுடுவாரற் றிடுகாட்டிற் றோண்மேல் ஏற்றிப்
பஞ்சுடும் பாடுபடும் பாவி யேற்குப்
பணமேது? கொள்ளிமுறிப் பாதி ஏது?
நெஞ்சுதளர்ந் தருவினையேன் வருந்தக் கண்டு
நீயிரங்காய்" எனஇரந்து நிற்குங் காலை,
வஞ்சிதிரு மணிமிடற்றில் வயங்கா நின்ற
மங்கலநாண் கண்டிறைவன் மதித்துச்சொல்வான் 13

"நல்லை, நல்லை, அறச்சமர்த்தி நீயே கண்டேன்.
நன்னுதலார் அனைவரினும் இந்த்ர சாலம்
வல்லை வல்லை. விறருகளும் களவே. செம்பொன்
மங்கலநாண் உன்கழுத்தில் இருக்க ஏதும்
இல்லையெனச் சொல்லுவது சற்றும் ஏலா
திதனையெனக் கேவாய்என் றியம்ப, வேடர்
பல்லுழுயிர் நிலைவாயிற் பட்ட மான்போல்,
பதைபதைத்துப் பைந்தொடியாள் பதறிவீழ்ந்தாள். 14

"அலைவிலா அரிச் சந்திரற் கல்லது
தொலைவில் யாவர்க்கும் தோற்றரு மங்கலம்
புலையன் காணவும் போதுவ தோ" எனா
உலையின் மீது மெழுகொத் துருகினாள். 15

"அற்புக் காழிய னான்அரிச் சந்திரன்
விற்பப் போயின மேன்மைக் குலத்தொடும்
பொற்புப் போம்பொறை போம்நிறைபோ மென்றன்,
கற்புப் போவதென்?" என்று கலங்கினாள். 16

அனைய காலை அரிச்சந்திர னுந்தன்
மனைவி யாமிவ ளென்று மனங்கொளாத்
தனையன் மாண்டது தன்னையுட் கொண்டுள
நினைவை நீக்கி மறைப்பையு நீக்கினான். 17

"அன்னை இன்றி அருங்கானில் எய்திய
உன்னை ஒடி அரவம் கடித்தலின்,
மின்னை யும்உனை யும்விற்ற வெவ்வினை
என்னை எவ்வணம் நொந்தனை ஏந்தலே! 18

நந்த நாடுநிலமும் இழந்து நீ,
எந்த மோடுவந் திவ்வணம் பட்டனை;
மைந்தனே என்னாற் பெற்ற வாழ்வுனக்
கிந்த வாழ்வள வோ" என் றிரங்கினான். 19

"ஒன்றி லாத உயிரினை ஓம்பியே
பொன்றி லாது புலையனுக் காட்பட்டான்,
வென்றி வேந்தினி மீட்கத் தருவனோ
என்றி றந்தனை யோ?" என் றியம்பினான். 20

"விற்ற நாளில்என் மேனி தழீஇயதிற்
பற்றி அந்தணன் ஈர்த்ததும் பார்த்திருந்
திற்றை நாண்மட் டிரங்காத என்வயின்
உற்ற பாவம் ஒழித்தனை யோ" என்றான். 21

"காத லாலுனைக் காணாத தாயையும்
ஈதெ லாம்விளைத் தெற்றிய என்னையும்
மீதெ லாம்அர வின்விட மேயநாள்
ஏதெ லாம்உரைத் தாயுரை எந்தலே!" 22

என்று இவ்வாறு வருந்துவோன் தன் கணவனெனத் தாராமதி அறிந்தாள். அவன், வீரவாகுவுக்குச் சேரவேண்டிய காற்பணமும் கொள்ளித்துண்டும் தந்தே குழந்தையைத் தகனம்செய்ய வேண்டுமென்று சொன்னான். அப்பொருள்களைப் பெறவேண்டி அவள் தன்னை அடிமைகொண்ட அந்தணனிடம் சென்றாள்.

சென்றவள் காசிநகரின் தெருவில் ஒரு குழந்தை இறந்துகிடத்தலைக் கண்ணுற்று, அதனை உற்றுநோக்கினாள். அது காசி காவலனது குழந்தை. அதனைத் தேடிவந்த சேவகர்கள் சந்திரமதியையும் இறந்துகிடந்த குழந்தையையும் காசிபதியிடம் கொண்டு சேர்த்தனர்.

அரசன் தன்குழந்தையைக் கொன்றதாரென விசாரிக்க அவள், தானே குழந்தையைக் கொன்றதாகச் செப்பினாள். அவளைக்கொலை செய்விக்குமாறு அரசன் வீரவாகுவிற்கு உத்திரவிட்டான். அவன், அப்பணியை நிறைவேற்றும்படித், தனக்கடிமைப்பட்ட அரிச்சந்திரனுக்குக் கட்டளையிட்டுத் தன்வாளை ஈந்தான்.

“என்ன பாதகம் செய்தனம்?” என இறை நகைத்துக்,
கன்னி கைகளைக் கட்டிய கயிறுதான் பிடித்துத்,
துன்னு மாமணித் தோரண வாயிலைக்கடந்து,
பொன்னின் மாநகர்ப் புரிசையின் புறத்துவந் திறுத்தான். 23

அந்த வேளையிற் கௌசிகன் விரைந்துவந் “தரசே!
இந்த நோதக வெய்தலென்? எனக்குநீ முன்னம்
தந்த நாடியான் தந்திலேன் எனுமொழி சாற்றி,
உய்ந்து நாடுமுவ் வுயிர்களும் பெறு”கெனவுரைத்தான். 24

உடனே சந்திரமதியும் அரிச்சந்திரனும்:

“செய்மைஅண்மையில் உயிர்க்கொரு துணையெனச்சிறந்த
வாய்மை யால்அகம் தூய்மையாம். மற்றிலை புறத்தைத்
தூய்மை செய்வது நீரலாற் சொல்லின்வே றுளதோ?
நோய்மைசெய்யினும்வாய்மையே நோன்பெமக்கறிதி. 25

புலைய னும்விரும் பாதவிப் புன்புலால் யாக்கை
நிலையெ னுமருண் டுயிரினு நெடிதுறச் சிறந்தே
தலைமை சேர்தரு சத்தியம் பிறழ்வது தரியேம்
கலையு ணர்ந்தநீ யெமக்கிது கழறுவ தழகோ? 26

இம்மை அம்மைவீ டெனமறை புலங்கொள வியம்பும்
மும்மை யுந்தரு முறையுடைத் தெனுநிலை முரணி
எம்மை ஆழ்வயிற் றடக்கிமீட் டுமிழ்கலா எரிவாய்
வெம்மை கூர்நர குய்க்கினும்மெய்ம்மையைவிடேமால். 27

பதியி ழந்தனம்: பாலனை இழந்தனம்: படைத்த
நிதியி ழந்தனம்: இனிநமக் குளதென நினைக்கும்
கதியி ழக்கினுங் கட்டுரை இழக்கிலோம்” என்றார்.
மதியி ழந்துதன் வாயிழந் தருந்தவன் மறைந்தான். 28

“வழக்கின் என்றும்நீ வழிபடு தெய்வத்தை வணங்கிக்
கிழக்கு நோக்கிஈண் டிரு”எனக், கிளிமொழி மடந்தை
பழக்கமானவக் கணவனைப் பரவி “என் ஆவி
இழக்கற் கஞ்சிநீ அறம்வழு வேல்” என இயம்பும். 29

பொருந்து நீத்தத்தில் புற்புத வாழ்வைநீ மெய்யென்(று)
அருந்த வத்தையும் அறத்தையும் மெய்யையும் விடுத்து,
வருந்தல் மன்னவ, வழிவழி சிறக்”கென வாழ்த்தி,
இருந்த பின்சுடர் வாட்படை வலக்கையின் எடுத்தான். 30

“உலகு யிர்க்கெலாம் பசுபதி ஒருமுத லாயின்
அலகில் சீருடை அவன்மொழி மறையெனின் அதன்கண்
இலக நம்பல வற்றினும் வாய்மையீ டிலதேல்
விலகு றாமல் அவ் வாய்மையை விரதமாக் கொளின்யான்

நெறியின் அன்னவென் றனைவிடா நிறையிவட் குளதேல்,
இறுதி யின்மையைப் பெறுக. இல்லெனின் இவள் இறுதி
பெறுக” என்றுவாள் வீசினன்: பேதைதன் கழுத்தில், 32
மறுமணத்திடு மாலையாய் வீழ்ந்ததவ் வடிவாள்.

---

## முதல் ஆயிரம்.

# XIII. பெருமாள் திருமொழி.

## ஐந்தாம் திருமொழி.

தருதுயரம் தடாயேல்உன் சரணல்லால் சரணில்லை*
விரைகுழுவு மலர்ப்பொழில்சூழ் வித்துவக்கோட் டம்மானே!*
அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும்* மற்றவள்தன்
அருள்நினைந்தே அழுங்குழவி அதுவேபோன் றிருந்தேனே. 1

கண்டார் இகழ்வனவே காதலன்றான் செய்திடினும்*
கொண்டானை அல்லால் அறியாக் குலமகள்போல்*
விண்டோய் மதிள்புடைசூழ் வித்துவக்கோட் டம்மா!* நீ
கொண்டாளாய் ஆகிலுமுன் குரைகழலே கூறுவனே. 2

மீன்நோக்கும் நீள்வயல்சூழ் வித்துவக்கோட் டம்மா!* என்
பால்நோக்காய் ஆகிலுமுன் பற்றல்லால் பற்றிலேன்*
தான்நோக்கா தெத்துயரம் செய்திடினும்* தார்வேந்தன்
கோல்நோக்கி வாழும் குடிபோன் றிருந்தேனே. 3

வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல்நோய் ஆளன்போல்*மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக்கோட் டம்மா!*நீ
ஆளா வுனதருளே பார்ப்பன் அடியேனே. 4

வெங்கட்டின் களிறடர்த்தாய்! வித்துவக்கோட் டம்மானே!*
எங்குப்போய் உய்கேன்உன் இணையடியே அடையல் அல்லால்*
எங்கும்போய்க் கரைகாணா தெறிகடல்வாய் மீண்டேயும்*
வங்கத்தின் கூம்பேறும் மாப்பறவை போன்றேனே.* 5

செந்தழலே வெந்தழலைச் செய்திடினும்* செங்கமலம்
அந்தரஞ்சேர் வெங்கதிரோற் கல்லால் அலராவால்*
வெந்துயர்வீட் டாவிடினும் வித்துவக்கோட் டம்மா!*உன்
அந்தமில் சீர்க்கல்லால் அகங்குழைய மாட்டேனே. 6

எத்தனையும் வான்மறந்த காலத்தும்* பைங்கூழ்கள்
மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும் மற்றவைபோல்*
மெய்த்துயர்வீட் டாவிடினும் வித்துவக்கோட் டம்மா!*என்
சித்தமிக வுன்பாலே வைப்பன் அடியேனே. 7

தொக்கிலங்கி யாறெல்லாம் பரந்தோடித்* தொடுகடலே
புக்கின்றிப் புறம்நிற்க மாட்டாத மற்றவைபோல்*
மிக்கிலங்கு முகில்நிறத்தாய்! வித்துவக்கோட் டம்மா!*உன்
புக்கிலங்கு சீரல்லால் புக்கிலன்காண் புண்ணியனே! 8

நின்னையே தான்வேண்டி நீள்செல்வம் வேண்டாதான்
தன்னையே தான்வேண்டும் செல்வம்போல்,*மாயத்தால்
மின்னையே சேர்திகிரி வித்துவக்கோட் டம்மா!*
நின்னையே தான்வேண்டி நிற்பன் அடியேனே. 9

வித்துவக்கோட் டம்மா!நீ வேண்டாயே ஆயிடினும்*
மற்றாரும் பற்றிலேன் என்று அவனைத் தாள்நயந்த*
கொற்றவேல் தானை குலசேகரன் சொன்ன*
நற்றமிழ் பத்தும்வல்லார் நண்ணார் நரகமே. 10

வில்லிபுத்தூர் ஆழ்வார் இயற்றிய

# XIV. மகாபாரதம்.

## கன்ன பருவம்.

### பதினேழாம் போர்ச்சருக்கம்.

கன்னன் தன் புண்ணியத்தைக் கண்ணனுக் கீந்தது.

ஈர்ஒரு பிறப்பில் ஒருசிறு குறளாய்
யாவரும் தேவரும் வியப்பக்
கார்ஒரு வடிவு கொண்டெனச் சென்று
காவல்கூர் மாவலி அளித்த
நீர் ஒரு கரத்தில் வீழுமுன் தரங்க
நீல்நிற மகரநீர் உடுத்த
பார் ஒரு கணத்தில் அளவிடும் கமல
பாதனார் நாதனார் நமக்கே. 1

எத்தலங் களினும் ஈகையால் ஒகை
வாகையால் எதிரிலா வீரன்
மெய்த்தல முழுதும் திறந்துகு குருதி வெயிலவன்
கரங்கள் போல் உகுப்ப,
கொத்தலர் அலங்கள் மகுடமும் கவச
குண்டலங் களுமுருக் குலைந்து
கைத்தல மறந்த தில்லை; விற் குறிப்பும்
கடுங்கணை தொடுத்திடும் கணக்கும். 2

அத்தவெற் பிரண்டு விற்கிடை எனப்போய்
ஆதபன் சாய்தல்கண் டருளி,
முத்தருக் கெல்லாம் மூலமாய் வேத
முதற்கொழுந் தாகிய மூர்த்தி,
சித்திரச் சிலைக்கை விசயனைச் 'செருநீ
ஒழி'யெனத் தேர்மிசை நிறுத்தி,
மெய்த்தவப் படிவ வேதியன் ஆகி
வெயிலவன் புதல்வனை அடைந்தான். 3

தாண்டிய தரங்கக் கருங்கடல் உடுத்த
    தரணியில் தளர்ந்தவர் தமக்கு
வேண்டிய தருதி நீஎனக் கேட்டேன்
    மேருவின் இடைத்தவம் பூண்டேன்;
ஈண்டிய வறுமைப் பெருந்துயர் உழந்தேன்;
    இயைந்ததொன் றிக்கணத் தளிப்பாய்
தூண்டிய கவனத் துரகதத் தடந்தேர்ச்
    சுடர்தரத் தோன்றிய தோன்றல்!' 4

என்றுகொண் டந்த அந்தணன் உரைப்ப
    இருசெவிக் கமுதெனக் கேட்டு,
வென்றிகொள் விசயன் விசய வெங்கணையால்
    மெய்தளர்ந் திரதமேல் வீழ்வோன்
நன்றென நகைத்துத் 'தரத்தகு பொருள்நீ
    நவில்'கென நான்மறை யவனும்,
'ஒன்றிய படிநின் புண்ணியம் அனைத்தும்
    உதவு'கென் றலுமுள மகிழ்ந்தான். 5

ஆவியோ நிலையிற் கலங்கிய தியாக்கை
    அகத்ததோ புறத்ததோ அறியேன்;
பாவியேன், வேண்டும் பொருளெலாம் நயக்கும்
    பக்குவம் தன்னில்வந் திலையால்.
ஓவிலா தியான்செய் புண்ணியம் அனைத்தும்
    உதவினேன் கொள்கநீ, உனக்குப்
பூவில்வாழ் அயனும் நிகர் அலன் என்றால்
    புண்ணியம் இதனினும் பெரிதோ?' 6

என்னமுன் மொழிந்து கரங்குவித் திறைஞ்ச,
    இறைஞ்சலர்க் கெழிலிஎ றனையான்
கன்னனை யுவகைக் கருத்தினால் நோக்கிக்,
    'கைப்புனல் உடன்தரு' கென்ன,

அன்னவன் இதயத் தம்பின்வாய் அம்பால்
அளித்தலும் அங்கையில் ஏற்றான்:
முன்னம்ஓர் அவுணன் செங்கை நீர்ஏற்று
மூவுல கமும்உடன் கவர்ந்தோன். 7

மல்லல்அம் தொடையான் நிருபனை முனிவர்,
மகிழ்ந்து'நீ வேண்டிய வரங்கள்
சொல்லுக. உனக்குத் தருதும்'என் றுரைப்பச்
சூரன்மா மதலையும் சொல்வான்:
'அல்லல்வெவ் வினையால் இன்னமுற் பவமுண்
டாயினும் ஏழ்எழு பிறப்பும்
இல்லைஎன் றிரப்போர்க் கில்லைஎன் றியம்பா
இதயநீ ஈந்தருள்' என்றான். 8

மைத்துனன் உரைத்த வாய்மைகேட் டையன்
மனமலர் உகந்துகந் தவனைக்
கைத்தல மலரால் மார்புறத் தழுவிக்
கண்மலர்க் கருணைநீர் ஆட்டி
'எத்தனை பிறவி எடுக்கினும், அவற்றுள்,
ஈகையும் செல்வமும் எய்தி,
முத்தியும் பெறுக முடிவில்'என் றுரைத்தான்
மூவரும் ஒருவனா மூர்த்தி. 9

போற்றிய கன்னன் கண்டுகண் களிப்பப்
புணரிமொண் டெழுந்தகார் முகிலை
மாற்றிய வடிவும் பஞ்சவா யுதமும்
வயங்குகைத் தலங்களு மாகிக்
கூற்றுறழ் கராவின் வாயினின் றழைத்த
குஞ்சர ராசன்முன் அன்று
தோற்றிய படியே தோற்றினான்:முடிவும்
தோற்றமும் இலாதபைந் துளவோன். 10

பவணந்தி முனிவர் அருளிச்செய்த

# XV. நன்னூல்.

## பொதுப்பாயிரம்.

### பாடங்கேட்டும்முறை.

கோடல் மரபே கூறுங் காலைப்
பொழுதொடு சென்று வழிபடல் முனியான்
குணத்தொடு பழகி அவன்குறிப் பிற்சார்ந்து
இருவென இருந்து சொல்லெனச் சொல்லிப்
பருகுவன் அன்ன ஆர்வத்த னாகிச்
சித்திரப் பாவையி னத்தக வடங்கிச
செவிவா யாக நெஞ்சுகள னாகக்
கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத்துப்
போவெனப் போதல் என்மனார் புலவர். 1

### நூற்பயிற்சி செய்யும் விதம்.

நூல்பயி லியல்பே நூவலின், வழக்கறிதல்,
பாடம் போற்றல், கேட்டவை நினைத்தல்,
ஆசாற் சார்ந்தவை யமைவரக் கேட்டல்,
அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்,
வினாதல், வினாயவை விடுத்தல் என் றின்னவை
கடனாக் கொளினே மடநனி இகக்கும். 2

# வசனபாகம்.

## குமணன்.

தென்னிந்தியாவில் கொங்கு என்று ஒரு நாடு உண்டு, அது நீர்வள நிலவளங்களிற் சிறந்தது. அந்நாட்டின் தலைநகர் குமணபுரி. அதில், பல ஆண்டுகளுக்குமுன், ஓரரசன் ஆட்சிபுரிந்து வந்தான். அவன் பெயர் குமணன்; வரையாது கொடுப்பவன் ஆதலால் 'வள்ளல்' என்னும் பெயர் வாய்ந்தவன். அவன், அறிவு, அழகு, நீதி, வாய்மை, கொடை, வலிமை ஆகிய இவற்றில் முறையே பிரகஸ்பதி, அநங்கன், தருமன், அரிச்சந்திரன், கர்ணன், வீமன் ஆதியோரைப்போன்றவன். குமணன் இவ்வாறு சிறந்திருந்ததால் அவனது நாடு எத்தகைய குறைவுமற்றிருந்தது.

அவ் விறைவன் அமிழ்தினுமினிய நம் தாய்மொழியாம் தமிழ்மொழி மாட்டுப் பேரபிமான முடையவன். ஆதலால், தானும் தமிழை இயன்றவாறு கற்றதுமன்றிப் புலவர் எவரேனும் வந்து, 'தருக அப்ப' என்றால், 'வருக அப்ப' என்று அழைத்து, அவர்கட்கு வேண்டுவன கொடுத்துதவினன். எனவே, கற்றோரைக் கற்றோரே காமுறுவர் என்றவாறு, அவன் பாவலரை எப்பொழுதும் மெச்சிப் பாராட்டியது வியப்பிற் கிடனன்று.

இம் மன்னனுக்கு இளங்குமணன் என்றொரு இளவல் உண்டு. அவனை அமணன் என்றும் கூறுவர் அவன் இயற்கையில் நல்லோனாயினும் கூட்டுறவால் கெட்டவன; அற்பர் சேர்க்கையால் பணஞ்சேர்க்கும் கிருபணன் ஆயினன். ஆகவே, அவன் தன் அண்ணனது வள்ளன்மையைச் சிறிதும் விரும்பவில்லை.

ஆங்ஙனமிருக்க, அவனது கூடா நட்பினர் ஏதேனும் அவனிடமிருந்து பின்னர்ப் பொருள் பெறலாம் என்னும் எண்ணத்தாற் குமணனது கொடையால் கேடுவிளையு மென்று; அவனுக்குத் துர்ப்போதனை செய்து அவன் மனத்தை முன்னிலும் அதிகமாகக் கெடுத்தனர்.

கரைப்பவர் கரைத்தால் கல்லுங் கரையு மன்றோ? ஒரு நாள் அவன் தன் தமையனை நோக்கி "அண்ணா! நான் கூறுவதற்குச் செவிகொடுக்க வேண்டுகிறேன். 'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும், அப்பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு' என்று ஆன்றோர் கூறியிருப்பதால் என்னைக் கோபிக்கலாகாது" என்றான்.

குமணன்—நீ சொல்லப்போவ தின்னதென்றெனக்கு விளங்கவே யில்லை.

அமணன்—வேறொன்று மில்லை யண்ணா! நீங்கள் மனங் கொண்டபடி பணஞ் செலவழிப்பதும், புலவரையும், மற்றோரையும் போற்றுவதும், எனக்குச் சிறிதும் ஒப்பவில்லை. பணமில்லா விட்டால் இவ்வுலகில் பிணமாக வன்றோ ஆதல் வேண்டும்?

குமணன்—இவ்வண்ணம் சொன்னது எனது அருமைத் தம்பிதானா?

அமணன்—ஆம். உங்கள் தம்பியே. நீங்கள் கோபிக்க வேண்டாம். உங்களுக்குப் பொருளினருமை தெரியாததா லிப்படிச் செய்கிறீர்கள். நான்சொல்வதை முழுதும் கேட்டால் உங்களுக்கு உங்கள் தவறு தானே தெரியவரும். உலகத்திலொருவனுக்கு உயர்வும் தாழ்வும் செல்வத்தாலேயே

உண்டாகின்றன. இவ்வுலகத்தில் மட்டுமோ அது? காமதேநு கற்பக விருக்ஷம் சிந்தாமணிமுதலிய செல்வங்களிருப்பதாலன்றோ இந்திரன் தேவரால் மதிக்கப்படுகிறான்? சங்கநிதி பதும நிதிகளை கொண்டதாலன்றோ குபேரனைப் பரமசிவனுங்கூடத் தோழமைகொண்டான்? இன்னும் கைலாச நாதனே பொருள் விருப்பைக் காட்டவன்றோ பொன்மலையாகிய மேருவைக் கைக் கொண்டான்? இன்னும் மகாவிஷ்ணுவும் ஆதிசேஷன்மேற் பள்ளிகொண்டது அதன் படத்திற்கு பணமென்று பெயரிருத்தலா லன்றோ? பெயர் மாத்திரையிற் பணமென்றவுடன் மகாவிஷ்ணுவும் இங்ஙனம் அதனை யகலாதிருப்பவும், செல்வத்தின் நிலைமையை அறியாத சில அறிவிலாதவர்கள் அது நிலையாததென்று கூறுவர்.

செல்வனே நினைத்ததைச்செய்வான். அவன் கற்றிலனயினுங் கற்றவன். நண்பற்றவனாயினு முற்றவன் எங்குச் சென்றாலு மவனுக்கே மரியாதை. ஒழுக்கமு முயர்குடிப்பிறப்பு மில்லாதாயினு மவைகளுள்ளவனவனே. தரித்திரன், கல்வியினும், குலத்தினும், குணத்தினும், ஒழுக்கத்தினும், எவ்வளவோ மேலானவனாயிருந்தாலும் தாழ்ந்தவனாகக் கருதப்படுகிறான். இவ்வுலகில், பொருளில்லாதவன் அனுபவிப்பது துன்பமேயன்றியின்பமன்று. பெற்றதாயும் தாரமுங்கூட அவனை வெறுப்பார்களென்றால், அவன் நிலைமை எத்தகைத்து? செல்வத்தைப் பெற்றுமதைப் போற்றாது கண்மூடித்தனமாய்ச் செலவு செய்யலாமா?

கொடுத்துக்கெட்டவர் கோடி கோடியே. வாமனனுக்கு உலகத்தைத் தாரைவார்த்து மாபலி உயிர் துறந்தான். அரிச்சந்திரன், விசுவாமித்திரன் கேட்டதைக் கொடுத்த

தன்மையரல்லன்றோ நாடு நகர் மனைவி மக்களை யிழந்து பறையனுக் கடிமைப்பட்டான்? கண்ணன், கவச குண்டலங்களையும், புண்ணியத்தையும் ஈந்ததாலன்றோ உயிர் துறந்தான்? இன்னும் ததீசி முனிவன் மாண்டதெப்படி? தன் முதுகெலும்பை இந்திரனுக் கீந்ததாலன்றோ?

இவற்றால், செல்வம் போற்றலால் வருஞ் சிறப்பையும், ஈகையால் வரும் இழிவையும் ஐயந் திரிபற உணர்ந்துகொள்ளலா மன்றோ? நீங்கள் சிறிதும் சிந்தனையின்றிச் செல்வத்தைப் போக்கிக்கொண்டால் பின்னர் எதைக் கொண்டரசாள்வது? கொஞ்சகாலத்தில் நீங்கள் வறியோர் என்னும் வசை பெறுவீர்கள். இவ்வசை உங்களோடு மட்டுமா போகும்! உங்கள் சந்ததியாரையும் சாருமன்றோ? இவ்வசையை நான் ஒழிக்க விரும்புகிறேன்: நீங்கள் நாட்டை என்வயின் விடுத்துக் காடடைய வேண்டும். அது செய்யப் பிரியமில்லாவிடில் எவ்விதத்தேனும் நாடு கைக்கொள்வேன். உள்ளே ஒன்றை யெண்ணி, வெளியே யொன்றைச் சொல்ல எனக்குத் தெரியாது; என்ன சொல்லுகிறீர்கள்?''

'உடன் பிறந்து முயிர் வாங்கும்' நோயைப் போன்ற இளைஞன் கூறிய கடுஞ்சொற்களைக்கேட்ட காவலன், சிறிது மவனைக் கோபியாது, அவன் மதிக்குறைவை எண்ணி யெண்ணி வருந்தினான். அவனை நல்வழிப்படுத்தக் கருதி, குமணன் அவனை நோக்கி, "தம்பி இதுதானா அரிய காரியம்? நீ, கேட்கக்கூடாத தொன்றும் கேட்கவில்லை, அரசு தர எனக்குத் தடையில்லை. இனி நீயே யரசன். ஆயினும் நீ சொன்னதற்குப் பிரதியாக நான் கூறும் இவற்றைக் கேள்" என்றான்.

அமணன்--(உள்ளங்களித்து) அண்ணா? சொல்லுங்கள்.

குமணன்--நீ சொல்லிய தொருவாறொப்பத் தக்கதே. ஆயினும், செல்வம் போற்றலாற் சிறப்பையும், ஈகையால் ஈனத்தையும் அடைய நேரிடுமென்றாய். நீ மதிக்கும் நிதியானது அநித்தியமே. அதற்குச் 'செல்வம்' என்ற அதன் பெயரே சான்று. பெரியோரால் வெறுக்கப்படுதலால் அதற்கு வெறுக்கை யென்று இன்னொரு பெயருமுண்டு. செல்வமிருப்பதாற்றான் இந்திரனை அந்தரத்தவரெல்லாம் வணங்குகிறார்களென்றாய்! அவன் எத்தனைப் பொருளை உலகில் கொடுத்து அவனிருக்கும் அப்பதவியைப்பெற்றான்? இருக்கட்டும்; அவன் அடைந்தபொருள்களால் போக மனுபவிக்கலாமே தவிர, அவனுக்கு வேறு என்ன கிடைக்கும்? குபேரன்செல்வம் பெற்றதும், பரமசிவனைத்தோழமை பெற்றதும் அவனது பெருந்தவத்தாலன்றோ? பணத்தாசையால் பரமன் குபேரனைச் சார்ந்தானென்றாயே? என்ன கைம்மாறு கருதி அப்பரமன் உன்னைக் காப்பாற்றுகிறான்?

பேதாய்! கைலாசநாதன் பொருள் வேட்கையால் பொன்மலை எடுத்தான் என்றாய். அவன், எரிகின்றமழுவும் உடுக்கையும், மண்டையோடும், மானும் கொண்டதற்கும், பாம்பை, அணிந்திருப்பதற்கும் என்ன காரணம் கூறுவாய்? மாதவன் ஆலிலை மேலிருப்பதற்கு என் புகல்வாய்? ஆஹா! இந்திரனுக்கு முற்கூறிய செல்வமெல்லாம அளித்தவன் இம்மாதவனன்றோ! இவற்றை நீயறியாமற் போனதென்?

மற்றும், அறிவில்லாதவரிற் சிலர் பொருளை நிலையற்றதெனச் செப்பினர் என அவரை இகழ்ந்தனை; அவர் அறிவில் ஆதவரே. 'அறிவில் ஆதவரே' என்பதன் பொருளை

மட்டும் அறிந்தால், நீயே அறிஞன். புலவர் இரப்போ ரென்று பலவாறு இகழ்ந்தாய். பரமசிவனே ஒருகால் புலவ னாதற்கு விரும்பினனென்றால், புலவர் பெருமை எத்துணை யென்று எண்ணித் துணி. பாவலரை நம்மிலும் தாழ்ந்தவ ரென்று எக்காலும் நீ எண்ணேல். மன்னனுக்குத் தன் தேசத்திற்றான் சிறப்பேயன்றிப் பாவலரைப் போல் எத் தேசத்திலும் சிறப்பில்லை. அவர்கள், கருணைகொண்டு நம்மை நற்பதவியிற் சேர்ப்பித்தற் பொருட்டு வந்த தர்ம ஸ்வரூபிகள். உயர்ந்தமணியை ஒருவன் விலை கணிக்க அறியாவிட்டால் அது அவனது தாழ்வே. அதனால் அதன் பெருமை குன்றாது. அவர்களது சிறப்பை நாம் உணரா விட்டால், அது நமது அறிவின்மையே.

சகோதர! பணத்தால் எப்பயனும் உளதென்றாய்: மூன்று உலகங்களும் ஆட்சிபுரிந்த இராவணனை வானரச் சேனையோடுசென்ற இராமன் அழிக்கவில்லையா? அக்கால் அவனது செல்வம் அவனுக்கு என்ன துணை செய்தது? இன்னும், செல்வச் செருக்கால் அழிந்தவர் எத்தனை பேர்! துருவாசரால் கொடுக்கப்பட்ட மாலையை இகழ்ந்து, இந் திரன் அழிந்தது, அவனது பொருட் செருக்கா லன்றோ? சூரபதுமனும், இரணியனும் இறந்ததற்கும் காரணம் இதுவே யன்றோ? செல்வராயிருந்து, தருமவழியில் நின்று பலர்க்கும் தம்மா லியன்ற உதவி செய்பவர், இவ்வுலகில் யாவராலும் புகழப்படுவதோடு, மோக்ஷமும் அடைவது திண்ணம். இரப்போர்க்கு ஈவோர், மறுபிறப்பில் முன்னை யினும் செல்வமுற்றுச் சுகமுறுவர். செல்வம் உற்றும், அதனை நன்னெறியிற் செலவிடாதவர்கள், ஆபுதங் கைக் கொண்டு அதனை உபயோகிக்க முடியாத பேடிக்கும், பணங்காக்கும் பூதத்துக்கும் சமமாவர்.

சிலர், கொடையால் அழிந்தனரென்றாய். கொடையால் அன்றோ மகாபலி திருமாலின திருவடித் தாமரையைச் சிரமீதுற்றான். அரிச்சந்திரன் விஸ்வாமித்திரனுக்கு ஈந்தகொடையா லன்றோ மும்மூர்த்திகளையும் இம்மையிலேயே தரிசிக்க நேர்ந்தது. துரியோதனனிடம் சிறு நாட்டை யடைந்தும், கன்னன் கீர்த்தி உற்றதற்கும், ஆவி தளரும் சமயத்தில் அரிநாமம் கூறி, அவனைத் தரிசித்து, "இல்லை யென்று இரப்போர்க்கு இல்லையென்னாமையா இதய நீ அளித்தருள்" என வரங்கேட்டுப் பெற்றதற்கும், கொடையன்றோ காரணம்! தனது முதுகெலும்பு கொடாவிட்டால், ததீசி முனிவன் இறக்க மாட்டானென்றெண்ணுகிறாயா? "இவ்வுலகத்துள ஒவ்வொருமனிதனும், முன்னோ பின்னோ இறப்பது திண்ணம்," என்பதை எண்ணித் தன் முதுகெலும்பு கொடுத்ததால், அவன் யாவராலும் புகழப்படுகிறான்.

"இல்லறஞ்செய் இல்லவளு மனையரு மிருநிதியும்
நல்லரசும் வளநாடு நமனார்கைப் படும்பொழுது
புல்லும்ஒரு துணையாகப் பொருந்துவவோ அறமொன்றே
வல்லதுணை யாய்இருந்து வாட்டமுறல் மாற்றிடுமால்."

"அகழ்தருமண் புழுநரிநாய் அனைத்துமெதிர் பார்த்திருக்கும்
இகழுடம்பை அடைந்தவர்கள் இருக்கையிலும் இறந்தவரே:
திகழிரவி சவிநாணத் தேயமெலா மிகவிளங்கும்
புகழுடம்பைப் பொருந்தினவர் பொன்றுகினும் பொன்றாரே."

"அன்பிலரே எப்பொருளும் அழிந்தயலர் தமக்குரியார்
அன்புடையார் என்பினுடன் ஆவியுமே பிறர்க்குரியார்
என்பதைமுன் சிபிவேந்தன் இளம்புறவுக் கின்பமுற
என்பதையும் அளித்தழியா விசையடைந்த திசையாதோ."

பேதாய்! ஈகையிற் சிறந்ததில்லை யென்று துணிந்து, அயலார் கேட்பினும் அரசளிக்கச்சித்தமாயிருக்கும் நான், அதற்கு உரியவனாகிய நீ கேட்டால் கொடுக்க மறுப்பனோ?

நிலையற்ற இவ்வகச் செல்வம் நீ பெற்று, நிலையுற்ற செல்வமாகிய தவத்தை எனக்குக் கொடுத்தாய். இதனால், நீ எனக்குத் துணைவன் என்னும் சொற்பொருளை நன்கு விளக்கினை. ஆகலால் இன்றுமுதல், உன்னை நான் தம்பியென்று சாற்றுவதிலும், எனது அக்ஞானத்தை நீக்கி, அறிவு என்னும் ஜோதியைத் தந்த சற்குரு என்பதே சரி. தம்பி! நான் செல்கின்றேன். நல்ல காரியத்தை உடனே செய்வது நன்று. 'அந்தணர் ஒழுக்கமும், அரசர் மாட்சியும், மந்தரமில்லையேல், மலரு மாண்பில' ஆகலால், நன்மந்திரிமாரை அவமதியாது, அவர் மொழிகேட்டு ஒழுகுவாயாக. நீ உய்ய விரும்பினால், நான் கூறியவாறு நடப்பாயாக' என்று நவின்று பின் காட்டிற்குப் புறப்பட்டான்.

அமணனது உலோப குணத்தையும் கொடுங்கோன்மையையும் அனுபவ சித்தமாய் அறிந்த பிரஜைகள், தருமமே மானிடவுருக்கொண்டதென வந்த குமணன், நாடு நீங்கிக் காடுசெல்லத் துணிந்ததைக் கண்டு மதிமயங்கி நெருப்பிலிட்ட மெழுகுபோல் உருகினர். "அண்ணலே! கிளியைவளர்த்துப் பூனை வாயிற் கொடுப்பதுபோல் எங்களை உங்கள் அநுஜனிடம் விடுத்துச்செல்வது சரியோ?" என்றனர் சிலர், வேறு சிலர், "குமண ராஜனைக் காட்டுக்குத் துரத்திய பாவியை, இப்பொழுதே கொன்றால் தான் என்ன? நமது அரசனது தம்பியாய் இருக்கலினன்றோ, உயிர் பிழைத்துளான்" என்றார்கள் மற்றும் சிலர், 'சிங்கமிருந்து ஆட்சிபுரியும் இடத்தில், நரி இருப்பதுபோல் அமணனிருக்கும் ஆட்சி' என்றார்கள். இன்னும் சிலர், 'கொடுங்கோன் மன்னர் வாழு நாட்டில் கடும்புலி வாழுங் காடு நன்று' ஆதலின் நாம் காட்டிற்குப் போவோ'மென்றனர்.

பின்னும் சிலர், 'நம்மை இவ்வாறு துயர்க்கடலிலாழ்த்திச் செல்லும் மன்னர், தமக்கு இயற்கையிலுள்ள இரக்கத்தை எங்கு உகுத்தனரோ! ஐயோ! கன்று கதறக் கரையாத கறவையும் உண்டோ?' என்றேங்கினர்.

இவ்வாறு புலம்பும் பிரஜைகளைக் கையமர்த்தித்தேற்றிக் குமணன், பின் வருமாறு கூறினன்: "நல்லீர்! நீங்கள் எனது தம்பியைத் தூஷிப்பது தகுதியன்று. என் தம்பியும், இவ்வரசுக்கு உரியவனாதலால், அவனது ஆணைக்குட்பட்டு நீங்கள் நடப்பதே எனக்கு உடன்பாடு. இதுவே முறையுமாம். இதுவரை நான் உங்களுக்கு வேண்டுவன செய்தேன். இனி எனக் குறுதிபயக்கும் தவம் செய்யப் புறப்பட்டேன். ஆதலின், சூரிய சந்திரர் திசைமாறிச் செல்லினும், என் எண்ணத்தை மாற்றேன். சென்று வருகிறேன்" என்று யாவர்க்கும் விடைகொடுத்துவிட்டு நகர்ப்புறம் நடந்தான். அப்பொழுது அந்நகர் முழுதும் துன்பத்தில் ஆழ்ந்தது. பூவையர் புலப்பமும், ஆடவர் அரற்றலும், குழவிகள் கூக்குரலும், ஒன்றுசேர்ந்து கடலின் ஒலியையும் அடக்கின. புவிராயர் போற்றும் கவிராயர் பலர், தாம் செல்வமிழந்ததாயும் அறிவிழந்ததாயும் உயிரிழந்ததாயும் கருதிப் புலம்பிக் குமணபுரியினின்று நீங்கினர்.

அரசன் சென்றதும் இளையவன் குடிகளைப் பலவாறு துன்புறுத்தலானான். அவன் அவர்களுக்கு முன்னினும் பதின்மடங்கு இறையேற்படுத்தினன். மந்திரிமார் உரையை அவன் மதிக்கவில்லை.

"அறத்தையும் நோக்கான், செவ்வி அருளையும் நோக்கான், அன்புத் திறத்தையும் நோக்கான், கொண்ட சிறப்பையும் நோக்கான், எய்தும் மறத்தையும் நோக்கான், பண்டை வழக்கையும் நோக்கான் ஆகிப் புறத்தொடும் அகத்தும் செல்வப்பொருளையேநோக்கி வாழ்ந்தான்"

ஒருநாள் தனித்திருக்கையில், பழைய அரசனது ஞாபகம் அவனுக்கு வந்தது. வரவே, அவன், 'எனது அண்ணன் நான் கேட்டவுடன் நாட்டை என்னிடம் கொடுத்துவிட்டுக் காட்டுக்குப் போயினன். இதில் ஏதோ சூதிருப்பது திண்மை. அவன் நல்ல எண்ணத்தோடு கொடுத்திருக்கமாட்டான். சலவைக்கற்களால் ஆகிய மாடத்திலிருந்து அமிருதம் போன்ற உணவுகளை உண்டும், சங்கீதத்தைக் காதாரப் பருகியும் சுகித்திருந்தவன், கல்லும் முள்ளும் காலிற் குத்தவும், கந்தமூலாதிகளை உண்ணவும், புலி, கரடி, சிங்கம் முதலியவற்றின் சத்தம் காதைத் துளைக்கவும் பெற்றுக் காட்டில் எதற்காகத்தா னிருப்பான்?'' என்று எண்ணினான். இவ்வெண்ணத்திற்குக் காரணமும் அவனது தீய நட்பினரின் தூண்டுதலே.

முற்கூறியபடி அமணன் நினைத்ததோடு, தான் திடீரெனச் சென்றெதிர்த்ததால், எதிர்க்கமுடியாமல், குமணன் நகரினின்றும் போய்விட்டானென்றும், தக்கவாறு வலிமையடைந்த பிறகு தன்னை வந்து எதிர்ப்பானென்றும், அச் சமயம் குடிகளும் அவனையே சேர்வார்களென்றும் நிணைந்து, குமணனது தலையைக்கொண்டு வருகிறவர்களுக்குக் கோடிப்பொன் பரிசளிப்பதாய், மறுநாளே பறையடிப்போரை வரவழைத்து ஊரெங்கும் முரசறையுமாறு பணித்தான். பறையடிப்போர் அந்தப் பாவியின் தண்டனைக்கஞ்சி, அவ்வாறே செய்தனர். இச்செய்தி எட்டவே,

"செவிகரம்புதைத்தார் சில்லோர். திரண்டெழுந் தழுதார்சில்லோர்.
குவிகரத் தொழுதெம் மானைக் கூய்முறை இட்டார் சில்லோர்.
இவைசெய லென்று காணு தேங்கிநெட் டுயிர்த்தார் சில்லோர்.
புவியுறல்வெறுத்தார் சில்லோர். புரண்டுசோர்ந் தழுதார் சில்லோர்."

கொடியவன் ஆணையை கேட்டவரிற் சிலர், விரைந்து சென்று குமணனிடம் விஷயத்தைத் தெரிவித்தால், அவன் உயிர்தப்புவன் என்றெண்ணிக் காட்டிற்போய், அவ் வள்ளலைச் சந்தித்துக், கண்ணீரால் அவனது காலைக் கழுவிக் கைகூப்பிநின்று, நிகழ்ந்ததை யறிவித்தனர். அறிவித்தலும் குமணன் சிறிதும் வருந்தாது,

"ஆயுவோ யுற்ற காலை அடுப்பவர் அருவ ருக்கச்
சீயொடு புழுவும் மண்ணும் சேருமிச் சென்னி தன்னை
மீயுயர் செம்பொன் கோடி விலையென விளங்கச் செய்தான்
தாயினும் இனியன் எம்பி தானெனக் கருத லுற்றான்."

பிறகு நகர்வாசிகள் அடைந்த கலக்கத்தைக் கழித்துத், திரும்ப ஊர் செல்லுமாறு சொல்லிவிட்டுத், தானும் அக்காட்டில் ஈசுவர தியானத்தில் ஈடுபட்டிருந்தான். நிற்க.

மதுரையம்பதியில் சாத்தனார் என்னுமொரு தமிழ்ப் புலவர் இருந்தார் அவர் சிறந்த அறிவுள்ளவர்; ஆதலின் 'பெருந்தலைச் சாத்தனார்' என்னப்பட்டவர். அவர் தமிழ் இலக்கிய, இலக்கணங்களைக் குறைவற முறையுறக் கற்றவர்: சாத்திரங்களின் சத்திய முணர்ந்தவர் புவியோர் போற்றும் கவிகளைச் செவ்வேனே செப்பும் சீரியர். குணத்துக்கு ஒரு கொள்கலம் போன்றவர்.

இத்துணைச் சிறப்புற்றும், மிடியே அவரிடம் குடிகொண்டிருந்தது "இருவேறு உலகத்தியற்கை திருவேறு தெள்ளியராதலும் வேறு" "மாமியும் மருகியும் மருவி வாழ்" தலரிது என்பவற்றுக் கிப்புலவர் ஒருதாரணமாயிருந்தார். சொல்லரும் செல்வமின்றேல் இல்லறம் இவ்வுலகிற் புல்லறம் ஆகுமென்பதை அறிந்தவராதலால்,

தமக்குற்ற மிடியை விலக்கக் கூடாமல் மதிமயங்கினர். ஈவாரின்மையால் 'பசியாலலேந்து, வெயிலாலுலர்ந்து, பனியால் நனைந்து' வருந்திய இவர் சென்று பலரைப் பாடியும் பயன் பெறவில்லை. ஒரு நாள் குமணனைப் பாடிப் பரிசு பெற்றுச் செல்லும் பெருஞ்சித்திரனர் என்னும் புலவரைச் சந்தித்து, அவரால் அம் மன்னனது ஈகைத்தன்மையைக் கேட்டுக் குமணபுரி நோக்கிப் புறப்பட்டார்.

பற்பல வனந்தரம் நாடு நகர் மலைகளைக் கடந்து செல்லுகையில் அவ்வரசனிருந்த காட்டின் வழியாய்த் தற்செயலாகச் சென்றார். தவஞ்செய்து நின்ற வள்ளல் அதுமுடிந்ததும் தன் அருகில் நின்ற புலவரை யாரென வினவினர். அவன் "பெரியீர்! யான் ஒரு தமிழ்ப்புலவன். குமண மஹாராஜாவைக் காணப்போகிறேன். உம்மைத் தரிசித்தேன்" என்றான்.

கவிவாணரது மொழியைக்கேட்ட அண்ணல், அவரை வணங்கிப் "புலவீர்! நான் செய்த புண்ணியமே இங்கு உங்களை வரச்செய்தது. நானே நீவிர் தேடிச்செல்லும் குமணன். அடியேனைத் தேடிச்செல்லும் பாக்கியம் கிட்டியதென்னையோ, எற்கு அருளல் வேண்டும்," எனப், புலவர்,

"அரசே! எங்கள் அருந்தமிழ் அண்ணல்!
தரித்திரம் என்பால் தரித்துள (து) என்றன்
அகத்துறு மக்கள் அன்ன மில்லாமலே
மிகத்துன் புற்று, விழைவொடு, தாயின்
முகத்தைப் பார்க்க அம் மோயும் என்முகம்
திகைத்து நோக்கச் சீரிய நின்முகம்
நோக்குமா வந்தனன். காக்குமாறருளே" என்றனர்.

அம்மொழிகளைக் கேட்ட அரசன், "அருங்கவிப் புலவீர்! யான் அரசாண்ட அந்நாள் வந்திரில்லையே. இந்தநாள் நொந்து, என்னை வந்து அடைந்தீர். என்ன செய்வேன்! ஆயினும் உங்கள் மிடி நீங்குமாறு ஒன்று சொல்லுகின்றேன். நான் சொன்ன சொற்றவறேன். நீங்களும் அதுசெய்யப் பின்னிடலாகாது" எனப், புலவரும் இசைந்தார். இசையவும், அரசன் "என் தலையைக் கொணர்பவருக்கு என் தம்பி கோடிபொன் கொடுப்பதாய் உறுதிசெய்துள்ளான். ஈந்தேன் என் தலை. இதனைக்கொண்டுபோய் அவனிடம் கொடுத்து அதன் விலையைப் பெற்று, உமது வறுமை நோயைத் தீர்த்துக் கொள்ளும். அங்ஙனம் செய்யின் மூன்று விதத்தில் நன்மையுண்டு. உமது வறுமையும் நீங்கும்; என் தம்பியின் கவலையும் கழியும்; எனக்குப் புகழும் மோக்ஷமும் கிடைக்கும். இது செய்ய மறுப்பின் முற்கூறிய நலங்களைச் சிதைத்தவர் ஆவதோடு வாக்குறுதி தவறியவரும் ஆவீர்" என்று கூறி, கைவாளைப் புலவரிடம் நீட்டித் தலையைச் சாய்த்து நின்றான்.

வள்ளல் ஈந்த ஒள்ளியவாளைத் தம் கையேற்ற புலவர், சிறிது நேரம் பலப்பல வெண்ணிக் கடைசியில், அரசனை நோக்கி "உயிர்க்கொடையளித்த உத்தம! உம்மை எங்ஙனம் புகழ்வேன்? முற்கால வள்ளல்கள், நம்முன், சூரியன்முன் மின்மினியே ஆவர். அரசே! எனக்கு ஈந்த இத்தலையை நான் விரும்பும்போது பெற்றுக்கொள்வேன். அதுவரை, நீவிர் அதை எவர்க்குமீயாமலிருப்பதோடு, காப்பாற்றியும் வைத்திருக்கவேண்டும். அதுகொண்டே நான் தரித்திரம் போக்கவேண்டியவன் அன்றோ? அது பிறர்கைப்படுமாயின்

நான் வறுமையால் இறக்கவேண்டி வரும்: எனது பெண்டு பிள்ளைகளும் என் பிரிவாற்ருது வருந்திச் சாவார். அப் பாவம் எல்லாம் யாரைச்சாரும்? ஆதலின் தலை சாக்கிரதை யாய் இருக்கட்டும்” என்றுகூறிச் சென்றனர்.

சென்றவர் மறுநாள் அமணனது அரண்மனை வாயில் அடைந்து,சேவகனிடம் தாம்குமணனது தலை கொணர்ந்த வரலாறு கூறி, அதை அரசனிடம் அறிவிக்க வேண்டினர். அமணன் புலவரை உடனே உள்ளே அனுப்புமாறு கட் டளையிட்டான்.

அதையறிந்த சபையிலுள்ள யாவரும் கண்ணீர் ஆருக் கரைந்து அழுது, உயிரற்ற பாவைபோல் தரையில் விழுந்தனர். அவர்கள் யாவர் முன்னும் புலவர் புக்குத் தான் கொண்டுவந்த தலையைத்தூக்கிப் பிடித்து, அதைச் சிதைத்த குமணனது வாளையும் உயர்த்திக் காட்டினர்.

அப்பொழுது அமணனுக்குத் தன் சேர்க்கை அறி வழிந்து, இயற்கையான சகோதர வாஞ்சை மேலிட்டது. என்னசெய்வான் பாவம்! “ஒஒ அண்ணு!” என்றலறி அடியற்ற மரம்போல் அவனிமேற்சாய்ந்து; “அண்ணலே! இனி என்ன செய்வேன்! ஐயோ அண்ணு! என்னை அநாத ஞக்கினீர்களே! இனி உங்களை எந்நாட் காண்பேன்! உடன்பிறவியின் உயிர் வாங்கவோ கொடியேன் உலகிற் பிறந்தேன்! என் உயிர்த்துணையே! ஆருயிரின் அன்பே! அறத்தின் பெருந்தவமே!’ சாம்போது என்னென்ன எண் ணினீர்களோ! தம்பியே கேடெண்ணியதால், இனி இவ் வுலகில் இருக்கவேண்டாமென்று இறந்தீர்களோ! தம்பி யினும் கொடியர் தரணியில் இலரெனத் தயங்கினீர்களோ!

ஆஹா! நீங்கள் இறந்ததைக் கண்டும் என்னுயிர் இன்னும் நீங்கவில்லையே! அண்ணா! அண்ணா! ஆ! எனது மனம் என்னை வருத்துகின்றதே! என்ன செய்வேன்! எவ்வாறு சகிப்பேன்! முடியாது. மகா பாவியாகிய நான், இவ்வுலகில் இருப்பது இதற்கோர் பெரும் பாரம்! இதோ நீங்கள் சென்றவிடத்திற்கு வந்துவிட்டேன்" என்று பலவாறு புலம்பித் தன் தலை துமிக்க வாளை உயர்த்தினன்.

அவ்வமயம் புலவர் அவனது கையை இறுகப் பிடித்துக்கொண்டு, "அரசே! பயப்படவேண்டாம்; அறிவீனத்தால் முன்னோரை அழித்தீர். அதற்காக உயிர் விடவும் துணிந்தீர். மதிக்குறைவால் இக்காரியம் செய்வித்ததால், இப்போது உம்மை மன்னித்துக் குமணனை உயிர் பெறப் பாடுவோம். பூமியிற் புலவர் செய்யமுடியாதன இல்லை. கடல் கரையழியினும், அதன் நீர் தித்தித்தாலும், மலைகள் நடந்தாலும், அக்கினி குளிர்ந்தாலும், எமது வாக்கு தவறாது. அப்படியிருக்க, நீர் பயப்படுவது என்? கையில் தேன் வைத்துக்கொண்டு இனிப்புத் தேடுவாருண்டோ? யாமிப்போது ஒரு கவி பாடினால் உமது உடன் பிறந்தார் உயிர் பெறுவது உறுதி" என்றார். அவ்வார்த்தை அமணனுக்குப் பேரானந்தம் விளைத்தது. உடனே அவன் புலவர் காலில் விழுந்து, அவ்வாறு மட்டும் செய்தால் வேண்டிய பொருளே யன்றித் தன் உயிரையே வேண்டினும் உவந்தளிப்பதாய்க் கூறினன். இதற்கிசைந்த சாத்தனார், கடவுளைத் தியானித்து குமணன் உயிர் பெறுமாறு ஏதோ பாடுவதுபோலப் பல கவிகளைப் பகர்ந்தனர். பின்னர்க் காடுசென்று குமணனது உடலோடு தன் கையுறும் தலையைப் பொருந்தச் செய்து, அவனை உயிரோடு கொணர்ந்ததாய்ப் போயினர்.

போனவர் அங்கோரிடத்தில் தலையை மறைத்து வைத்துவிட்டுத் திரும்பவந்து குமணனைப் போய்க் காணுமாறு யாவர்க்கும் கூறினர். அப்போது இளையவன் பலமுறை அவர்க்கு சாஷ்டாங்க தண்டம் சமர்ப்பித்து, "பெரியீர்! நீங்கள் செய்த உதவிக்கு என்ன கைம்மாறு இயற்றுவேன்? ஏதேனும் செய்ய எண்ணின் என்போல் அறிவிலிகள் எவருமிரார்.

ஆஹா! என் அண்ணனை உயிர்ப்பித்த உத்தமரே! அவரை எனக்குக் காட்டவும், அரசாளுமாறு அவரைச் செய்யவும் வேண்டுகிறேன்" என்றார். அவனுடன் அங்கு இருந்த பரிசனங்களும் அவ்வாறே கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்கள். எல்லோரோடும் புலவர் காடு நோக்கிப் புறப்பட்டார். பலவகை வாத்தியங்கள் இசைக்க, யாவரும் விரைவிற் சென்று குமணனைக் கண்டு மகிழ்ந்து ஆனந்தக் கண்ணீர் பெருக்கினர். அண்ணனைக் கண்டதும், அமணன் அவன் அடிகளில் வீழ்ந்தனன். உடனே குமணன் அவனையும், புலவரையும் மற்ற யாவரையும் உபசரித்து, அவர்கள் அங்கு வந்ததன் காரணம் வினவினன். அமணன் சிறியனாகிய தான் செம்மையறியாது செய்த பெரும்பிழையெல்லாம் பொறுக்கவேண்டுமென்றும், தான் அவனைக் கொல்விக்க எண்ணின தீமையை நினைக்குந்தோறும், தன் மனமே தன்னை வருத்துகிறதென்றும், ஆதலின் குமணன் நகர்புகுந்து முன்போல் அரசுபுரிந்து தன்னையும் மற்றோரையும் காப்பாற்றி யருளவேண்டுமென்றும், தனது இவ்வேண்டுகோட் கிணங்காவிடில் உயிர் துறப்பதாயும் உறுதிமொழி கூறினன். மற்ற யாவரும் அவ்வாறே மன்றாடிக் கேட்டுக்கொள்ள, குமணன்,

'எம்பிமுனம் எப்பிழையும் இயற்றினனென் றெண்ணாகிலேன்
பம்பிஇவன் புரிவதுதான் பாரித்த கொடுந்துயராம்.
கம்பமத கரியனையான் காத்தலையுற் றிடயானும்
இம்பருறு சாத்தலையுற் றிருக்க வரம் தருதிர் என்றான்."

நகர்வாசிகள் யாவரும் இதுகேட்டு நாவலரைப் பார்த்து, "அரசனை மறுபடியும் நாடு நண்ணச் செய்ய வேண்டியது நமது பொறுப்பு" எனப் புகன்று களகள வென்று கண்ணீர் உகுத்தனர். அவர்கள் படும்பாடு கண்ட பாவலர் வள்ளலை நோக்கி "அரசே! முன் வாக்களித் தபடி உமது தலை எனது தலையாதலால் எனக்குச் சொந்த மான தலையில் நான் முடிபுனைய விரும்பின் நீர் தடுக்கக் கூடுமா?" என்று கேட்டார்.

அதற்குக் குமணன் மறுமொழி ஒன்றுங் கூறமுடியா மல் திகைத்துக் கடைசியில் உடன்பட்டான். அங்கிருந்த யாவரும் உயிருற்ற ஓவியம் போலானார்கள். மகிழ்ச்சி யுற்ற அவர்கள் அண்ணலை யானைமேல் ஏற்றிக்கொண்டு, அவற்கு முன் புலவரும். இளையோனும் செல்லப் பின் தொடர்ந்து குமணபுரி அடைந்தார்கள்.

அன்றே நகர் அலங்கரிக்கப்பெற்று, அமராவதியென விளங்கிற்று. ஆடவரும், பெண்டிரும் கோடியாடைகள் உடுத்தார்கள். எல்லாரும் அரசனை வாழ்த்தி, மீண்டும் அவனைத் தங்கட் களித்ததற்காக எல்லாம் வல்ல இறைவ னைப் புகழ்ந்தனர். நல்ல ஓரையில் அரசனை அரியணை மீதேற்றினர். மங்கள வாச்சியங்கள் இசைத்தன. அப் போது மணிமுடியை அமணன் கொடுக்கப், புலவர்பிரான் பெற்றுத் தமிழ் அரசன் தலையிற் புனைந்தார். யாவரும் மிகவும் மகிழ்ச்சி யுற்றனர்.

அஃதின்னனமாகக் கவிஞர் குமணனது தலையை அம ணனிடம் கொணர்ந்ததென்னனமெனஅறிவாம். காட்டில்

குமணனை விட்டுப்போன அப்புலவர் மாந்தை யென்னும் மாநகரில் சிற்பநூல் வல்லான் ஒருவன் உளனென அறிந்து அங்குப்போய் அவன் அகம் அடைந்தனர். அச்சிற்பி, புலவரை இன்னாரென அறிந்ததும், அவருக்கு முகமன் கூறி, "கற்பனைக் களஞ்சியமே! கிருஷ்ணபரமாத்மா விதுரன் வீட்டில் எழுந்தருளியவாறு நீங்கள் அடியேன் அகத்தில் வந்தது என்ன காரணம் பற்றியது என்பதைத் திருவாய் மலர்ந்தருள வேண்டுகிறேன்" எனப், புலவர், "உம்மிடத்து இரண்டு வடுக்களிருக்கின்றனவென்றறிவிக்க வந்தேன்' என்றார்.

சிற்பிக்குச் சிந்தையில் அடங்காச் சினமுண்டாகி, "கவிஞர்க் கரசே! அவ்வடுக்கள் இன்னவெனத் தெரிவியாவிட்டால் அப்பாற் செல்லவிடேன்" என்றறைய, புலவர், "சிற்ப சிகாமணியே! அவற்றை வெளியிட்டால் நான் கேட்பதைக் கொடுப்பீரா?" என, சிற்பி அதற்கு ஒப்புக்கொண்டான்.

"போற்று சீர் ஆளு மன்னர் புனைமுடி பட்டப்பட்ட
காற்றமும் பொன்னும் வாணர் கருதிய பொருள்களெல்லாம்
மாற்றிலா தளித்துக் கையில் வரும்தமும் பொன்னும் என்று
சாற்றினன் துவட்டர் கோமான் தனதுடல் பூரித்தானே"

பூரித்த சிற்பி முன்னிலும் அதிகமாக ஆனந்தக்கடலில் மூழ்கி, "நீங்கள் கேட்பது இன்னதென அறியேனாகி, வேண்டுவன கொடுப்பதாய்க் கூறினேன். உங்கள் சிறப்புக்குத் தக்கவாறு நானோ ஈபவன்? எப்பொருளும் கவிஞர் வாயாற் கிடைத்த தன்றோ? ஆயினும், சிறியேன் கொடுக்கக் கூடிய பொருள் இன்னதெனச் சொல்லுங்கள்" எனப், புலவர், உலகத்தில் தன் புகழ்மணம் கமழச்செய்த குமண வள்ளலின் தலைபோல் ஒன்று செய்துதர வேண்டினார்.

தான் தரக்கூடிய பொருளைக் குறித்தனரெனச் சந்தோஷமடைந்த சிற்பி, அன்று மாலைக்குள்ளேயே குமணனது உண்மைத் தலையோ என்று புலவரும் ஐயுறுமாறு மதிபோன்ற முகமும், வில்போன்ற வளை புருவமும், கருணையொழுகும் கண்களும், வள்ளைவார் செவிகளும், எட்புநாசியும், குமுத வாயும் நன்கு விளங்க ஒரு போலித் தலையைச் செய்து கொடுத்து வணங்கினன்.

புலவர் அதைப்பெற்று மகிழ்ந்து பிரமன் தான் சிருஷ்டித்த ஒரு பொருள்புரைய, வேறொன்று உண்டாக்க அறியான்; சிற்பியோ அவ்வாறு செய்தானாதலின் முற்கூறியோனினும், பிற்கூறியவனே சிறந்தவன் எனக்கூறி, அவனை வாழ்த்தி, அவனிடம் பெற்ற தலையோடு அமணன் முன் போய், நா முற் கூறியவாறு செய்தனர்.

நிற்க, இத்தகைய நல்வினைகட்கு எல்லாம் காரணமானவர் கவிவலார் அன்றோ? ஆதலின், அமணன் மனமுவந்து, தன் கைகளால் மணிக் குவையும், நிதிக்குவையும் அள்ளிப் புலவர் 'போதும் போதும்' என்று அந்தரங்கக் கருத்தோடு கூறுமட்டும் கொடுத்தனன். மற்றும் பல விருதுகளும் அவர்க்குக் கொடுபட்டன. கவியரசர் தம்மூர்க்குச் செலவு பெற்றுப் புறப்படப் புவியரசர் இருவரும் அவரை வழியனுப்பினர்கள்.

"உடலுயிர்போன் மணியொளிபோன் மலர்மணம்போல்
இருவர்மனம் ஒன்றேயாகக்
கடலினிடை யணைவகுத்த ராகவனும்
பாதனுமுன் கருத்தொன் றாகிப்
புடவிபுரந் திருப்பரிவர் போலவென
உலகமெலாம் புகன்று போற்ற
நெடியவனும், இளையானும் உளமகிழ்ந்து
புவிபுரத்தார் நெடுநாள் மன்னே."

## அரசன் செய்நன்றி.

"நன்றி மறப்பது நன்றன்று: நன்றல்ல
தன்றே மறப்பது நன்று."

என்னும் திருக்குறளில், தனக்கு ஒருவன் முன்செய்த நன்மையை மறந்துவிடுவது அறமன்று; அவன் செய்த தீமையைச் செய்தபொழுதே மறந்துவிடுவது அறமாமென்று திருவள்ளுவநாயனாராற் சொல்லப்பட்டமையால் தாய், தந்தை, குரு, தெய்வம், அரசன், பெரியோர் முதலானவர்கள் செய்த நன்றியை எந்நாளும் மறவாமற் சிந்தித்து ஒழுகல் வேண்டும்.

அரசனானவன் உலகத்திற்கு அன்பிற்சிறந்த தாய் போலத் தோன்றி மன்னுயிர் யாவையுந் தன்னுயிர்போலக் கருதி,

"மாநிலங்கா வலனென்பான் மன்னுயிர்காக் குங்காலை
தானதனுக் கிடையூறு தன்னாற்றன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தாற் கள்வரா லுயிர்தம்மால்
ஆனபய மைந்துந்தீர்த் தறங்காப்பான் அல்லனோ"

என்றவண்ணம், தன்னாலாவது, தன் பரிசனத்தாலாவது, பகைவர்களாலாவது, திருடர்களாலாவது, மறற உயிர்களாலாவது சிறிதுங் கொலை, களவு, சர்ப்பனை முதலாகிய உபத்திரவம் அணுகாமல் குடிகளுக்கு க்ஷேமமுண்டாகும்படி முறை பிசகாது செங்கோல் செலுத்தி பிரஜைகளிடத்திற் கடுஞ்சொற் சொல்லாமலும், கடுந்தண்டம் விதியாமலும் அவரவர் தாரதம்மியம் அறிந்து பட்சபாதமில்லாமல் தயையாய்ப் பரிபாலனஞ் செய்கின்றதை மறக்கலாகாது.

ஆரைப் பகைத்தாலும் அரசனைமாத்திரம் பகைக்கலாகாது; அரசவையிலிருந்து வறிதே அடிக்கடி நகைப்பதும் பரிகாசஞ் செய்வதும் ஒருவர் செவியிலொருவர் இரகசிய சமாசாரஞ் சொல்வதும், அரசனுக்கெதிரே அடக்கமில்லாதிருப்பதும், அரசனோடெதிர்த்து அவனை அலட்சியமாகப் பேசுவதும் வீண்போகாமல் திரவிய நஷ்டத்தையும், மான பங்கத்தையும், பிராண சேதத்தையும் வருவிக்கும். செங்கோலுக்கு முன்னே சங்கேதயா?

"செவிச்சொல்லுஞ் சேர்ந்த நகையு மவித்தொழுகல்
ஆன்ற பெரியா ரகத்து."

என்றுஞ் சொல்லுகின்றதே.

அரசனது தயையைப்பெற்று அவனை அந்நியோந்நியமாகச் சிநேகித்து அவனுக்கு அநுகூலப்படாத விரோதிகளையெல்லாம் சாதித்து அவன் மனமகிழும்படி அநேக திரவியங்களைச் சம்பாதித்துக்கொடுத்து அவனால் நன்கு மதிக்கப்பட்டவர்களானாலும், அவன் விஷயத்தில் நெறி தவறி இலேசமாத்திரம் பிழைசெய்தாலும் குடி முழுகிப் போம். வேங்கைப்புலியும், ராஜாவும் சரியென்கிறார்களே. ஆதலால் அவனை விஷ சர்ப்பம் போலவும், கடுநெருப்புப் போலவும் நினைத்து, அவனுக்குப் பயந்து நடக்கவேண்டும்.

## ஆத்திசூடி நீதிக் கதைகள்.

### "அறஞ்செய விரும்பு"

**இதன் பொருள், தருமஞ் செய்ய விருப்பங்கொள் என்பதாம்.**

கடல்சூழ்ந்த நெடிய உலகத்தில் மக்களாய்ப் பிறந்தவர் யாவரும் தேடத்தகுவன எல்லாவற்றிலும் மிகச் சிறந்தது அறமேயாம். அது, தீமையைத் தேய்த்து, நன்மையை நல்குவதோர் அரிய பேறு; இம்மையில் தன்னையுடையார்க்கு உறுதுணையாய் நின்று போற்றிப் புகழாக்கி, மறுமையிலும் நீங்காது பின் தொடர்ந்து, நல்லின்பம் அளிப்பதோர் நல்லன்புடையது. அதனாலேயே, 'அறத்தினால் வரும் இன்பத்திற்கும், அதனை மறத்தலினால் வரும் துன்பத்திற்கும் ஓர் அளவில்லை' என, ஆன்றோரும் கூறியிருக்கின்றனர். இவ்வாறிருக்க: பகுத்தறிவில்லாச் சில பேதைகள், தமது உயிர்வாழ்க்கையை, நீர்க்குள் மொக்குளும், கார்க்குள் மின்னலுமாம் எனக் கருதாது, "யாம் இளமைப்பருவமுடையோம்; முதுமையில் அறம்புரிதல் கருதுவோம்" என நினைத்திருந்து, இடையில் யமனுக்கிரையாகிப் பாழ்ப்படுகின்றனர். அந்தோ கஷ்டம்! கஷ்டம்!! இவரையொத்த அறிவீனர் இவரேயன்றி வேறெவர்? பகுத்தறிவுடையவர் ஒவ்வொருவரும் இளமைமுதல் உயிர் உடலை விட்டு நீங்கும் வரையில் பரிசுத்தமான திரிகரணங்களால் சமயம் வாய்த்தபொழுதெல்லாம் அறப்பொருளைத் தேடிக் கொள்ளுதலே தகுதியாகும். "அச்சுக்கோட அக்கரமுங் கோடும்" என்றபடி கரணங்கள் கோடின், கருதிப் புரிகின்ற அறமும் விபரீதப்படும். ஆகையால், அறம்புரிவோர்க்கு, மனோ வாக்குக் காயங்களின் தூய்மை இன்றியமையாததாகின்றது.

## நீதிக் கதை.

ஒருரில் தபித்தாள் என்னும் பெரிய தையலர் சிரோமணியொருத்தி இருந்தாள். அவள் தரணியில் அவதரித்த தருமதேவதையெனத் தக்கவள்; கருத்தருக்குத் தன்னகமே பொன்னகமாக்கிய புனிதை. இம்மாதரசி, நாடோறும் தன்பால் வரும், பதியும் நிதியும் இழந்த பாவையர் பலர்க்கும் அங்கியும் ஆடையும் அன்புடன் நல்கி அலங்கரிப்பதே இகபரங்களுக்குரிய நலமளிக்கும் பேரற மார்க்க மெனத் துணிவுற்று, அம்முறை பிறழாது, நிகழ்த்தா நிற்கையில், உலகத்திலே உடம்பெடுத்த உயிர்கட்கெல்லாம் பொதுவாக வந்து அடுப்பதாகிய மரணத்துன்பம் அவள் மாட்டும் வந்தணுகல் உற்றது. "காலனுக்குக் கண்ணுண்டா?" அந்தக் கண்டகன், இவர் தவத்துறை மாக்கள், இவர் அறத்துறைப் புனிதர், இவர் ஈற்றிளம்பெண்டிர், இவர் ஆற்றுப்பாலகர், இவர் இளையர் இவர்முதியர், இவர் செல்வர், இவர் தரித்திரர் என்றுபார்ப்பதுண்டா? எவரையும் ஆவி கவர்ந்தன்றி ஒழிவதில்லை. ஆதலால், இவளது ஆவியையும் அவன் அபகரிப்பதற்கு அடுத்தனன். என்செய்வாள்! தபித்தாள் தனது ஆருயிர், தன்னுடல் விட்டு நீங்குவதை உன்னிச் சிறிதும் அவள் தபித்தாளல்லள்; நாம் இறந்துபடின், நூல் இழந்த ஏழையர் பலரும் ஆடைக்கலைந்து துயருறுவரே!" என்று எண்ணியெண்ணியே உள்ளம் பெரிதுந் தபித்தாள். அது கேட்டு, அவளுதவிபெற்ற மடவோரும், பெறநிற்கும் மானினியரும், மற்றுமுள்ளவரும் அவளது பிரிவிற்கு ஆற்றுது கரையற்ற துயர்க்கடலில் மூழ்கிக் கரைவதாயினர்; கண்ணீராற்றில், அவளது உயிர் நீத்த தேகத்தை மிதப்புக்கட்

டைபோல் மிதக்கவிட்டனர். இவர் இங்ஙனமாகையில், இயேசுநாதரின் சீடராகிய பேதுரு வென்னும் பெரியோர் அங்கு எழுந்தருளி, 'என்ன' என்று வினவலும், அவரை வணங்கி அப்பெண்மணிகள் கூறலுற்றனர்:

"உலகம் உய்யுமாறு உயிர்நீத்து உயர்வு நல்கிய உத்தமர்தம் பக்திக்கடலிற் படிந்து களிக்கும் பரமபுருஷ ராகிய பேதுருவே கேட்பீராக: இதோ இறந்துகிடக்கின்ற தபித்தாள், யாதுமற்ற எங்களை நேர்த்தியான உடைகளினல் போர்த்திக் கீர்த்தியென்னும் உடையினல் இவ்வுலகத்தையும் போர்த்தவள்; பெண்மகளை அலங்கரித்துமண்முழுதும் அலங்கரித்தவள்; பொன்னுடை நல்கி எம்மானங்காத்தவள்; தனக்கு உரியதானங் காத்தவள்; மற்றும், காக்க வேண்டுவனவெல்லாம் காத்தவள்; அல்லாமலும், திக்கற்ற எமக்கு ஓர் தாயாவாள்; தந்தையுமாவாள்; சோதரனும், சோதரியுமாவாள். இப்படிப்பட்ட உத்தமியைப் பறிகொடுத்த யாம் எங்ஙனம் உய்வது? ஈண்டு இருண்டு மயக்கமுற்றது, எங்கள் உள்ளமோ? கண்ணே? கதிரவனே? யாதோ? அறியோம். ஐயனே! கருணை செய்து இவளைப் பிழைப்பித்தல் வேண்டும். இவளொருத்திக்கு உயிர் கொடுத்தல் இவ்வுலகிற்கே உயிரளித்தல்" எனப் பலவாறு இரக்கமொழி தொடுத்து எல்லோரும் கெஞ்சி வேண்டிக் கொள்ள, அச்சிடர் சித்தங்களித்து, அந்தத் தபித்தாளை உயிர்ப்பித்தனர். அது கண்ட எல்லோரும் ஆனந்தபரவசராய், அன்பரையும், தேவரையும் வணங்கித் துதித்துப் பாடினார்; பின்பு சுகமுற்று வாழ்வார் ஆயினர்.

## "ஐயமிட் டுண்."

**இதன்பொருள், (பசித்தோர்க்கு) அன்னமிட்டு உண் என்பதாம்.**

இதற்குப் பலபடப் பொருள் கூறுவராயினும், பசித்தார்க்குப் பகுத்தளித்துண்க என்னும் பொருளே பொருத்தமுடையதென்க. பகுத்துண்பான், சாதி மத வேற்றுமைகளைச் சிறிதும் கருதல் செய்யாது, உற்றாரை உற்றாரோ டொப்பாரை உடன்கொண்டு உண்ணலும், மற்றாரை வேற்றுழி உண்பித்தலும், அவர்கட்கு உணவுப் பொருள் நல்கலும் வேண்டும். இவ்வாறு, உள்ள உணவில் ஒளியாது பகுத்தளித்து உயிரோம்பும் ஒருவனை, மன்னுயிர்க்கு ஓர் தாயெனவும், தந்தையெனவும், காவலன் எனவும், கடவுளே எனவுங் கூறினும் குற்றமுறாது. அறங்கள் பலவற்றுள்ளும் முற்பட்டதாகிய 'ஐயமிட் டுண்ணுதலையே' ஓர் விரதமாகக் கொண்டொழுகுபவன், இம்மையில் எவர்க்கும் நண்பனாகி இன்புறுவதுமன்றி; மறுமையிலும் முத்திப்பேற்றுக்கு உரியவனாகின்றனன். இவ்வறவினையை, ஆன்றோர் பொருண் முட்டுப்பாடுற்ற காலத்தும் கைவிடுவதில்லை; களவாடியேனும் தம் கடைப்பிடியைக் காத்தொழுகுவதிற் பிழையார்: "பொய்ம்மையும் வாய்மை யிடத்த; புரைதீர்ந்த நன்மை பயக்குமெனின்" என்றிருத்தலால்.

## நீதிக் கதை.

விளை நிலங்களால் வளப்புண்ட, இருவகைச் செல்வத்திலும் இளையாத **இளையான்குடி** என்னும் ஊரிலே **மாறன்** என்ற ஒரு வேளாளர் இருந்தார். இவர், "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்; மற்றெல்லாம், தொழுதுண்டு பின் செல்பவர்," "ஓதுவா ரெல்லாரும் உழுவார்

தம் நிலக்கடைக்கே," "மேழிச் செல்வம் கோழைபடாது" என்றபடி எவ்வகைத் தொழிலினும் மேம்பட்ட தம் குலத்தொழிலாகிய வேளாண்மையால் புவியையும், உபந்யாசமாரியால் அவையையும் அலங்கரிப்பவர்; அலரால் சிவபிரானது அடித்துணைகளையும், அன்னத்தால் ஏழைகளின் வயிற்றினையும் நிரம்பச்செய்பவர். விருந்தோடன்றி அருந்தலும், மெய்ம்மையும் தண்மையும் அன்றி உரைத்தலும், இரவலர் மொழியும் இனிய புராணங்களும் அன்றிக் கேட்டலும், தமது கரங்களை ஈதற்கும், ஈசுவர கைங்கரியத்துக்கும் அன்றி நீட்டலும், கழனிக்கும் கற்றோர் அவைக்கும் கடவுள் ஆலயத்துக்கும் அன்றி நடத்தலும், அறத்தையும் அரனையும் அன்றி உள்ளத்தூ உன்னலும் செய்யாதவர்.

விருந்தோம்புதலே பிறந்த பிறப்புக்குப் பெரும் பேறு எனத் துணிவுற்ற அந்த நாயனார், நாடோறும் தம் இல்லத்துக்கு வரும் அதிதியை எதிர்சென்றழைத்துவந்து, தண்முகங் காட்டி இன்மொழிதொடுத்து வணங்கி, உரிய காலத்தில் அறுவகைச் சுவையுடைய நால்வகை உணவுகளையும் அவரவரது விருப்பின்படி அருத்திவந்ததனால், "இறைத்த கிணறே ஊறும்," "ஈவார்பொருளே மீதோங்கும்" என்ற பழமொழிப்படி, அவர்க்குச் செல்வம் ஒன்று பத்தாகப் பெருகிப் பெருவெள்ளம் ஆயிற்று. அதனால் அவரை அனைவரும் மானிடக் குபேரனென்ன வழங்கலாயினர்.

இவ்வாறிருக்க, சிவபிரான், அவ்விளையான்குடியார் பொருட் பெருக்குற்ற காலத்தில் நடாத்திவந்த அன்ன தானத்தை நல்குரவடைந்த காலத்தும் நடாத்த வல்லுநர் என்பதையும், தாம் அறிஞர்க்கு வறுமையை அளித்தல்

அவர் தம் நலத்தின் பொருட்டே என்பதையும், முடிவில் இன்பமேயாகும் என்பதையும், அதனையறியாதார் தர்மம் செய்த தமக்குத் துன்பஞ்செய்தார் கடவுளெனத் தம்மை நோதல் பாவமென்பதையும், எத்தகைய துன்பத்திலும் ஆன்றோர் கடைப்பிடியைக் கைவிடார் என்பதையும் உலக றிந்து உய்யுமாறு திருவுளங்கொண்டு, அந்நாயனார்பால் இல்லாமையை ஒல்லையில் செலுத்தினர். அதனால் அவர் சொல்லமுடியாத அல்லல் உற்றனராயினும், விரதபங்கம் உருவண்ணம் தமக்குரிய வீடு மாடு விளை நிலங்களிற் சில வற்றை விற்றும், தாமே விலைப்பட்டு இறுக்குமாறு அத் துணைக் கடன்கொண்டும், அதிதி பூஜையை முன்னமே போலப் பின்னரும் குறைவின்றிச் செய்துவந்தார்.

இப்படியிருக்க, ஒருநாள் சோனைமாரி சொரிதர, விருந்தினர் ஒருவரும் வந்திலராதலால், அன்று பகல் முழுவதும் அமுதருந்தாது பட்டினியே யிருந்த நாயனார், இரவில் தமது இல்லக்கதவம் அடைத்துத் தாளிட்டு உறங்கா நிற்கையில், ஸ்ரீசைலமலை வாசியாகிய கண்ணுதற்பெருமானே ஓர் சைவ வேடதாரியாய் ஆங்கு எழுந்தருளிக் கதவு புடைத்து அழைப்ப, மாறனார் களிப்புற்று எழுந்து, கவாடந்திறந்து, அப் படிவரைப் பவனத்துள் அழைத்து உபசரித்து ஓர் ஆதனத்தில் அமரச்செய்து, அவருக்கு அமுதருத்த வேண்டுமென்ற அவாவினால், தமது மனைவியை, ‘என்ன உள்ளது?’ என்று வினவ, அப்புண்ணியவதியும் அடுதற்கு உரிய பொருள் ஒன்றும் இன்மையைக் கூறித் துக்கித்தனள். அதனைக் கண்ட நாயனார், “தெய்வமே! இனி யான் என்ன செய்வேன்! பசித்து ஒருவர் வந்திருக்க, உயிர்த்து இன்னும் இருக்கின்றேனே! அனிச்சப்

பூவினும் அதிதிமுகம் மிக மெல்லியது என்பரே! அவர் முன் இனி யான் எவ்வாறு செல்வேன்” எனப் பலவாறு பிரலாபித்துக்கொண்டிருக்கையில், அவர் இல்லக்கிழத்தி அவரை வணங்கி, “இன்று நம் கழனியில் வித்திவந்த முளை நெற்களை வாரிக்கொணரின், அவற்றை வறுத்துத் தக்க வாறு பாகஞ்செய்து அன்னமளிக்கலாம்” என, அது கேட்டுக் களிப்புற்ற நாயனர், உடனே அம்மழைக்காரிருளில், காலால் நெறிதடவிக் குறிவழிப் பழனஞ்சார்ந்து, முளைப்புறத்திட்ட வித்தினை அரித்துக்கொணர்ந்தனர்; இந்தனத்தின் பொருட்டு இற்கூரையிற் சில பிரித்துக்கொடுத்தனர்; கறிக்கு வேண்டிப் புறக்கடையிலுள்ள குழியினின்றும் வெளிப்படாத பயிர்களைப் பிடுங்கிக்கொடுத்தனர். அவற்றையெல்லாம், அவர் பத்தினி, அமுதினும் இனிப்ப அட்டு வைத்துத் தம் கொழுநர்க்கு அறிவித்தனள். அவரும் வந்த சைவரை அமுதுண்ண அழைப்ப, அக்கடவுள் இடபாரூடராய் அந்நாயனர்க்கும், அவர் மனைவியார்க்கும் தரிசனம் தந்து, நீங்காத பேரின்பத்தை அனுபவித்திருக்குமாறு அருள்புரிந்து மறைந்தனர்.

## பெண் கல்வி.

*    *    *    *

**கௌரி**—"பெண்களுக்குக் கல்வி அவசியமென்று சிலர் ஒப்புக்கொண்டாலும், பலர் 'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு?' என்றும், 'கற்ற ஸ்திரீகள் கர்வத்தால் கணவருக்கு அடங்கி நடப்பதில்லை' என்றும், 'பூர்வத்தில் பெண்கள் படித்தில' ரென்றும், சாஸ்திரத்திற்கு விரோத மாயிருந்தாலும், சம்பிரதாயத்துக்கு விரோதமாய் நடக்கக் கூடாது' என்றும், வம்பு வளர்க்கின்றார்களே! இந்தப் பிடாரிகளுக்குப் பதில் சொல்வது சாத்தியமா? ஒருவேளை சாத்தியமாயினும், அவர்களைத் திருத்துவது முடியக்கூடிய காரியமா?"

**கோமதி**—"ஊரார் எதுவும் உளறட்டும். அவர்கள் உரைப்பது உனக்கும் உடன்பாடா?"

**கௌரி**—"இரண்டும் இரண்டும் நான்கு என்று தெரிந் தாலும், அதற்குக் காரணம் ஒருவர் கேட்டால் எல்லாரும் எளிதிற் சொல்லக்கூடியதா? கல்வியால் நன்மை எய்தும் என்பது மட்டும் எனக்குப் படுகிறது. ஆயினும் அவர்கள் கேட்கும் கேள்விக்குத் தக்க பதில் சொல்வது எனக்குக் கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கிறது"

**கோமதி**—"இக்கேள்விகளுக்கு விடைகூறத்தானு தெரி யாது? உன் முதற்கேள்வி என்ன? 'அடுப்பூதும் பெண் களுக்குப் படிப்பெதற்கு?' என்பதுதானே? ஆடவர்படித்து உத்தியோகம் செய்வதால் படிப்பு உத்தியோகத்துக் கென்றுநினைப்பது அநேகர்சுபாவம். இவர்கள் உண்மையறி

யாதவர்கள். 'அறம்,பொருள்,இன்பம்,வீடு அடைதல் நூற் பயன்' ஆதலால் கற்றற்குரிய நூல்களைக் கற்று, இம்மை மறுமைப் பயன்களைத் தேடுவதே மானிட ஜன்மத்தின்பய னுகும். உத்தியோகத்தின் பொருட்டே கல்வி கற்றல் என் பது தவறு; நெல்லுக்கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப் புல்லுக்குமாங்கேபொசிவதுபோல், தெய்வபக்தி,விவேகம், நற்குணம் முதலியவற்றிற்காக ஒருவர் கற்கும்கல்வி உத்தி யோகத்திற்கும் சாதனமாகின்றது. படிக்கிற ஆண்பிள்ளை கள் எல்லாம் உத்தியோகம் பார்க்கிறார்களா?—"

**கௌரி**—"ஆமாம் நீ சொல்வது உண்மையே. என்ன இருந்தாலும் நீ சமர்த்தி"

**கோமதி**—"பெண்களும் நாற்பொருளும் பெற்று நற் செய்கை உடையவர்களாய் வாழவேண்டுமாயின், அவர்க ளுக்கும்கல்வி அத்தியாவசியமாய்வேண்டும். இன்னும்பார்! கல்விக்குத் தெய்வம் **சரஸ்வதி** என்கிறார்களே, சரஸ்வதி பெண்ணு? ஆணு? '**புருஷா** நாவிற்றான் வசிப்பேன்' என்று அவள் ஏதாவது சத்தியம் செய்து கொடுத்திருக்கிறாளா? இனம் இனத்தை விரும்புவது இயல்புதானே? இது இழுக் கென்றால் யார் ஒப்புவார்கள்?"

**கௌரி**—"நமது ஒளவை, உப்பை, உறுவை, வள்ளி, காரைக்கால்அம்மை, சூடிக்கொடுத்த நாச்சியார் முதலி யோர் கல்வி கற்றறிந்த பெண்மணிகளன்றோ?"

**கோமதி**—"இவர்கள் மட்டுமா? நிற்க. பின்னால் இது சம்பந்தமாய் நீ கேட்ட வேறொரு விஷயத்தைப்பற்றிச் சொல்லுவேன்.

இரண்டாவது நீ என்ன வினவினை? 'கற்ற மாது கணவனுக்கு அடங்கி நடக்கமாட்டாள்,' என்று? சொல்லுகி

றேன் கேள். கற்றவர் கணவருக்குப் படிந்து நடக்காவிட்டால், கல்லாதவர்கள் இன்னும் கேவலமாயல்லவோ இருத்தல் வேண்டும். ஏனெனில், கற்றவர்கள் அறிவினரென்று கருதப்படுகிறார்களன்றோ? 'மடங்கொன்று அறிவு அகற்றும் கல்வி' என்பதை நீ மறந்தனையோ?"

கௌரி—"ஆம்! நீ உரைத்தது சரியே. பெண்கள் படித்தல் பூர்விக சம்பிரதாய மில்லை" என்கிறார்களே? அதற்கு விடை என்?"

கோமதி—"அவர்கள் படித்தல் கூடாதென்பது பூர்விக வழக்கம் என்றே வைத்துக்கொள்வோம். எல்லா விஷயத்திலும் பூர்விக வழக்கங்களை விட்டு மேற்றிசையோரின் நாகரிகங்களை நன்மை எனக் கருதிப் பின்பற்றிவரும் நாம், பெண்கள் பாவத்தைக் கட்டிக்கொள்வதற்குமட்டும் பூர்விகத்தை அநுசரிப்பது நியாயமா? ஒவ்வொரு ஜாதியானும் தன் தன் காரியத்தையா செய்கிறான்? பிராமணன் பிற ஜாதியாரின் காரியங்களைச் செய்வதில்லையா? இஃதிருக்கட்டும். முன் சொல்லப்பட்ட ஔவையாரின் சரித்திரத்தையும், அதிவீரராமபாண்டியன் எழுதிய நைடதத்துக்குக் குற்றம் கூறிய மதனலீலையார், கம்பராமாயணத்துக்குச் சாற்றுக்கவி தந்த அஞ்சனாக்ஷி, பூதப்பாண்டியன் தேவியார முதலிய நல்லிசைப் புலமைமெல்லியலாரின் சரித்திரங்களையும்வாசித்தால்இதன் உண்மை வெள்ளிடைமலைபோற் றெள்ளிதிற்புலனாம். இவர்கள்பெண்பால ரன்றோ?இன்னோர்,கல்விபயின்று கேடுற்றார்களென்றுகழறுவார் யாரே? சாஸ்திரத்தை மீறினும் சம்பிரதாயத்தைக் கடவார்கள் என்பது கையாலாகாத கடையர்களின் கட்டுரை யன்றோ?"

கௌரி:—"ஆம்! கோமதி! இப்போதுதான் ஞாபகத்துக்கு வருகிறது. பெண்பிள்ளைகள் பலர் வெளியேறுமவே

யிருக்கிறார்களே! அப்படித்தான் இருக்கவேண்டுமென்று சாஸ்திரத்திலும்சொல்லப்பட்டிருக்கிறதாம்! அதன்படியே இக்காலத்தவரும் பின்பற்றுவதாய்க் கூறியும் மூட்டாக்குப் போட்டுக்கொண்டும் 'கோஷாக்' கொண்டாடுகிறார்களே?"

**கோமதி:**—"முன் நான் 'இது சம்பந்தமாய் இனி வேறொரு விஷயம் சொல்வேன்' என்றது, உனக்கு ஞாபகமிருக்குமே. அவ்விஷயமே நீ இப்போழுது கேட்பது. பெண்கள் வெளியேறவே கூடாதென்று சாஸ்திரம் சொல்வதாகக் கூறுதல் ஏதமாம். நமது புராதன புராணங்களைப் பார்த்தாலே அந்தப்புரப் பெண்களும் தாராளமாய் வெளியேறினதாய்த் தெரியவரும். அரிச்சந்திர புராணத்தாலும் 'தெரிவையர்க்கரசி யுடன்வரக் கடிது சென்று தேரின் மிசை ஏறினன்' என்றதனல் வேட்டையாடுமிடத்திற்குக் கூட, அரசரும் மகளிரைக் கூட்டிச் சென்றனர் என்று தெரிகின்றதன்றோ? ஆதலால், ஈது ஓர் ஆகாசக் கோட்டையே."

*　　*　　*　　*

---

## பஞ்சதந்திரக் கதைகள்.

### 1. மோசத்தால் வரும் நாசம்.

**துஷ்டபுத்தி**, சுபுத்தி யென்ற இரண்டு செட்டிப்பிள்ளைகள் பணஞ் சம்பாதிக்கிறதற்காகத் தேசாந்தரம் போனார்கள். அவ்விடத்தில், சுபுத்திக்குப் பூமியில் ஒருபணப் புதையல் அகப்பட்டது. அதைச்சிநேகத்தினலே சுபுத்தி துஷ்டபுத்தியுடனே சொல்ல, துஷ்டபுத்தி, 'அந்தத் திரவியத்தை

இங்கேயே புதைத்து வைத்துவிட்டுக் கொஞ்சம் பணம் எடுத்துக்கொண்டு போவோம்' என, சுபுத்தி, சிநேகத்தினுல் அதற்குச்சம்மதித்துப் பிறகு அதிற்கொஞ்சம் பணமெடுத்துக்கொண்டு மற்றைப் பணத்தை ஒரு மரத்தடியிற் பள்ளந்தோண்டி அதிலே புதைத்துவைத்துப் பின்பு வீட்டுக்குப்போய்ப் பழையபடியே சிநேகமாயிருக்கையில்,ஒரு நாள் துஷ்டபுத்தி, தனியேபோய் அந்தப் பொருளையெல்லாம் எடுத்துக் கொண்டு வீட்டுக்கு வந்து விட்டான்.பிறகு சிலநாள் கழித்துத் துஷ்டபுத்தி சுபுத்தியைப் பார்த்து, 'அந்தநம்முடைய திரவியத்தைக் கொண்டுவருவோம்'என, பின்பு இருவரும் போய் அந்த இடத்திற் பார்க்குமளவில், அங்கு ஒன்றும் இல்லாமையால்,துஷ்டபுத்தி மிகவும்வருத்தத்தோடு சுபுத்தியைப் பார்த்து, 'இங்கிருந்த பணத்தை நீயே கொண்டுபோனுய்; மேலும்,கபடமாய் வருத்தப்படுகிறுய்' என்று சொல்லிக் கலகப்பட்டு இதை ராஜாவுக்கு அறிவித்தான். பிறகு ராஜா நியாயாதிபதியை அழைப்பித்து, 'இதைப் பஞ்சாயத்தில் தீர்க்கவேண்டும்' எனக் கட்டளையிட, அவன், 'ஐந்து நாளைக்குள்ளே தீர்த்துப்போடுகிறேன்'என்று ராஜாவின் முன்னே கெடுவைத்துக்கொண்டு வந்து பஞ்சாயத்துக்கு ஆரம்பித்தான். அப்போது துஷ்டபுத்தி, 'எனக்குச் சாக்ஷியிருக்கிறது; அந்தச் சாக்ஷியை இப்போதே கேட்கலாம்' என, பஞ்சாயத்தார், 'உன் சாக்ஷியைக் கொண்டுவா' என, பின்பு துஷ்டபுத்தி வீட்டுக்குப் போய்த்தன் தகப்பனுடனே சொல்லுகிறுன்: 'அப்பா! உம்முடைய ஒரு பேச்சால் எனக்குப் பதினுயிரம் வராகன் வரைக்கும் கிடைக்கும்'என, அப்போது கிழவன்,'எப்படிக் கிடைக்கும்? சொல்' என, துஷ்டபுத்தி, 'நீர் மரப் பொந்தில் இராத்திரிக்குப்போய் உட்கார்ந்திருக்கவேண்டும்; அந்

கே நியாயாதிபதி முதலானோர் வந்து 'அங்கிருந்த பணத்தை யார் கொண்டுபோனார்கள்? என்னும்போது, நீர், 'சுபுத்தி கொண்டுபோனான்' என்றால் என் காரியமாகும் என, இதைக்கேட்டுப் பிதா, 'பொல்லாங்கு நேரிடுகிற காரியத்தைப் பண்ணிச் சுகமடைய வேண்டுமென்று இச்சிக்கிறது, மூடத்தனமா யிருக்கிறது' என, துஷ்டபுத்தி, பிதா சொன்னதைக் கேளாமல், அவனை வலுவில் இழுத்துக் கொண்டுவந்து, மரப்பொந்தில் உட்காருவித்து, விடியற்காலத்தில் நியாயாதிபதி முதலானவரையும், சுபுத்தி முதலானோரையும் அவ்விடத்துக்கு அழைத்துக்கொண்டுபோய், சாட்சி இந்த மரத்தைக் கேளுங்கள்' என்றான். அப்போது அந்த மரத்திலிருந்து, 'இங்கிருந்த பணம் முழுவதும் சுபுத்தியே கொண்டுபோனான்' என்று ஒரு சத்தம் புறப்பட்டது. சுபுத்தி இஃது என்னவோ மோசமாயிருக்கிறது! இங்கே ஒரு பிராணியில்லாமல் தொனி எங்கேயிருந்து புறப்பட்டது? இது தெய்வீகமா யிருந்தால், மெய்யன்றோ சொல்லவேண்டும்?' என்று இப்படித் தனக்குள் எண்ணமிட்டுக்கொண்டு, அந்த மரத்தின் மேலேறிச் சோதிக்கையில், அதில் ஒரு பொந்து காணப்பட்டது; உடனே, 'இங்கே கிருத்திரிமம் இருக்கும்' என்று எண்ணி, அங்கே நெருப்பைமூட்டிப் பற்றுவித்தான். உள்ளேயிருந்த கிழவன் பாதி வேகிறமட்டும் பல்லைக் கடித்துக்கொண்டிருந்து, பொறுக்கப் போகாமல் அலறிக்கொண்டு வெளியே வந்து விழுந்தான். அப்போது அங்கிருந்தோர் எல்லோரும், இஃதென்ன?' எனக் கேட்க, கிழவன், 'என் பிள்ளை துஷ்டபுத்தி, கபடத்தினால் என்னைப் பலாத்காரமாகக் கொண்டுவந்து இங்கே வைத்தான்' என்று சொல்லி இறந்துபோனான். நியாயாதிபதி இதைப் பார்த்து, ராஜாவுக்கு விண்

ணப்பம்பண்ண, பிறகு, துஷ்டபுத்தி வாயினாலேயே ராஜா எல்லாம் அறிந்துகொண்டு அவனைக் கழுவி லேற்றினான்.

2. 'வழக்க மில்லாதவனை நம்பலாகாது'.

பாகீரதி தீரத்தில் திரிகூடமென்னும் மலையில் ஒரு முதிய இத்திமரத்தின் பொந்தில் வாசம்பண்ணிக்கொண் டிருக்கிற நகமுங் கண்ணுமில்லாத சரற்கவனென்னும் ஒரு கிழக் கழுகானது, மற்றைப் பக்ஷிகள் தன்னிடத்தில் இரக்கம் வைத்துத் தங்கள் ஆகாரத்தில் கொஞ்சங் கொஞ்சம் நெருக்கிக்கொடுக்கத் தின்றுகொண்டு சீவித்திருக்கையில், ஒருநாள், நெடுஞ்செவியனென்னும் பூனை, பறவைகளுடைய குஞ்சுகளைத் தின்னவேண்டி அந்தமரத்தின் கீழேவர, அதைக் குஞ்சுகள் பார்த்துப் பயந்து பெருங் கூச்சலிட் டன; கழுகு அதைக் கேட்டு, 'நீங்கள் ஏன் பயப்படுகிறீர் கள்? இங்கே எவன் வந்தான்?' என, இதற்குள்ளே பூனை, சரற்கவனைப் பார்த்து 'நான் செத்தே'னெனப் பயந்து உட னே மனத்தில் தைரியம் பண்ணிக்கொண்டு, "இந்தச் சத்து ருவைத் தப்பித்துக்கொண்டு, ஓடுகிறதற்கு நமக்கு சக்தி யில்லை; ஆகையால், இவன்சமீபத்திற் போகவேண்டும்; பின் னர்எது உண்டாகுமோ அது உண்டாகட்டும்' என்று இப் படிநிச்சயித்து அந்தக் கழுகின் கிட்டப்போய், 'சமர்த்த னே! உனக்கு வந்தனம் பண்ணுகிறேன்' என, கழுகு அதைக் கேட்டு, 'நீ யார்?' என, அப்போது பூனை, 'நெடுஞ் செவியனென்னும் பூனை' என, பின்பு சரற்கவன் 'நீ சீக்கிர மாய் இவ்விடம்விட்டு ஓடிப்போ: இல்லாவிட்டாற் சாவாய்' என, பூனை, 'நான் என் விருத்தாந்தத்தைச் சொல்லுகிறேன்; அதைக்கேள்; பிறகு கொல்லத்தக்கதானாற் கொல்லு: சாதி பேதத்தினாலேயே பிராணிகளைக் கொல்லுவதா வது, பூசிப்பதாவது யோக்கியமன்று; ஆதலால், அவ

னவன் நடத்தையைப் பார்த்து எது செய்யத்தக்கதோ அது செய்யவேண்டும்' என, கழுகு அதைக் கேட்டு பூனையைப்பார்த்து, 'நீ என் வந்தாய்? சொல்' என, பூனை, 'நான் கங்காதீரத்தில் நித்திய ஸ்நானம் பண்ணிச் சாந்திராயணம் முதலாகிய விரதங்கள் ஆசரித்துக்கொண்டிருக்கிறேன்; நீ மிகவும் தருமவானாயிருக்கின்றாயென்று பக்ஷிகளால் எப்போதும் கேள்விப் படுகிறதினாலும், வயதில் முதிர்ந்த வித்துவானிடத்தில் தருமங் கேட்கவேண்டுமென்று சாஸ்திரம் இருக்கிறதினாலும், நான் உன்னிடத்திற்கு வந்தேன். நீ தருமத்தை விட்டு என்னைக் கொல்லத் துணிந்தாய். இப்படி இல்லறத்தாருடைய ஆசாரம் எங்கும் பார்த்ததில்லை; சத்துருவும் தம் வீட்டுக்கு வந்தால், சாதுக்கள் அவனுக்குச் சம்மானம் பண்ணுவார்கள்; மரம் தன்னை வெட்டுகிறவனுக்கும் நிழல் கொடுக்கவில்லையா? சாதுக்கள் தங்கள் வீட்டுக்கு எவன் வந்தாலும் பூசிக்கிறார்கள்; குறைச்சலொன்றும் பண்ணுகிறதில்லை! எவன் அதிதியாருடைய வீட்டுக்குவந்து முகம் வாடிப் போகிறானோ, அவன், தன் பாவத்தை அவ்வீட்டு யஜமானனுக்குக் கொடுத்து அவன் புண்ணியத்தைக் கைக்கொண்டு போகிறானகையால், அவர்கள் எல்லாரிடத்திலும் தயை செய்கிறார்கள்; சந்திரன் சண்டாளன் வீட்டிலும் பிரகாசிக்கிறான்' என, இதைக்கேட்டுக் கழுகு, 'பூனை இறைச்சிகளைத் தின்னுகிறது; மேலும் கொலை செய்கிறது என்று நினைத்து இப்படி நான் சொன்னேன்' என, அதைக்கேட்டு நெடுஞ்செவியன், பூமியைத் தொட்டுச் 'சிவசிவ' வென்று உச்சரித்துக் காதின்மேற் கையை வைத்து, 'நான் தரும சாஸ்திரங்கள் கேட்டு, மிகுந்த வைராக்கியம் அடைந்து, பொல்லாத கருமங்களை யெல்லாம் விட்டுவிட்டேன். அநேக

சாஸ்திரங்களில், கொலை செய்வதுபோல வேறொரு பாதகம் இல்லையென்று சொல்லியிருக்கின்றது. எவர்கள் மற்றொருவனைக் கொன்று தங்களுக்குச் சுகத்தை விரும்புகிறார்களோ, அவர்கள் நரகத்தை யடைகிறார்கள். ஆகையால் கொலை செய்யாமலிருப்பதுபோல வேறொரு தருமம் இல்லையென்று நினைத்துக் காட்டி லிருந்துகொண்டு காய் கனி கிழங்குகளைச் சாப்பிடுகிறவர்கள், பாதகம் எப்படிப் பண்ணுவார்கள்?' என்று சொல்லிக் கழுகுக்கு நம்பிக்கை வரப்பண்ணி அதன் வீட்டில் இருந்தது. பிறகு அந்த உருத்திராக்ஷப் பூனை, பட்சிகளின் குஞ்சுகளை நாடோறும் அங்கே கொண்டுவந்து தின்றுகொண்டிருக்கத் தலைப்பட்டது. அப்போது குஞ்சிழந்த பறவைகளெல்லாம் கிலேச முற்று ஒன்றாய்க்கூடித் தங்கள் குஞ்சுகளைச் சோதிக்கத் தொடங்கின. பூனை அதையறிந்து அவ்விடம்விட்டு ஓடிப் போயிற்று. அந்தப் பக்ஷிகள் அங்கங்கே பார்த்துக் கொண்டே கழுகின் பொந்தண்டை வந்து பார்க்கையில், அக்குஞ்சுகளுடைய எலும்புகளும் சிறகுகளும் விழுந்து கிடக்கக் கண்டு, 'நம்முடைய குஞ்சுகளை இந்தத் துரோகிக் கழுகே பக்ஷித்தது' என்று நிச்சயித்து, அந்தக் கழுகைக் கொத்திக் கொன்றன. ஆகையால் ஒருவனுடைய குணந் தெரியாமலே அவனுக்கு இடங் கொடுக்கலாகாது.

### 3. 'பெரியாரைத் துணைக்கோள.'

ஒரு காட்டிற் சதுரதந்த னென்னும் அரசயானை, பல யானைகளோடு கூடிக்கொண்டிருக்கும்போது, அங்கேமழை பெய்யாமையால் ஆறு ஏரி குளம் குட்டை கசங்களெல்லாம் வற்றிப்போக, அப்போது, யானைகளெல்லாந் தாகித்துச் சதுரதந்தனைப் பார்த்து 'ஸ்வாமி! நாங்களெல்லாந் தாகத்தினாலே செத்தாற்போ லானோம்; சிலர் தண்ணீர்க் காகச் செத்தார்கள்; ஆகையால் மிகவுந் தண்ணீருள்ள

இடந்தேடிப்போ யிருப்போமானல் எல்லாருஞ் சுகமடை வோம்' என, இவற்றின் பேச்சைக்கேட்டுத் தன் மனத்தில் யோசித்து, 'இதற்கு ஐந்து நாளைப் பயண தூரத்தில் ஒரு பெரிய மடு, பாதாள கங்கையினல் நிறைந்திருக்கிறது; அங்கே போனல் எல்லோர்க்கும் மிகவுந் தண்ணீர் கிடைக் கும்' என்று இப்படி உறுதி செய்துகொண்டு, அப்படியே அங்கேபோய்த் தெளிந்த நீரைக்கண்டு அந்திவரைக்கும் ஜலக்கிரீடை செய்துகொண் டிருந்து கரையில் வந்திருந் தன. அப்போது அங்கே வாசம்பண்ணிக்கொண் டிருந்த வெகு முயல்களில், சில, யானைகளின் காலின்கீழ் அகப் பட்டு இறந்தன; சிலச்சில முயல்களுக்குக் கால் கைகள் ஒடிந்தன; சிலவற்றிற்கு உடல்கள் நொறுங்கின; சிற்சில வற்றிற்குக் குடல்கள் சரிந்தன; சிற்சில இரத்தத்தால் நிறைந்தன. இப்படிப் பொல்லாங்கு நேரிட்டவுடனே, சில முயல்கள்ஒன்ருய்க்கூடி, 'இன்றைக்கு யானைக்கூட்டம் வந்து நம்மை அழித்தது; இப்படியே தினமு மிருக்கும்; இங்கே கிட்ட வேறே தண்ணீரில்லை; இதனல் நமக்கு மீளாச் சங்கடம் நேரிட்டது. யானை தொட்டாலும், பாம்பு மோந்தாலும், அரசன் நகைத்தாலும், துர்ச்சனன் மரியாதை பண்ணினலும் உயிர்ச்சேதம் வரும்; ஆதலால், இதற்கு ஏதாவது உபாயம் யோசிக்கவேண்டும்' என, அப்போது சில முயல்கள், 'உயிரைக் காப்பாற்றும் பொருட்டுப் பூமியை விட்டுவிடலா மென்றிருக்கிறதனல் இவ்விடத்தை விட்டுவிடவேண்டும்' என, இதைக்கேட்டு வேறு சில முயல்கள், 'நம்முடைய பெரியோர்கள் வாழ்ந்த இடத்தைவிட்டு வேறிடத்திற் போகாமல், யானைகள் அஞ் சத் தக்க தந்திரம் எடுக்கவேண்டும். நஞ்சில்லாப் பாம் பும் படமெடுத்தால் அதற்கு நஞ்சு இருந்தாலும் இல்லா விட்டாலும் பயங்கரமா யிருக்கிற படத்தின் வடிவைப்

பார்த்து மனிதர்கள் பயப்படுகிறார்கள்' என, அதைக் கேட்டு ஒரு முயல், 'யானைகள் பயமுறும்படி ஒருபாயம் சொல்லுகிறேன்: விஜயதந்த னென்னும் நம்முடைய ஸ்வாமி சந்திர மண்டலத்தில் இருக்கிறான்; அவன் தூத னுப்பினானென்று ஒரு நிமித்தம் வைத்து ஒரு பொய்த் தூதனை அவர்களிடத்துக்கு அனுப்பினால் நம் காரியம் ஆகும்' என, இதைக் கேட்டவுடனே எல்லாம் அப்படியே நிச்சயித்து, நெட்டைக்காதனைப் பார்த்து, நீ சாதுரியவான்; எதிரிகளைச் சமாதானம் பண்ணுகிறவன்; ஆதலால் தூத காரியத்தில் நிபுணனாயிருக்கிறாய்; மௌட்டிய மில்லாமையும் சோம்பாமையும் பொய்யாமையும் ஊகித்தலும் தூத லக்ஷணமென்று சொன்னவற்றிற்கு நீயே வாஸ ஸ்தான மென்று நினைக்கிறோம்; ஆகையால் நீ போனால் நம்முடைய காரியம் கைகூடும். மூடத்தூதனை அனுப்பினாற் காரியங் கெட்டுப்போம்' என்று சொல்லி அதை அனுப்ப, பின்பு அது போய் யானைகள் வரும்வழியில் ஓர் உயர்ந்த மேட்டில் உட்கார்ந்திருந்து, யூதபதியைப் பார்த்துச் சொல்லுகிறது: 'அடா துஷ்ட யானையே! வெட்கத்தை விட்டு இந்த மடுவில் வந்து பலவகைப்பட்ட விளையாட்டு விளையாடுகிறாய்; ஆதலால் நான் எல்லாரையும் மடித்தெறிந்து விடுகிறேன்' என, இதைக் கேட்டு யானை, 'உன் பேச்சைக் கேட்டு நான் மிகவும் ஆச்சரியப்படுகிறேன். நீ யார்? என, முயல், 'விஜயதந்த ராஜனுடைய தூதன்; அவன் சந்திர மண்டலத்தில் இருக்கிறபடியால் சந்திரன் உன்னிடத்திற்கு அனுப்பினான்' என, இதைக்கேட்டு, 'இவன் வலியவனுடைய தூதன்' என்றெண்ணி அதைப்பார்த்து, 'சந்திரனுடைய கட்டளை என்ன?' என, பிறகு, அது, 'நீ இங்கே வந்து நாணமில்லாமற் கிரீடைசெய்து வெகு முயல்களைக்

கொன்ருய்; ஆகிலும் நான் ஒருதரம் பொறுத்தேன். இப்போது உனக்கு உயிர்மேல் ஆசையிருந்தால் மீண்டு இங்கே வரவேண்டாம்' என்று இப்படிச் சந்திரனுடைய கட்டளை யாயிருக்கிறது; அதை உனக்கு நான் சொன்னேன்; இப்போது இதற்குப் பிரத்தியுத்தரம் சொன்னுல் சுவாமி திருவடிக்கு அறிவிப்பேன்' என, யானை, 'அவனிடத்திற்கு என்னை அழைத்துக்கொண்டு போ; நான் உன் யசமானனுக்கு நமஸ்காரம் பண்ணி வேருெரு குளத்திற்குப் போவேன்' என, இதைக்கேட்டுமுயல், 'நீ தனியாய்என்னோடு கூடவா; உனக்குச் சுவாமியைக் காண்பிக்கிறேன்' என, பிறகு இரண்டும் போகையில், ஓர் ஏரியினருகே போய் முயல் யானையைப் பார்த்து, 'அந்தச் சந்திரன் தண்ணீர்க்குள்ளே வந்திருக்கிருன்; அவனை நமஸ்கரித்துவிட்டுக் கடுகெனப்போ; இல்லாவிட்டால் அவனுடைய சமாதிக்குப் பங்கம் வந்தால் அவற்கு வெகு கோபம் வரும்' என, அப்போது யானை பயந்து, சந்திர விம்பத்துக்கு நமஸ்காரம் பண்ணிவிட்டுப் போயிற்று. அது முதற்கொண்டு முயல்கள் அங்கே சுகமுற்றிருந்தன. ஆகையால், பெரியோர்களை அடுத்திருந்தால், மலைபோல வந்தவினை, பனிபோல் நீங்கும்.

---

## 4. ஒரு நரியின் தந்திரம்.

ஒரு வனத்தில் வசித்திருந்த கிரகிர னென்னும் சிங்கம், ஒரு நாள் இரைக்கு நெடுநேரம் திரிந்தும் யாதொரு பக்ஷணமுங் கிடையாமையினுற் போதுபோனவுடனே ஒரு பெருங் குகையைப் பார்த்து 'இதில் அடைகிறதற்கு யாதேனும் ஒரு பிராணி வரும்; அதைத்தின்று பசியாறலாம்' என்று தனக்குள் தீர்மானித்து, அதில் ஒளித்துக் கொண்டிருக்கையில், அக் குகையில் வசிக்கிற அவிபுச்ச

னென்னும் நரி வந்து, அங்கே சிங்கத்தின் காற்சுவடுகளைக் கண்டு சந்தேகித்து, சிங்கம் இதில் இருக்கிறதையும் இல்லாததையுஞ் சோதித்துப் பின்பு உள்ளே புகவேண்டுமென்றெண்ணிப் பிறகு தூரத்தில் நின்றுகொண்டு, 'ஓ குகையே! குகையே!' என்று இரண்டுதரங் கூவி யழைத்து, 'குகாய்! நீ என்னோடு பேசாமலிருக்கிறாய்; என்ன? உனக்கும் எனக்கும் பிரதி தினம் சம்பாஷணை நடந்துகொண்டிருந்ததே; இன்றைக்கு ஏன் நீ பேசவில்லை? விரைவாய்ச் சொல்; இல்லாவிட்டால் நான் மற்றோரிடத்திற்குப் போய்விடுவேன்' என்று சொல்லி மீண்டும் கூப்பிட்டது. அப்போது சிங்கம் நினைக்கிறது: 'இக்குகை நாடோறும் பேசிக்கொண்டிருக்கும்; இன்றைக்கு நமது பயத்தினால் அதனோடு பேசவில்லை; இதற்குப் பதிலாக நாம் உத்தரம் கொடுப்போம்' என்று ஆலோசித்து, பிரதித் தொனியினால் அங்கேயிருந்த பிராணிகளெல்லாம் திடுக்கிடும்படி அந்நரியைக் கூவ, 'அப்பா! நான் பிழைத்தேன்!' என்று வேறோரிடத்திற்கு ஓடிப்போய்விட்டது. ஆதலால், யாதொன்றையும் முன்னே ஆலோசித்துச் செய்யவேண்டும்.

---

## 5. 'பஞ்சத்திற் கிருந்து பிழை'

அயோத்தியா நகரத்தி லிருந்த சித்திராங்கனென்னும் ஒரு நாய், பஞ்சத்தினாற் சோறுகிட்டாமல் மறுதேயத்திற் சென்று ஒரு கிருஹஸ்தன் வீட்டுக்குப் போய், அவ்வீட்டுக்காரி சோறு போட்டு ஆதரித்ததனால் அன்றுமுதல் வெகு நாள் வரைக்கும் அங்கேயிருந்து, ஒரு நாள் ஸஹஜமாய் வீட்டுக்கு வெளியே வந்தது. வந்தவுடனே அவ்வூர் மற்றை நாய்கள் இதன்மேலே விழுந்து அநேகவிடத்திற் கடித்து அதன் உதிர மாம்சங்களை வெளிப்படுத்தினதனாற் சித்தி

ராங்கன்மிகவும் துக்கமடைந்து, 'என்ன பஞ்சம்வந்தாலுஞ் சுவதேசத்தைவிட்டு வரலாகாது' எனத் தனக்குள் தேறி, மீண்டு அயோத்திக்கு ஓடிவந்த மாத்திரத்தில், அதற்கு உறவாகிய நாய்கள், 'சித்திராங்கா! அத்தேயம் எப்படியிருக்கிறது?' என, சித்திராங்கன், 'அத்தேயம் செழிப்பாயிருக்கின்றது; மாதர்களும் தயாசாலிகளாயிருக்கிறார்கள்; சுஜாதி மித்திரத்துவமில்லை: ஆதலால் இவ்வவஸ்தை நேரிட்டது' என்றது.

## 6. 'நுண்ணிய கருமமும் எண்ணித் துணி'

**உச்சயினி**புரத்தில் வதிந்த தேவநாமவேதிய னென்போன் மனையோ டில்லற நடாத்துநாளிற் குழவியில்லாக் குறையாலிருவருமோர் கீரிப்பிள்ளையை மைந்தனைப்போற் கருதி வளர்ப்புழி, யொருமகவுண்டாயிற்று. அம்மதலையை யோர்நாள் தூங்குவித்துக் கணவனைப்பார்த்து, 'யா னுதகத்தின் பொருட்டுச் செல்லாநின்றேன்; நீர் நம் கான்முளையைப் பார்த்திரும்; ஓர்வேலை கீரி கடிக்கும்' என் று இங்ஙனம் வகுத்துத் தண்ணீர்க்குச் செல்ல, பின்னர் அக்குழந்தைதொட்டிலிற் கண்வளர்ந்தமை யறிந்து அவ்வந்தணனுமோர் தடாக் கரும வயத்தனாய்ப் புறஞ்செல்ல, அத்தருணத்தில் ஒரு கிருட்டின சருப்பம் பிலத்தினின்றும் புறம்போந்து தொட்டிலின்மேற் செல்லாநிற்க, அதைக்கண்ணுற்ற நகுலம், அதை யக்கணமே விரைந்துபற்றி யுதறிக் கொன்று பல கண்டம்கண்டு, குருதியாற் பூசுற்ற முகத்துடனே தன தாற்றலைக் காட்டவிரும்பி, விரைந்து துவார முகமாக வருகையில், வந்தபார்ப்பனி, செந்நீரானிறைந்த அதன் வதனத்தைப் பார்த்த வளவில், அது தன் பிள்ளையைக்கடித்து மடித்ததென் றுள்ளித் துள்ளித் துணுக்குற்று நீர்க்குடஞ் சிதையுறும்படி யதன்றலைமேற் போட்டுக்

கொன்று உடனே யுட்புகாநிற்கையில் மகனுறங்குதலையும், அருகே கரும்பாம்பின் துணிக்கைக் குவையையும் கண்டு, 'அந்தோ! கெட்டேன்! யானென் னருங் குழவியை நன் காராய் வின்றிக் கொலைசெய்தேன்!' எனச்சோகமுற்றுப் புலம்பாநிற்புழி, அவடலைவ ஞண்டெய்தி, 'குழந்தை இதோ இருக்கையில் நீ வெறுமை யென்மகவிழந்தே னென்று ஏன் கழறிக் கலுழ்கின்றனை ? என்னடி பேதாய்'! என,மனைவி'நீர் யாதோ பேரவாவால் என்மொழி தள்ளிப் போனமையால் அதன் பயனிதோ வாய்த்தது' என்று உரைத்துத்தான் பின், ஆராயாது செய்த செயல்பற்றி இரங்கினள்'

---

## 7. 'தாயிற் சிறந்தொரு கோயிலு மிலலை.'

'காசிக தேயத்தணுகிய தத்த னென்பவன் அன்னையை நோக்கி, 'யான் ஆரியன் கருமத்தா லோரூர்க்குப் போகு வல்; விடை தருதி,' என, அவ்வின்றுள், 'குழந்தாய்! ஒரு வனைய் ஏகற்க' என, கேட்டு அவன், 'தாயே! நெறி ஊறின்றி ருக்கின்றதே' என, அவள்,மீண்டும், அப்பனே! எஃதுள தாயினும் நீ நெறித்துணையின்றிச் சேறலாகாது' என்று, கூபத்திலோர் நண்டைப்பற்றி யோர் கலயத்தில் பெய்து கொடுத்து, 'இதை யேனும் துணைக்கொடுபோது' என, அவனவ்வாறே ஆய்மொழிமேற்கொண் டேகுழி, நெறியில் வேனிலால் வேசற்று ஓர் தருநிழலிற் கண்வளரா நிற்குமிடத்து, யாண்டிருந்தோ அவற்றீண்டவந்த ஓரரவு, இம்மட்கலயத்திற் பெய்திருப்ப தென்னென்று அதனுள் தலைநீட்டுகையில், அஞ்ஞெண்டு, இஃதோர் காரஅராவென் றுணர்வுற்றுக் கொடுக்கால் இடுக்கிக்கொன்றது: பின்னர் அந்தணன்விழித் தப்பணியைப் பார்த்து, 'இஃதெங்ஙன மிறந்தது?'எனச்சூழ்வுழி, அதன் சென்னியை அவ்வலவன்

சந்தரிக்கக்கண்டு, இத்துணைச்செயலு மிதுவே புரிந்தது; மாதா தந்த வழித்துணையாற் பிழைத்தேன்' 'தாயிற் சிறந்தொரு கோயிலு மில்லை' என்றது பொய்யாது:என்று, அந்நண்டைக் கைக்கொடு இல்லம் புக்கு, அன்னைக்கு அட்டாங்கம் நிலந்தோய வீழ்ந்து பணிவுதோற்றத் தழுதழுத்து வாழ்த்தி நிகழ்ந்த செயல்களை விளம்பி யின்புற்றிருந்தனன்.

## குறுமுனிவரின் பெருமுனிவு.

தேவர் எல்லாருங்கூடி யாம்சேர இருத்தலின், மேருத் தாழ்ந்து தென்றிசை உயர்ந்தது, இதற்கு அகத்தியனாரே ஆண்டிருத்தற்கு உரிய ரென்று அவரை வேண்டிக் கொள்ள, அவரும் தென்றிசைக்கட் போதுகின்றவர், கங்கையாருழைச் சென்று, காவிரியாரை வாங்கிக்கொண்டு, பின்னர், யமதக்கினியாருழைச் சென்று, அவர் மகனார் திரணதூமாக்கினியாரை வாங்கிக்கொண்டு, புலத்தியனாருழைச் சென்று அவருடன் பிறந்த குமரியார் லோபா முத்திரையாரை அவர் கொடுப்ப நீரேற்று இரீஇப், பெயர்ந்து துவராபதிப் போந்து, நிலங்கடந்த நெடுமுடி யண்ணல் வழிக்கண் அரசர் பதினெண்மரையும் பதினெண்குடி வேளிர் உள்ளிட்டாரையும் அருவாளரையும் கொண்டு போந்து, காடு கெடுத்து நாடாக்கிப் பொதியின் கண் இருந்து இராவணனைக் கந்தருவத்தால் பிணித்து ஆண்டு இயங்காமை விலக்கித் திரண தூமாக்கினியாராகிய தொல்காப்பியனாரை நோக்கி, நீ சென்று குமரியாரைக் கொண்டு வருக வென, அவரும், 'எம்பெருமாட்டியை எங்ஙனம் கொண்டு வருவல்?' என்றார்க்கு, 'முன்னாகப் பின்னாக நாற்கோல் நீளம் அகலம் நின்று கொண்டு வருக என அவரும் அங்ஙனம் கொண்டு வருவழி, வையைநீர்க்கடுகிக் குமரியாரை ஈர்த்துக் கொண்டுபோகத் தொல்காப்பியனார், கட்டளை இறந்து,சென்று, ஓர் வெதிர்ங் கோலை முறித்துநீட்ட,

பற்றி எறினர். அது குற்றமென்று அகத்தியனார் குமரியாரையும், தொல்காப்பியனாரையும் சுவர்க்கம் புகாப்பிர் எனச் சபித்தார். யாங்கள் ஒருகுற்றமும் செய்யாதிருக்க எங்களைச் சபித்தமையான் எம்பெருமானும் சுவர்க்கம் புகாப்பிர் என, அவர் அகத்தியனாரைச் சபித்தார்.

---

## XI வேனிஸ் வர்த்தகன்.

பண்டு, வேனிஸ்மா நகரத்தின் கண் ஷைலக் என்னும் அபிதானம் கொண்ட யூதவர்த்தகன் ஒருவனிருந்தான். இவன் தன் மாட்டுள்ள பொருளைக் கடும் வட்டிக் கீதலே தொழிலாக் கொண்டோன். இவன் இவ்வினையாற் சிறிது காலத்துள் பெருந்தனவந்தனாயினன். இன்னான் கண்ணோட்டம் என்பது கடுகளவு மில்லாக் கன்னெஞ்சன். ஆதலின், தான் வட்டிக்கீந்த பொருளைத் திரும்பப் பெறுங்கால், வட்டிப் பொருளில் ஒரு சிறிதும் விடாது முதலோடு சேர்த்து வாங்குவான். இதுகண்ட நல்லோர் இக்கடுஞ்செயற்காகப் பெரிதும் இவனை வெறுப்பார் ஆயினர். அக்காலத்து அந்நகரத்திலேயே; அந்தோனியோ என்ற கருணைச்செல்வன் ஒருவன் இருந்தான். இவன் ஏழைகள் மாட்டு மிக்க இரக்கம் பூண்டவன். ஆதலின் ஏழைகளுக்கு இடர்தோன்றுங்கால் அன்னார்க்குத் தன் கைப்பொருளை வட்டிக்கின்றிக் கொடுத்து, அவரைத் துன்பங்களைந்து இன்புறுத்துவானாயினன். இவ்வாறு இவரிருவரும் ஒருவர் குணத்தோடு ஒருவர்குணம் மாறுப்பட்டிருந்தமையான் ஒருவரையொருவர் வெறுப்பாராயினர். அந்நகரத்தில் அந்தோனியோவின் ஆருயிர் அன்பனான பஸ்ஸானியோ வென்னும் பிரபு ஒருவ

னிருந்தான். அவனுக்குப்பூர்வார்ஜிதம் மிதமாக விருந்தது. அதனை அவன் ஆனமுதலில் அதிகஞ் செலவிட்டமையாற் சின்னளிற் பெரிய தரித்திரத்தால் வருந்து முன்னரே, அதற்கு அந்தோனியோ அரும்பொருள் கொடுத்து ஆதரித்தனன். இவ்வாருக இவர் இருவரும் ஈருடலில் ஓர் உயிர் போல் வாழ்வாராயினர்.

இவ்வாறிருக்குங்கால், பஸ்ஸானியோ ஒருநாள அந்தோனியோவைக் குறுகி, "என தாருயிர் அன்ப! என் மிடி தீர்த்தற் கேற்றதோர் உபாயமுளது. அஃதாவது, சின்னட்களுக்கு முன்னர், அடுத்த ஊரிலுள்ள என் பிராண சிநேகியான ஒரு குலமகளின் இல்லிற்கு அவளது சுகவினமான தந்தையை நோக்குமாறு சென்றிருப்புழி, அவளது கடைக்கண் ணேக்கம் என் மேற்பட்டது. அப்பார்வையால் அவள் என்னை மணக்க மனத்துட் கொண்டுளாள் என நன்கறிவேன். அவட்கு, அவளது தந்தையின் பெரும்பொருள் முழுதும், அவருக்கு வேறு சுதர் இன்றி இறந்தமையின் வாய்க்கப் பெற்றுளது. அவளை யான் மணம் புரியின் என் மிடி நோய் தீர்ந்து இன்புற்று வாழ்வேன். அவளை மணமகளாக வரித்தற்கேற்ற செல்வம் இதுபொழுது என் மாட்டில்லாமையின் வாளா இருக்கிறேன். ஆதலின் அன்ப! நீ இதுபொழுது ஆறுயிரம் பொன் கடனுகவிந்து உதவிபுரியின், இந்நன்றியை என்றும் மறவேன்" என்றுன்.

அந்தோனியோ தன்னுருயிர்நேசனுக்கிந்து உதவக் கையிற்பணமின்மைக்கு மனத்துள் மிக்க மறுக்கம் உற்றவனுய்,

அவ்வூரிலுள்ள தனவந்தனுன ஷைலக் மாட்டுக்கேட்டுக் கடனைப் பெற்றீவதாய்ச் சொற்ருன். அவ்வாறே அவரிருவரும் அன்னுன் பக்கற் சார்ந்து பொருள் கேட்புழி, அத்தீயோன் இதுவே இவன் பழியை யொழித்தற்கேற்ற அமயம் என மனத்துட் கொண்டு, முன்னர்த் தன்னை அவன் பன்முறையும் பழித்த மொழிகளையும், எச்சலை உமிழ்ந்தமையையும், இன்னும் பலவாருகத் தன்னை ஏழைமை புரிந்தமையையும் இயம்பி, இறுதியில். "இவ்வாறு நம்மால் இகழப்பட்டோனை இது பொழுது பொருள் உதவிபுரியுமாறு கேட்டுப் போந்தீர். அவ்வாறு போந்தமைக்காக உடனே தலைதாழ்ந்து, 'தாங்கள் விழைவுற்று வந்த பொருளை இன்னே பெற்றுக்கொள்ளுங்கள், எனக் கூறட்டுமா?" என்றியம்பினுன்.

இம் மொழிகளைக் காதிற் கொண்ட அந்தோனியோ ஷைலக்கை நோக்கி, "இன்னும் பன்முறை பழிப்பேன். எச்சலும் உமிழ்வேன். நிற்குப்பொருள் தர உடன்பாடாயின் என்னை மாற்ருன் எனவே மனத்துட் கொண்டு கொடுக்க. அதற்காக எத்தகைய கடும்வட்டி கேட்பினும் கொடுப்பேன். பொருளைக் குறித்த காலத்துட்கொடுக்க ஆற்றில் அற்ரேன் ஆவேனுயின் சிறிதும் கண்ணேட்டமின்றிப் பலவாறு துன்புறுத்தியேனும் குறித்த முதலையும், வட்டியையும் கைக்கோடி" என்றியம்பினுன். இதுகேட்ட ஷைலக்," யான் நின்நட்பைப் பெரிதும் விழைகிறேன். நீ முன்னர் இயற்றிய மான பங்கத்தை ஒரு சிறிதும் மனத்துட் கொண்டேன் அல்லன். நீ விரும்பியாங்கே பொருளீந்துதவுவேன். அதற்கொருசிறிதும் வட்டி வாங்கேன்" என்ருன். உடனே அந்தோனியோ ஷைலக் கழறிய: மாற்றத்திற்கு

மனம் உவந்தான். அப்பொழுது ஷைலக் நியாயவாதிபாற் சென்று, தவணைகுறித்துப்பத்திரம் வரைதல் வேண்டுமென்றும், குறித்ததவணையிற்கடனைகப் பெற்றபொருளைக்கொடுக்கத்தவறின், அந்தோனியோவின் அங்கத்திலிருந்து ஓரிறாத்தல்ஊன் கொடுக்கவேண்டுமெனவும்,பத்திரம் பொறித்துத் தருமாறு கேட்டான்.

ஷைலக் மாற்றத்தினைக் கேட்ட பஸ்ஸானியோ அந்தோனியோவை நோக்கி, "நீ இவ்வாறு பத்திரம் எழுதிக் கொடுத்துக் கடன் பெறவேண்டாம். ஒருகால் நீ 'ஆறிடு மேடுமடுவும்போலாஞ்செல்வம் 'யானையெருத்தம்பொலியக் குடைநிழற்கீழ்ச், சேனைத் தலைவராய்ச் சென்றோரும்,ஏனை வினையுலப்ப வேறாகி வீழ்வர்' என்றவாறு பொருளை யிழந்து பின் தரித்திரத்துள் ஆழ்வையாயின், அப்பொழுது இவ் யூதன் கேட்டாங்கு ஊன் கொடுக்க நேருமன்றே? அவ்வாறு நேர்ந்திடற்கு முன்னரே இவ்வாறு செய்துகடன் பெறுமை மிக நன்றாகும்" என்று கூறினான். இருவர் சம்பாஷணையையும் அருகருந்து கேட்ட ஷைலக் "மனித மாம்ஸம் எதற்குதவும்? ஆட்டு இறைச்சியாயினும் விற்றற்கும், உண்ணற்கும் உபயோகமாகும். ஆதலின் நான் செப்புவதில் இறையளவும் ஐயம் வையாது கையொப்பமிடற்கு உடன்படின் கடன் பெறுக. இல்லையேல் இஷ்டம்போல் ஏகுக" என்றான்.

இவையெல்லாங்கேட்ட அந்தோனியோ, யூதன்மொழிகளில் ஏதமில்லை என்னும் உறுதிப்பாடுற்றுக் கையொப்பமிடக் கருதி யிருக்குங்கால், பஸ்ஸானியோ தன்னாலான மட்டும் தன் நண்பனைத் தடுக்கமுயன்றும் பயனின்றாயிற்று. இறுதியாக அந்தோனியோ யூதன் கூறியாங்குத் தீட்டப் பெற்ற பத்திரத்திற் கையொப்பமிட்டுப்பொருளைப்பெற்று,

புரையற ஈந்தமையின் தன் அன்பற் குற்றுழி உதவும் உத்தம நண்பனுயினன்.

பஸ்ஸானியோவின் கருத்திற் கியைந்த காதலியாகிய **போர்ஷியாவின்** உறைவிடம் **பெல்மாண்ட்.** அப்பட்டினம் வேனிஸின் அருகருள்ளது. அதனை நோக்கிப் பஸ்ஸானியோ தன் னன்பிற் கியைந்த அருமை நட்பாளனுய **கிரேஷியானோவுடனும்** பல பரிசனங்களுடனும் புறப்பட்டுச் சென்றுன். சென்ற அப் பெரியோன், அப்பட்டினத்திலுள்ள தன் இல்லாள் ஆவாளின் இல்லினைக் குறுகி, பெண் கேட்க வேண்டும் முறைப்படி கேட்க, போர்ஷியா ஈரொருதினத்துள் அன்னுற்குப் பன்னியாவான் உடன்பட்டனள்.

அக்கால் பஸ்ஸானியோ போர்ஷியாவின் மாட்டு, தான் அவளைத் தன்னில்லாளாகக் கோடற்கேற்ற குலநல மொன்றே கொண்டவ னன்றிச், செல்வ நலமுற்றே னன்றெனச் செப்பினுன். அது கேட்ட அச்செல்வச்சுகுணச் சுந்தரமாது மிக்கப் பணிவுடன், 'இப்பொழுது யான் கொண்டுள செல்வமும் அழகும்போற் பன்னூறு மடங்கதிகமாகக் கொண்டிருப்பின் அன்றித், தங்களைத் தலைவராய் வரித்தற்குத் தக்கவள் அல்லேன்' என்று கூறினமையோ டமையாது, இன்று தொட்டு என்னுடல் பொருளாவி யெல்லாம் தங்களுக்கே உரிமையாக்கினேன்' என்றுள்.

அளவிலா நிதியமும், அதிசய நற்குணமும் வாய்ந்த போர்ஷியா, தன்னைக் கடிமணமியற்ற உடன்பட்டமைக்காகப் பேருவகை யெய்திய பஸ்ஸானியோ, அவளைக் களிப்புறச்செய்யப் பலவாறு புகழுமாறு பன்முறை நாவெடுத்தும் அஃதியலா தாயிற்று. ஆயினும் இறுதியில் ஒருவாறு வாய் விண்டு, தனக் கவள்மேலுள்ள காதலையும், நன்றி

யறிதலையும் புலப்படுத்தி, இரண்டொரு மாற்றம் இயம்பி னன். பின்னர், அம்மாதரசி மனமகிழ்ந்தளித்த கணையாழி யைத் தான் தன்னுயிர் உள்ளவளவும் நீத்திருப்பதில்லை யென உறுதிமொழிகூறிப் பெற்றனன்.

முன்னர், கூறிய நிகழ்ச்சிகள் நிகழுங்கால், கிரேஷியா னோவும் போர்ஷியாவின் சேடியாகிய நெரிஸ்ஸாவும் அவண் அமைந்திருந்தனர். கிரேஷியானோ உடனே தம்பதிகளை வாழ்த்தி, தன்னை மணக்க விழைந்த நெரிஸ்ஸாவைத் தான் வதுவைசெய்ய வேண்டுமெனப் பஸஸானியோவை வினவி னன். முற்கூறிய இருவருக்கும் மன்றல் நிகழும் வைகலி லேயே பின்மொழிந்த இருவர்க்கும் பாணிக்கிரஹணம் பரிந் தியற்ற ஏற்பாடுகள் புரியலாயின.

இவ்வாறாக இன்னோர் குதூகலமாகச் சம்பாஷித்துக் கொண்டிருப்புழி, தூதுவன் ஒருவன் அதிபயங்கரமான விஷயமடங்கிய நிருபத்தைக் கையிற் கொண்டு அவண் போந்து, பஸ்ஸானியோவின் கையின்கண் இட்டனன். அத் திருமுகத்தைப் பெற்றுப் படித்த பஸ்ஸானியோவின் திரு முகம் தழலின் இடைப்பட்ட தளிர்போல் வாட்டமுற்றது. அதுகண்ட போர்ஷியா இத்தகைய இன்னலுறற்குக் காரண மென்னை யெனலும், "என்னுருயிர்த்துணைவி! என் னைக்கடிமணம் புரிந்து கொள்ளுமாறு உன்னையான் இரந்த அமயத்து, யான் நின்பாற் கூறிய மாற்றம் நின் நினைவை விட் டகன்றிராதென எண்ணுகின்றேன். அதனோடு சார்த் திக் கூறவேண்டும் விஷயமொன்று அப்பொழுது செப்ப மறந்தேன். அஃதென்னையெனின், நின்னை மணத்தற்கு ஏற்ற குலநலம் ஒன்றே கொண்டிருந்தவென்னைச் செல்வ நலமுற்றவனாக்கிய அந்தோனியோவெனும் என்னருமை

கட்பாளனெருவன் உளன். நான் பொருள்வேண்டுழி அவன் மாட்டுத் திரவியம் இன்மையால் ஷைலக்கிடம்பெற்றுத் தருமுன்,அப்பொருளைக் குறித்த காலத்துள் அவனுக்குத் திரும்பக் கொடுப்பதாயும், இன்றேல், தனது மார்பகத்தில் ஒரி றாத்தல் சதை அறுத்தெடுத்துக் கொள்ளச் சம்மதிப்பதாயும் கொடியதொரு நிபந்தனைப்பத்திரம் வரைந்து கொடுத்தனன்." எனச்செப்பி இலிகிதத்தைத் தன் இல்லக்கிழத்தி வயின் ஈந்தனன். அந்நிருபம் வருமாறு:

அன்புள்ள பஸ்ஸானியோ!

நான் வாணிபமியற்றித் தனமீட்டிய மரக்கலங்கள் யாவும் மூழ்கிப்போயின. ஆதலால் யூதவர்த்தகனுக்கு வரைந்து கொடுத்த பத்திரத்தின்படி கடனிறுக்க முடியாதவனாயினேன். அதன்படி என்னுயி யிழக்கவேண்டியவன் ஆகின்றேன். யான் அவனிலை அடையுமுன் உன்னைக் காணப் பெரிதும் விழைகின்றேன். என்னினும், உன் எண்ணம் எப்படியோ அப்படியே புரிக. இயற்கையாகவே என்பாலுள்ள அன்பு நின்னை இங்கு வரச்செய்யாவிடின் இக்கடிதம் அவ்வாறு செய்யாதிருப்பதாக

இங்ஙனம்,

நின்பால் அன்பு பூண்ட, அந்தோனியோ.

இந்த இலிகிதத்தைக் கண்ணுற்ற அப் பெண்மணி, தன் கண்மணி யனைய காதலனைப் பார்த்து, "எனதன்பின் இருப்பிடமாய இன்னுயிர்க் காதலரே! இதற்காக நீவிர் எட்டுணையும் வருந்தற்க. நம்மால் விழையப்பெற்ற வினையாகிய விதுவைவையை இன்னே முடித்துப் பின் அன்பருழை ஏகலாம். நமக்கு உதவிபுரிந்த அவ் வுத்தமரின் சென்னியினின்று ஒரு ரோமமும் உதிரவிடேன். அவர் இறக்கவேண்டு

வதற் கதிகமாக இருபது மடங்கு ஈந்தேனும் அவரது உயிரை மீட்பல். எனது பொருளனைத்தும் முறைப்படி உங்கட்கு உரிமையாதற்காக என்னை முன்னர் மணந்துகோடல் வேண்டும்" என்றனள். உடனே மணவினை மகிழ்வுடன் முடிந்தது.

பின்னர் பஸ்ஸானியோ,கிரேஷியானோவுடன் வேனிஸ் சென்று, அங்குத் தன்னருமை நட்பாளன் ஏமத்தின்கண் இருத்தலையும, ஷைலக் பத்திரத்திற் பொறிக்கப்பெற்ற ஆறு ஓரி ருத்தல் தசைவேண்டிப் பிடிவாதம் புரிவதையும், இவ்வழக்கை யொழிக்க அவ்வூர் நீதித் தலைவரால் ஒரு தவணை குறிக்கப்பெற்றுள தென்பதையும் அறிந்து அறிவு இழந்து இருந்தனன்.

அதன் பின்னர், போர்ஷியா தன் நாயகனது நண்பனை உயிர்வதையினின்று தப்புவிக்க வழியுண்டோவெனத் தனித்திருந்து சிந்தித்தனள். முடிவில் அவ்வாறே செய்யலாகுமெனத் தேர்ந்து, வேனிஸ் நகரத்திற்குச் செல்லுவான் புறப்பட்டவள், அந்நகரின்கண் வதியும் தன் உறவினருள் ஒருவராகிய பெலலாரியோவென்ற நியாயவாதிக்கு இது விஷயத்தைப்பற்றி அவர்க்குத் தோன்றும் உள்ளக்கிடக்கையை நிருப வாயிலாய்த் தெரிவிக்க வேண்டுமெனவும், நியாய வாதிகள் அணியும் அங்கியையும் அதனோடு அனுப்புமாறும் நிருபம் தீட்டிவிட்டனள். அவரும் அவ்வாறே புரிந்தனர்.

அவற்றைப் பெற்ற போர்ஷியா, தான் நியாயவாதி நிகரவும், நெரிஸ்ஸா இலிகிதனுகவும் புருஷீகரித்துக் கொண்டு, விசாரணை நடக்கும் நாள் வேனிஸ்நகர் சென்று, நீதிபதியிடம், தான் சுகவீனமாய் இருத்தலால் வரவியலாதென்றும், தனக்குப் பிரதியாகப் பெலதாசரை அனுப்பியிருப்பதாயும்,அவரையே நீதிவாதியாக வைத்துக்கொள்ள

வேண்டு மெனவும் வரைந்திருந்த அப் பெல்லாரி யோவின் நிருபத்தை ஈந்தனள். நீதிபதியும் அதிற் கூறியாங்கே உத்தரவளித்தனர்.

விசாரணைத் தொடக்கத்துப் போர்ஷியா, பிறர்க் கலக்கண் உறுத்தும் ஷைலக்கையும், தன்னன்பற்குற்ற துன்பத்தை யுள்ளிப் பருவரல் முகத்திற் பூண்டுள்ள பஸ்ஸானியோவையும் பார்த்தனள். மாறுவேடம் பூண்டிருத்தலால் ஏற்பட்ட வேறுபாட்டாற் பஸ்ஸானியோ தன்னுருயிர்க் காதலியை இன்னளென அறியகில்லாது, அந்தோனியோவின் அருகர் நின்று, அன்னாற்கு எத்தகைய தீங்குறுமோவென்று துக்கித்த வண்ணமே நின்றான்.

அப்பொழுது, போர்ஷியா ஷைலக்கை நோக்கி, "வேனிஸ் அரசாங்கத்தாரின் முறைப்படி உன்னால் அந்தோனியோவிடம் இருந்து தண்டம் வாங்கமுடியுமேனும், அவ்வாறு புரிதல் அழகிதன்று. பெரியோர் போற்றுமரும்பெருங் குணமாய இரக்கத்தை மனத்தில் மறவாது வைத்தலே பெருஞ்சிறப்பைப் பெறுவிக்கும்" என்று பின்வருமாறு கூறல் ஆயினள்.

* "பிறர்வற் புறுத்தப் பிறந்திடல் என்றல்
இரக்கம் என்பதன் இயல்பா காது.
விண்ணி னின்றும் மண்மீ திழியும்
இனிய மழையென இழிவதிவ் இரக்கம்
இரண்டு விதத்தினும் ஈயும் இதுநலம்.
இரங்கப் படுவோன் இரங்குவோன் என்னும்
இருதிறத் தார்க்கும் ஈதருள் புரிந்திடும்.
வலிமிக் காரிடம் வலிமைமிக் குடையது.
அரியணை மீதமர் அரசனுக் கன்னவன்
புனைமுடி யினும்மிகப் பொருத்த முடையது.
அரசன் செங்கோல் அவனியில் அவனது
ஆணையின் ஆற்றலுக் கறிகுறி யாகும்.
பயமும் மாட்சியும் பயப்பதன் பண்பாம்.

---

* அரும்பொருட்டிரட்டு.

அரசர்பால் திகிலும் அச்சமும் அதில்உறும்.
இரக்கம்இக் கோலினும் எற்றமிக் குடையது;
அரசர் மனச்சிங் காதனத் தமர்வது.
ஈசற் கே அது இயைந்த ஓர்குணம்.
நீதியோ டிரக்கமும் நிகழ்வுறுங் காலையில்
மண் இறை ஆணையும் விண் இறை ஆணை ஆம்.
ஆதலின், யூத! நீதியைப் பெறுவதே
நின்வழக் காயினும் நீநினை இதனை.
கேவலம் நியாயமே தேவன் கைக்கொளின்
நம்மவர் எவருமே நற்கதி காண்கிலம்.
இரங்கிமன் னிக்கநாம் ஈசனை வேண்டுவம்.
அதேவேண் டுகோள்நாம் அனைவரும் மற்றவர்க்
கிரக்கச் செயல்செய இனிதுகற் பிக்குமே."

அதுகேட்டாங்கிருந்த எல்லோர் மனமும், அனலிடைப்பட்ட அரக்குப்போல் உருகலாயின. அதுபொழுது, இத்தகைய மாற்றத்தினைச் செவிக்கொண்ட ஷைலக் மனது மாத்திரம் முன்னையினும் பன்மடங்கதிகமாகக் கடினமுற்றது. அவன் பத்திரத்திற் குறித்தபடி தண்டம் வாங்கவே உறுதிகொண்டான் ஆயினும் பஸ்ஸானியோ எத்துணைப் பொருளை ஈந்தேனும் தன்னன்பனைக் காப்பாற்றவே முயன்றான். ஆனால் ஷைலக் மனமிரங்கவில்லை. பிறகு அவன் நியாயவாதியிடம் சட்டத்திற்கு விபரீதப்பொருள் குறித்தேனும் அந்தோனியோவை உயிர்க்கொலையினின்று தப்பிவிக்குமாறு கெஞ்சினான். போர்ஷியா சட்டத்தை மாற்ற முயல்வது சால்பாகாது என்று சாற்றினதைச் செவியுற்ற ஷைலக், ஆநந்தவாரிதியி லாழ்ந்து, "நான் அநாதியென்றன்றே மேதாவியாகிய தானியேல் நியாயம் நிலைநிறுத்த வந்தார். ஓ! அறிவுருவெடுத்த ஐயீர்! யான் நும்மை எங்ஙனம் புகழ்வேன்! 'சிறியோரெல்லாஞ் சிறியருமல்லர்' என்றற்கு நும்மை யன்றி வேறு யாரே உதாரண

மாவார்?" என்றான். பிறகு, பெல்தாசரும் பல நியாயங்களை எடுத்து விளக்கினர். ஆனால், அவை யெல்லாங் கேட்ட ஷைலக் தனதெண்ணத்தை முற்றுவிக்கச் சித்தனாயிருந்தான். அப்போழ்து அந்தோனியோ தன்னன்பனை நோக்கி, "அன்ப! உன் கையைக்கொடு. யான் நின்பொருட்டால் இத்தகைய கஷ்டத்திற்கு உள்ளானேன் எனக் கருதற்க. நின்காதலிக்கு என் வந்தனம்கூறி, உனை யான் நேசித்ததை அவள் மாட்டுரைப்பாயாக" என, பஸ்ஸானியோ, "நின்னுதவியால் எனதுயிரினும் இனியதொரு தெரிவையை மணந்தேன். என்னுயிர், மனைவி, உலகப் பொருள் யாவும் நிற்கிணையன்று. இவற்றை யெல்லாம் நின்பொருட்டால் இன்னேயிழத்தற் கிஷ்டமுடையேன். இவற்றைப் பெற்றுக்கொண்டு அவ் யூதன் உன்னைக் கொல்லாது விடுவானாயின், எனக்கு மிகுந்த சந்தோஷம் உண்டாகும்" என்றான்.

இவ்வாறு தன் கணவன் கழறியதைக் கேட்ட போர்ஷியா, "நீ நின் காதலிமுன் இவ்வணங்கூறியிருப்பையேல் அளவிலாத்துயருற்று நின்னையும் வெறுப்பள்" என்றனள். அவ்வமயம் கிரேஷியானோ "என்னுயிரினு மரியளெனக் கருதி, என்னால் அன்பு செலுத்தப்பெறும் என் மனைவி, துறக்கமுற்று, இறைவனையேத்தி வரம் பெற்றுப்போந்து, இப்புன்னையையொத்த கொடிய யூதனது கரும்பொன்னைப் புரையும் கடுநெஞ்சத்தைக் கரையுமாறு புரிவளாயின் தற்போது அவள் துஞ்சுவது எனக்கிஷ்டம்" என, நெரிஸ்ஸா, "நன்று! நன்று!! நின் இல்லவளிங்கு இன்மையால் இவ்வண்ணம் இயம்பினை. அவள் முன்னின்று இங்ஙனம் இசைத்தனையேல் ஏற்ற தண்டனையை யேற்பை." என்றாள். ஷைலக் தன் பக்ஷமே வெற்றியுறுமென்றுன்னித் தீர்ப்புச் சொல்ல வேண்டினன். அக்கால், அந்தோனியோவின்

அதோகதியைச் சதா நினைத்துப் பலர் பதறியதைப்பற்றி நனிவ நம்மாலியலாது. போர்ஷியா, "ஷைலக்! நீ மாமி சத்தை அறுத்தெடுக்குங்கால் இரத்தஞ்சிந்தி அந்தோனியோ அநியாயமாய் இறப்பதினின்றும் தவிர்க்குமாறு ஓர் இரண வைத்தியரை அவசியம் ஈண்டுவரச் செய்க" என்றாள். அந்தோனியோவின் உயிர்நீத்து, உள்ளக்கண் உவப்புறுமாறு எண்ணுற்றிருந்த யூதன். "அவ்வாறு பத்திரத்தில் வரையப்படவில்லையே" என, அவள், "தர்மத்தை நிலைநாட்டற்கர்கவேனும் நீ இவ்வாறு இயற்றலாகாதோ?" என்றாள். ஷைலக் மறுமுறையும் முற்கூறி யாங்கே கூறினான். உடனே போர்ஷியா, "ஆம் நீ உரைப்பதுண்மையே. அந்தோனியோவின் இனிய உடலினின்று ஒரு குருத்தல் மாமிசமே நிற்குச் சேரவேண்டியது. அவ்வாறு செய்தலே சட்டசம்மதமாதலால் நீதிபதியும் அதற்குடன் பட்டனரெனக் கூறியதைக் கேட்ட ஷைலக் மனமுவந்து, கத்தியைக் கருக்காக்கி நின்றான். அதுகண்ட போர்ஷியா, "சற்றுப்பொறு யூதா! இக்கிறிஸ்தவனாகிய அந்தோனியோவின் அங்கத்திலிருந்து ஒரு துளி இரத்தம் சிந்தின், உனக்குச் சொந்தமாயுள்ள பொருள்களெல்லாம் வேனிஸ் ராஜாங்கத்தாரால் இதுபொழுதே அபகரிக்கப் பெறும்" என்றாள். இம்மாற்றத்தினைச் செவியேற்ற ஷைலக், இடியேறுண்ட உரகம்போல் அஞ்சி அலக்கணுற்றிருந்தனன்.

இத்தகைய சமயோசித யுக்தியால் அந்தோனியோவின் ஆருயிர் பொல்லாத யூதனாகிய நமன் வாயிலினின்றும் தப்புவிக்கப் பெற்றது. இங்ஙனம், யுக்தி புத்தியிற் சிறந்த முடிவு சாற்றிய நீதிவாதியாகிய போர்ஷியாவை அங்குள்ளோர் யாவரும மனத்தாலும் வாயாலும் வாழ்த்தினர்.

# செய்யுட் பாடத்துக் குறிப்புகள்.

## I. நளவெண்பா.

செய்யுள். தனி-ஒப்பற்ற. கோலம்-வராகம் (பன்றி.) அடியவற்கு-பக்தனாகிய பிரகலாதனுக்கு. வேழம்-யானை (கஜேந்திர ஆழ்வான்.) இறை-கடவுள். வராகாவதாரம் எடுத்தவனும், பிரகலாதனுக்காக நரசிங்கனாகத் தூணில் தோன்றினவனும், வேதங்களுக்கு முதல்வனும் கஜேந்திரனுமாகிய யானை, ஆதிமூலமே என்றழைக்க என்னென்றவனுமாகிய திருமால் எங்கட்குக் கடவுள் என்பது கருத்து.

2. கலாபம்-தொகை. மயில், உவமையாகு பெயராய்ப் பார்வதி தேவியை உணர்த்திற்று. மாநீற்றூர்-பெருமை தங்கிய விபூதி அணிந்தவர் (பரமசிவன்.) கழிய ஆர்த்தார்-மிகுதியாகக் கட்டினவர்.

3. காமர்-அழகு. கயல்-கயல்மீன். காவிமுகை-நீலோற்பலமலரின் மொட்டு. தளை-கட்டு. நாட்டம்-கண். சாகரம்-சமுத்திரம். (சகரகுமாரர்களால் தோண்டப்பட்டது.)

4. அலர்த்தும்-விரியச்செய்கின்ற. ஆய் இழையார்-ஆராய்ந்தணிந்த ஆபரணங்களை உடைய மாதர். ஐம்பால் (அன்மொழித்தொகை)-ஐந்துவிதமாக அமைக்கப்பெற்றது: முடி, கொண்டை, சுருள், குழல் (சுருட்டிமுடிப்பது) பனிச்சை (பின்னிவிடுவது) புலர்த்தும்-உலர்த்தும்.

5. மாவிந்த நகரில் நீதிதவறல், தளர்தல், புலம்பல், கலங்குதல் மெய்ந்நெறிவிட்டுவிலகல், என்பன இல்லை என்பது கருத்து. கஞ்சம்-தாமரையின் வெண்ணிறப்பாகம் போன்றகண் or தாளம். காரிகையார்-மாதர்.

6. வரிவளையார்-கோடுகளை உடைய வளையல்கள் அணிந்த மாதர்கள். மருங்கு-இடை. இரவு-யாசகம். கரவு-வஞ்சனை.

7. சீதம்-குளிர்ச்சியான. தாது அவிழ்-மகரந்தப்பொடி உதிர்கின்ற. தனிக்காத்தான்-பொதுவின்றி தானே முழுதும் ஆண்

டான். ஆடல் பருந்து-கொல்லும் தன்மை வாய்ந்தபருந்து. குடை வட்டம் குளிர்ச்சிகொண்டிருப்பதால் சந்திரனுக்கு உவமை.

8. ஆகள்-புழுதி. வேரிப்புனல்-தேனுகியநீர். கார்-வண்டு= கருமை—வண்டு. தொக்கு-சேர்ந்து. ஆலித்து-சப்தித்து. தூங்கு-மிகுந்த. பொழில்-சோலை.

9. நீள் நிறம்-மிகுந்த (வெண்மை) நிறம். தாள் நிறம்-அன்னத்தின் பாதநிறம்:சிவப்புநிறம். மாண்நிறத்தான்-மாட்சிமையான குணமுடைய நளன். அப்புள்=அப்பு—உள். அப்பு-நீர். முளரித்தலை-தாமரைமலரில். தலை, ஏழனுருபு. வைகும்-வசிக்கும்

10. மயங்கிற்று-வருந்தியது. வான்கிளை-பெரிய சுற்றம்.

11. அஞ்சல்-பயப்படாதே. அணி-அழகிய. வஞ்சி அனையார் வஞ்சிக் கொடியை ஒத்த மாதர். மணி-அழகிய. நடையும்-நடையினும். விஞ்சியது-மேம்பட்டது. களிவண்டு-தேனுண்டு களித்த வண்டுகள். மரண-மிகுதியாக. தார் மன்-பூமாலை அணிந்த அரசனுகிய நளன்.

12. செய்ய-சிவந்த. திரு-லக்ஷ்மிதேவி. தையல்-அழகான பெண். வெய்ய-கொடுமையான. அடுமாற்றம்-கொலையைத்தெரிவிக்கும் சொல். தடுமாற்றம்-கலக்கம்.

13. திசைமுகந்த-8திக்குகளையும் தன்னுள் அடக்கிய. கவிகை-குடை. (குவிந்திருப்பது) இசைமுகந்த-கீர்த்தியைக்கொண்ட. வசைஇல்-குற்றமில்லாத. அமை-மூங்கில். அந்தி-சுந்தரி

14. நாற்குணம்-மாதரின் நான்கு குணங்களாகிய அச்சம், நாணம், மடமை, பயிர்ப்பு. நாற்படை-நான்குவிதச்சேனை: (தேர், யானை, குதிரை, காலாள் படைகள்.) ஐம்புலன்-சப்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்தம். ஐம்பொறிகள்-மெய், வாய், கண், செவி, மூக்கு. இங்கு புலன், பொறியை உணர்த்திற்று. வதனம்-முகம். பெண்மை அரசு-பெண்தன்மை என்னும் அரசு.

15. வாமம்-அழகிய. வைகுவி-சேர்ப்பி. சேமம்(க்ஷேமம்)-இன்பத்தைத் தருகின்ற. ஒடுங்கு இடையாள்-சுருங்கிய இடையை உடையவள்.

16. தன் ஆடல்-தன்னுடைய விளையாட்டு. என் நாடல்-என்னவிரும்பினது.

17. தடம்-விசாலமான. மேல்நிலம்-தெய்வலோகம். நானிலம் பூமி. (குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் என்ற 4 நிலங்களால் ஆகியது.)

18. மறம் கிடந்த-வீரம் தங்கிய. செம்கண்மால்-சிவந்த கண்களையுடைய திருமால். அம்கண்-அழகிய இடமகன்ற.

19. வாவி-தடாகம். ஆவி-உயிர். ஆதி-ஆவாய். காவின் இடை-சோலையில். உரைத்தி-சொல்.

20. பிறைநுதல்-பிறைச்சந்திரன் போன்ற நெற்றி. அரும்ப-துளிக்க. மலர்வேய்ந்துகொள்ளும் மணம்-சுயம்வரம்.

21. வார் முரசம்-வாரிற்கட்டிய (பெரிய) பேரிகை. பைங்கமுகு—பசுமை—கமுகு. பாக்குமரம் கமுகு. கூந்தல்-பாளை. கங்கை கொழுந்து-கங்காநதியின் நீர்த்துளிகள். வேந்தர் மேல்-மேல்,ஏழனுருபு.

22. புள்உறையும்-பக்ஷிகள் வசிக்கும். தெள் அரிகண்-தெளிவான செவ்வரிபடர்ந்தகண்கள். பூமகள்-லக்ஷ்மி தேவி. பொருவேல்-சண்டைசெய்யும் வேலாயுதம்.

23. கோதை-மாலையையுடையதமயந்தி. கொற்றவன்-வெற்றியையுடைய நளன். ஏதம்-குற்றம். காட்சியார்-அறிவைஉடையவர். எய்தினர்-வந்தடைந்தார். போது-புஷ்பம். வாயிலகம்-வாசலில்.

24. கடல்தானை-சேனாசமுத்திரம். அடல்-வெற்றி. தாமம்-மாலை.

25. காவற்குடைவேந்து-நளன். விண்ணவர் கோன்-இந்திரன். ஓராது-ஆராயாமல்.

26. வச்சிரத்தால்-வலிமையான வச்சிராயுதத்தால். சிலை-வில். or மலை or ஒலி. மால்வரை-பெரியமலை. பாண்நாறும் தாரான்-இசை உண்டாகின்ற மாலையை அணிந்த நளன்.

27. தாமரைக்கே-தாமரையில்,(உருபுமயக்கம்)பொதுநோக்கு-சாதாரணமான (எவ்வித விருப்புமற்ற) பார்வை.

28. இயம்வரம்-வாத்தியமும் ஊதுகொம்பும். வளை இனம்-சங்கின் கூட்டம். வயம் மரு-வெற்றிபொருந்திய.

29. அங்கி-நெருப்பு. சங்கை அற-சந்தேகமில்லாமல். ஆகண்டலன்-இந்திரன். தருமன்-யமன். மற்ரேன்-அக்கினிதேவன். அக்கினி தேவன் நெருப்பும், வருணன் அமிருத நீரும், இந்திரன் அம்பூவும், தருமன் அணிஆடையும் நளன்வேண்டுமிடத்துப் பெறுமாறு வரமீந்தார்.

30. சயம்வரம்-சுயம் வரம். கண்டதோர் சார்பு-தோற்றுவித்ததான ஓர் இடத்தில்.

31. அரங்கு-நாடகசாலை. படாம்-திரை.(Curtain) செய்கின்ற-ஆரத்தில் இருந்து. வெய்யோன்-சூரியன். குடவயின் மேற்றிசை.

32. பூசுரர்-பிராமணர். முகிழ்ப்ப-குவியவும். புலர்ந்தது-நீங்கிற்று.

33. விழித் தாமரை-கண்களாகிய தாமரைப் புஷ்பம். மின்னிறத்து-மின்னலினது ஒளியை உடைய. செய்யதாள் சிவந்த பாதங்கள்.

34. பரிசு-தன்மை. அணங்கு-தெய்வப்பெண் போன்றதோழி. தார்-பூமாலை.

35. தெரியில்-நீ அறியவேண்டினால். பிள்ளைக்குருகு-நாரைக்குஞ்சு.

36. பேதைபுள்-பெண் (தாய்) நாரை. வள்ளை-வளப்பத்தையுடைய. கூன் இருப்பு-வளைந்த கருக்கு அரிவாள்.

37. புண்டரிகம்-தாமரைப்புஷ்பம்.பொன்ஆவம்-அழகியஅம்பறாத்துணியை.

38. கழைக் கோதையர்-மூங்கிலில் ஏறிவிளையாடும் பெண்கள். ஏய்க்கும்-ஒக்கும். மழைக்கோதை-மேகத்தை ஒத்தகூந்தல்.மானே-மான்போன்றவளே. (உவமையாகுபெயர்.)

39. காவலர்-அரசர்.(காத்தலில் வல்லவர்.) ஈரிருவர்-நால்வர். ஊசல்ஆடு-ஊசல் போல் ஆடுதலை. [சஞ்சலப்படுதல்]

40. கடிமாலை-மணமாலை. சூழ்விதியின்-சேர்ந்தவிதிக்கு. மன்னவன்-கடவுள். செம்மைசேர்;நற்குணம்வாய்ந்த.

41. காசினி-பூமியில். நறுந்தாமரை விரும்பும் நன்னுதல்-வாசனைபொருந்திய செந்தாமரைப் புஷ்பமானது விரும்புகின்ற அழகிய நெற்றியை உடைய திருமகளைப்போன்ற தமயந்தி. நன்னுதல். பண்புத்தொகை அன்மொழி.

43. ஒண்தாரை கோமாலை-ஒளிபொருந்திய கூர்மையுற்ற வச்சிராயுதத்தினுடைய தன்மைவாய்ந்த. வேலான்-வேலாயுதமுடைய நளன். குலமாலை-குலத்திற்கு மாலைபோல் அலங்காரம் செய்யும்.

45. இளமுறுவல்-புன்னகை.பொன்-லக்ஷ்மிதேவியை ஒத்த தமயந்தி. உவமையாகுபெயர்.துடிசேர்-உடுக்கைபோல் ஒடுக்கமான.

44. கணி-ஜோதிடர். அணிமொழி-அழகிய மொழியை உடைய தமயந்தி. [அன்மொழித்தொகை] அண்ணல் அவற்கும்-பெருமை பொருந்திய நளனுக்கும். பணிமொழியார்-பணிந்த சொற்களையுடைய சேடியர். குற்றேவல்-சிறுவேலைகள்.

## II. ஆசாரக்கோவை.

1. ஒப்புரவு-உலகநடையை அறிந்து செய்தல். நட்டல்-சிநேகித்தல். [நள்-பகுதி] வித்து-சாரம்.

2. வைகறையாமம்-விடியற்கால ஜாமம். முறை-ஒழுக்கு.

5. தம்முன்-தமையன். குரவர்-பெரியோர்.

7. அளை உறை.வளையில் [புற்றில்] வசிக்கின்ற. உழை-குகை. சீயம்-சிங்கம். பயின்ற-பழகின. இழுக்கம்-தவறு.

## V. குமரேச சதகம்.

1. புல்லை-திருப்புல்வயல்: [புதுக்கோட்டைக்குப் பக்கத்தில் உள்ளது] சரவணத்தான்-சரவணப்பொய்கையில் தோன்றியவன். [குமரேசன்] கா-சோலை. குஞ்சர வணத்தான்-யானைபோன்ற திருமேனி உடையவன் [விநாயகக்கடவுள்,]

2. கருணிகர்-கணக்குப்பிள்ளைகள். மதலை-குழந்தை. இச்சதகம் 'மயிலேறி விளையாடு குகனே புல்வயனீடு மலைமேவு குமரேசனே' என்பதை மகுடமாகக்கொண்டது.

3. தேகி-கொடு. நிறைவுடன்-கற்புடன். தும்பி-யானை.

4. போது—பொழுது. தேமுடல்-உயிர்கட்கு இடமாகியஉடல். இடுக்கண்-துன்பம்.

## VIII. திருக்குறள்.

3. அவையகத்து-சபையில். 4. என்னோற்றான்-என்ன தவஞ்செய்தான்.

7. யா காவாராயினும்-நம்மாற் காக்கப்படும் எல்லாவற்றையும் காக்காவிட்டாலும். சொல்இழுக்கு-சொற்குற்றம். சோகாப்பர் [ஒருசொல்]-துன்பம் அடைவர்.]

8. ஒறுத்தார்க்கு-[தமக்குத்தீங்கு செய்தோரைத்] தண்டித்தவர்க்கு. பொன்றும் துணையும்-உலகம் அழியும் அளவும்.

9. சாதலின் இன்னாதது - சாதலைப்போலத்துன்பம் தருவது. ஈதல் இயையாக்கடை-வறியோர்க்கு ஒன்று ஈதல் முடியாத வழி.

12. இன்னா செய்தாரை-தமக்குத் துன்பம் செய்தவரை.

13. கசடு-குற்றம். அதற்கு தக நிற்க-[நூல்களில்] சொல்லும் வழியால் நிற்க

14. 'எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும்' என்பது இதன் கருத்து. எண்-தருக்கம். எழுத்து-இலக்கணம்.

## XI. அறநெறிச்சாரம்.

1. ஈர்ங்குன்றம்-குளிர்ச்சி பொருந்தியமலை.

3. துணித்தாலும்-வெட்டினாலும். கூற்றம்-யமன் [உடலையும் உயிரினையும் கூறுபடுத்துபவன்.

6. அலர்கதிர்-விரிந்த கதிர்களை உடைய. அச்சு ஆணி-கடையாணி.

7. செய்தலின்-செய்தலைக்காட்டிலும். பிறர்க்கு இன்னாது என்று பெயரிட்டு-பிறர்க்குத் துன்பத்தைச் செய்வது என்று பெயர்வைத்துக்கொண்டு. பித்தும்-அறியாமையும்.

## X11 அரிச்சந்திர புராணம்,

3. காவி-நீலோற்பல புஷ்பம். அலமரும்-வருந்தும். [அலமா_ பகுதி]

4. வடம்-ஆலமரம் குறள்-குட்டிப்பிசாசு. துன்றி-நெருங்கி. குழுவின்நாப்பண்-கூட்டத்தின் மத்தியில்.

5, உலவா-குறையாத. அவம்-வீண்

6. படிஆளும் எந்தை முடியில்-(கன்னோசி) நாட்டை ஆளுகின்ற என் தந்தையாகிய மதிதயன் இறந்தால், காராளர்-வேளாளர். கடவு-செலுத்தும்.

9. கனமும்..............கரம்,-எதிர்பாராமலும் வேண்டியதையும் கொடுக்கும் கை. கனம்-மேகம். தருக்கள்-கற்பவிருக்ஷங்கள்.

10. முனிக்கு வளநாடு அளித்த கொடையார்-விசுவாமித்திர முனிவருக்கு வளமையாகிய அயோத்தி நாட்டை அளித்த அரிச்சந்திரன். இடி ஏறு-பேரிடி.

11. இயமம்-சுடுகாடு. பண்டு-பழமையில். சுடலை-சுடுகாடு.

12. வேனில்-கோடை. படிமிசை-தரைமேல். விழியருவி சொரிய-கண்ணினின்று நீர் அருவிபோற் சொரிய.

13. கொள்ளிமுறி-கொள்ளித்துண்டு. மிடறு-கழுத்து. வயங்கா நின்ற-விளங்கின.

14. வல்லை-கெட்டிக்காரி. பல்லம்-அம்பு.

16-22. அற்பு-அன்பு. ஆழி-சமுத்திரம். பொற்பு-அழகு. நிறை_சீலம். தனயன்-மகன் (லோகிதாஸ்யன்.) மின்னையும் - சந்திரமதியையும் [மின்னற்கொடி போன்றாளையும்.] அகம் -மனம்.

25. புறத்தை-[சரீரத்தின்]வெளிப் பாகத்தை. நோய்மை-துன்பம்.

26. புலையனும், உம், இழிவுசிறப்புப்பொருளது. யாக்கை-சரீரம். பிறழ்வது-தவறுவது. கலை-சாஸ்திரம்.

27. வீடு-மோக்ஷம். முரணி-மாறுபட்டு. எரிவாய், வாய்,எழனு ருபு.

38. பதி-நாடு. நிதி-செல்வம். அருந்தவன்-விசுவாமித்திரன்.

29. பசுபதி-பரமசிவன்.[ஆன்மாக்களுக்குத் தலைவன்] அலகு இல்-அளவில்லாத. இலகு-விளங்கு.

30. நீத்தம்-வெள்ளம்.புற்புதம்-குமிழி.வருந்தல்-வருந்தாதே.

## XIII. பெருமாள் திருமொழி.

1. தடாயேல்-நீக்காவிட்டால், விரைகுழவு-வாசனை பொருந்திய. வித்துவக் கோடு என்பது ஒரு விஷ்ணுஸ்தலம். அரிசினம்-மிகுந்த கோபம். குழவி-குழந்தை.

2. கொண்டான்-புருஷன். குரைகழல்-சப்திக்கின்ற கழல்களை அணிந்த திருவடிகள்.

4. மருத்துவன்-வைத்தியன். மாளாத-நீங்காத.

5. வெம் கண் திண் களிறு-கொடுமையாகியகண்களையுடைய வலியயானை. எறிகடல்-அலைகளைவீசுகின்றகடல். வங்கத்தின்கூம்பு-மரக்கலத்தின் பாய்மரம்.

6. அந்தரம்சேர்-ஆகாயத்தில் இருக்கின்ற.வெங்கதிரோற்கு-வெம்மையாகிய கதிர்களை உடைய சூரியனுக்கு. அலரா-புஷ்பிக்க மாட்டா. வீட்டாவிடினும்-நீக்காவிட்டாலும்.

7. கூழ்கள்-பயிர்கள். மைத்து எழுந்த மா முகில்-கறுத்து எழுந்த பெரிய மேகத்தை.

8. மிக்கு இலங்கு முகில் நிறத்தாய்-மிகவும் விளங்குகின்ற மேகவர்ணத்தை உடையனே.

10. கொற்றம்-வேல்தானைகுலசேகரன்-வெற்றி பொருந்திய வேலாயுதம் ஏந்திய சேனையைக் கொண்ட குலசேகரஆழ்வான். தென்னர்-சேரர்.

## XVI. மகாபாரதம்.

1. குறள் ஆய்-வாமனனாய். கார்-மேகம். மாவலி-மகாபலிசக்ரவர்த்தி. தரங்கம்-அலை. மகரம்-சமுத்திரம். பார்-உலகம். நாதனார்-தலைவர்.

2. ஓவை-உவகை. வாகை-வெற்றி. குருதி-இரத்தம். கொத்து அலர் அலங்கல்-பூங்கொத்துக்களாலாகிய புஷ்பத்தால் தொடுக்கப்பட்டமாலை. கணை-அம்பு.

3. ஆதபன்-சூரியன். சித்திரம் சிலை-அழகுபொருந்தியவில். விசயன்-அர்ச்சுனன். வெயிலவன்புதல்வன்-சூரிய புத்திரனாகிய கன்னன்.

4. தரணி-உலகம். கவனம் - துரகம். 'வேகத்தை உடைய குதிரை'. தோன்றல்-புதல்வனே.

6. பூவில்வாழ் அயனும்-மகாவிஷ்ணுவினது தொப்புள் தாமரையில் வாழ்கின்ற பிரமனும்.

7. இறைஞ்சலர்க்கு-பணியாதவர்க்கு. எழிலி-மேகம். எறு-பேரிடி. அப்பு-1 வில்; 2 நீர். அவுணன்-அரசனாகிய மகாபலி.

8. மல்லல்-பெருமைபொருந்திய. தொடை-பூமாலை(தொடுக்கப்பட்டது.) நிருபன்-அரசன். சூரன் மாமதலை-கர்னன். அல்லல்-துன்பத்தைதருகின்ற.

9. முத்தி-மோக்ஷம். மூவர்-பிர்மா விஷ்ணு உருத்திரன். 'மூவரும் ஒருவனும் மூர்த்தி' என்றது ஸ்ரீகண்ணபிரானை.

10. புணரி-சமுத்திரம். பஞ்சஆயுதம் வில், வாள், சங்கு, சக்காம் கதை. கூற்றுஉறழ்-யமனை ஒத்த. கரா-முதலை. குஞ்சரராசன்-கஜேந்திர ஆழ்வான். துளவோன்-துளசிமாலை அணிந்த ஸ்ரீ கிருஷ்ணன்.

## XV. நன்னூல்.

1. பாயிரம் இருவகைப்படும். அவை பொதுப்பாயிரமும் சிறப்புப்பாயிரமுமாம். பொதுப்பாயிரம் என்பது எல்லாநூற்கும் பொதுவாகிய பாயிரம். சிறப்புப்பாயிரம் என்பது ஒரு நூற்கே சிறப்பாய் அமைந்தது.

1. கோடல்-கொள்ளுதல். ஆசானிடமிருந்து பாடங்கேட்டல். வழிபடல் முனியான்-வழிபாடுசெய்தலை வெறுக்காதவனாகி. கலன்-பாத்திரம். ஆர்வத்தன்-ஆசை உடையவன்.

2. பயிலல்-பயிற்சி செய்தல். நுவலின்-சொன்னால். அம்மாண்பு உடையோர்-தன்னைப்போற் கற்கும் மாட்சியுற்ற உடன் மாணாக்கர். கடன்-கடமை. மடம்-அறியாமை. இக்கும்-நீங்கும்.

வசனபாகத்திலுள்ள

## அருஞ்சொல் அகராதி.

அங்கி—வஸ்திரம்
அடவி—காடு
அதிதி—விருந்தினன்
அநுஜன்—தம்பி
அந்தப்புரம்—Zenana
அரியணை—சிங்காசனம்
அலக்கண்—துன்பம்
ஆன்றோர்—பெரியோர்
இயம்பு—சொல்
இலிகிதன்—எழுத்தாளன் (Clerk)
இல்லவள்—மனைவி
இளவல்—தம்பி
இன்னே—இப்பொழுதே
உதகம்—தண்ணீர்
உத்ஸவம்—திருவிழா
உரகம்—பாம்பு
உன்னல்—நினைத்தல்
எம்பி—என் தம்பி
ஏமம்—கலக்கம்
ஒள்ளிய—பிரகாசமான
ஓது—சொல்
ஓரை—முகூர்த்தம்
கடிமணம்—கல்யாணம்
கண்ணோட்டம்—தாக்ஷண்யம்
கலுழ்—துன்பப்படு
கழறு—சொல்லு
கழுது—பிசாசு
காமுறுவர்—விரும்புவார்கள்
காரரா—கருநாகம்
கார்—மேகம்
கிருகஹஸ்தன்—இல்லறத்தன்
கிருபணன்—லோபி
குணதிசை—கிழக்கு
சவி—ஒளி
சுதர்—பிள்ளைகள்
சுரம்—பாலைவனம்
சென்னி—த…
தரு—மரம்
தாரம்—மனைவி
திருமுகம்; வதனம்—முகம்
துவட்டர்—தச்சர் (கன்னார்)
துறக்கம்—மோக்ஷம்
தேசு—சிறப்பு
நமன்—யமன்
நல்கு—கொடு
நியாய வாதி—Pleader
நீறு—விபூதி
பகுத்து—பகிர்ந்து
படிவர்—முனிவர்
பணி—வேலை
பதி—புருஷன்
பழனம்—வயல்
புடவி—பூமி
புடைத்து—தட்டி
புரைய—ஒப்ப
பௌவம்—கடல்
மந்திரம் வேதமந்திரம்; ஆலோசனை.
மடித்து—கொன்று
மறுக்கம்—மனக்குழப்பம்
மன்றல்—கல்யாணம்
மாசுணம்—பெரியபாம்பு
மிடி—தரித்திரம்
மின்னி—நினைத்து
மொக்குள்—குமிழி
மோய்—தாய்
மௌட்டியம்—மதியீனம்
யூதம்—யானைக்கூட்டம்
வடு—குற்றம்
வரையாது—வரம்பில்லாமல்
வல்லே—விரைவில்
வறிது—வீண்
வாரிதி—கடல்
விருது—வெற்றிச்சின்னம்
வேலை—வேளை
வைகல்—பகல்

---

170050

## நெ. ரா. சுப்பிரமணிய சர்மா அவர்கள்

### எழுதிய சில தமிழ்ப் புத்தகங்கள்.

---

**கோமதி கோகிலமானது**—ஆசார சீர் திருத்தங்களை வெளியிடும் இனியதொரு செந்தமிழ் நாவல். பெண்கல்வி, கற்பின் மேன்மை, நட்பின் தன்மை, பரோபகாரச் சிறப்பு முதலிய பல விஷயங்கள் கதையின் போக்கை அநுசரித்து நன்கு விளக்கப்பட் டிருக்கின்றன. விலை அணா 12.

**பாண்டியதேச நாயக்கமன்னர் வரலாறு**—பாண்டிய நாட்டைப் பரிபாலித்த நாயக்க மன்னர்களைப் பற்றிய வரலாறுகளை முறைபட எடுத்துரைக்கும் ஒரு சரித்திர நூல். அம் மன்னர்களின் பல உருவப் படங்கள் சேர்ந்தது. விலை அணா 6.

**குமணன்**—தமிழினிடத்துள்ள அபிமானத்தால் தன் உயிர்க்கொடை அளிக்கச் சித்தமா யிருந்த உத்தமனாகிய குமணனது கதையை நாடக ரூபமாக எடுத்துரைக்கும் நூல் இது. விலை அணா 6.

**கம்பர் சரித்திரம்**—கவிச்சக்கரவர்த்தியாகிய கம்ப நாட்டாழ்வார் சரித்திரத்தை ஆராய்ச்சியோடு முறைபடக் கூறும் சரித்திர நூல்; விரைவில் வெளிவரும்.

**புகழேந்திப் புலவர் சரித்திரம்**—ஆராய்ச்சியுடன் எழு தப்பெற்றது. அச்சில் இருக்கிறது.

இவையும், பிற பள்ளிக்கூடத் தமிழ் ஆங்கில புத்தகங்களும், சம்ஸ்கிருத, கிரந்த, தெலுங்குப் புத்தகங்களும், கவர்ன்மெண்ட் பதிப்புப் புத்தகங்களும் எம்மிடம் விலைக்குக் கிடைக்கும்.

**இ. மா. கோபா[illegible]ருஷ்ணக் கோன்,**

ப[illegible] வியாபாரம், மதுரை.